37680
5469872

# நான்காம் பிறை

## 1

இருட்டு விலகி மெல்ல வெளிச்சம் தோன்றிய அந்த அதி காலை வேளையில் லட்சுமி நாராயணன் மோட்டார் சைக்கிளை உதைத்தான்.

பூமியைத் தொட்டு சுழற்சி ஏற்படாத வரையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி இன்ஜின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

அப்பா படியிறங்கி வந்து தோட்டக்கதவைச் சார்த்தி அவன் பின்னே உட்கார்ந்து கொண்டார். அவன் தோட்களை பற்றிக் கொண்டார்.

வண்டி அசோக் நகரிலிருந்து மணலி நோக்கி கிளம்பிற்று.

"அரை மணி நேரத்துல போயிடுவியா."

அப்பா குரலை உயர்த்திக் கேட்டார்.

"இல்லை. அம்பது நிமிஷமாகும்."

"குளிர்ல ஸ்வட்டர் கூட போட்டுக்கலையே."

"இல்லை. பழக்கமாயிடுச்சு." அந்த மோட்டார் சைக்கிள் அசோக் நகரிலிருந்து மாம்பலம் போய் மாம்பலத்திலிருந்து அண்ணாசாலை போய், அண்ணா சாலையிலிருந்து வடக்குக் கடற்கரைச்சாலை தொட்டது.

"இதுவே இருவத்தஞ்சு நிமிஷம் ஆயிடுச்சேடா. இன்னும் இருவத்தஞ்சு நிமிஷத்துல மணலி போயிடுவியா என்ன."

"இனிமே ரோடு காலியாகத்தான் இருக்கும். டிராஃபிக் இருக்காது."

அடிக்குரலில் லட்சுமி நாராயணன் பதில் சொன்னான்.

பிள்ளையின் அகலமான தோட்களைப்பற்றிக் கொண்டு அந்த அப்பா கவலையோடு உட்கார்ந்திருந்தார்.

"தினம் தினம் இப்படித்தான் போயிட்டு வரணுமில்லை."

"ஆமாப்பா... வேற வழியில்லை."

"உன் படிப்புக்கு இதான் நல்ல வேலைன்னு நினைக்கறயா."

"இது ஒரு முக்கியமான வேலைப்பா. இன்ஸ்ட்ருமென்டேஷன் இன்ஜினியர்."

"அப்படின்னா என்ன."

"ஒரு தொழிற்சாலைக்குள்ள பல ஆயிரம். ஏன், லட்சக் கணக்கான இன்ஸ்ட்ருமென்ட்ஸ் இருக்கும். ஒவ்வொரு உபகரணத்திற்கும் ஒரு டெக்னிக் இருக்கும். அந்த உபகரணம் சரியா வேலை செய்யறதான்னு பார்க்கறது என் வேலை."

"ஒரு உதாரணமா சொல்லேன்."

"நான் வேலை செய்யறது ஆயில் ரீஃபைனரி. குருடாயில் லேர்ந்து இருவத்தேழு விஷயங்கள் பிரிச்சு எடுக்கறோம். அதை பிரிச்சு எடுக்கறதுக்கு வேற இன்ஜீனியர்ஸ் இருக்காங்க. அந்த இன்ஜீனியர்ஸ் வேலை செய்யறதுக்குண்டான உபகரணங்களை நான் மேற்பார்வை பார்க்கறேன். நிறைய வால்வ்ஸ் ஒரு ரீபைனரியில் இருக்கும். பல ஸ்டேஜஸ் இருக்கும். நீராவி எவ்வளவு வேகமா போகுது. எத்தனை கனத்துல போகுது. ஆயில் எத்தனை கனத்துல போகுது. எவ்வளவு வேகமாக போகுது. ஆயில் போகுதா, இல்லையா எவ்வளவு சூடுல இருக்கு. எத்தனை குளுரா இருக்கு. இந்த மாதிரி நிறைய விஷயங்கள் இருக்கும். ஒவ்வொன்னுக்கும் நிறைய மீட்டர் இருக்கும். இந்த மீட்டர் அத்தனையையும் மேற்பார்வை பார்க்கறதுதான் என்னுடைய வேலை.

நானே ஒரு லாரி தயாரிப்பு கம்பெனியில வேலை செய்தேன்னு வச்சுக்கோ. அதனோட இன்ஸ்ட்ருமென்ட்ஸ் வேற.



இரும்புத் தொழிற்சாலையில இருந்தேன்னு வச்சுக்கோ. அதனோட இன்ஸ்ட்ருமென்ட்ஸ் வேற. நான் ஸ்பெஷலைஸ்டு பண்ணியிருக்கற இன்ஸ்ட்ருமென்ட்ஸ் வால்வ்ஸ். பக்கத்துல பக்கத்துல நூறு குழாய் போகும். நூறு குழாயிலயும் வெவ்வேறு விஷயங்கள் போகும். அந்த குழாய்க்குள்ள போற திரவம் அல்லது வாயு அல்லது சூடான காத்து எதுவும் எந்த இடத்துலயும் ப்ளாக் ஆகக்கூடாது. லீக் ஆகக்கூடாது. கண்ணுகுத்தி பாம்பா பார்த்துகிட்டிருக்கணும். திரவம் ஒழுகினாலோ, அடைஞ்சாலோ இன்ஸ்ட்ருமெண்ட் சத்தம் போடும். கூப்பிடும். உடனே தபதபன்னு ஓடிப்போய் அது என்னன்னு பார்க்கணும். ஓடற திரவத்தை இடம் மாத்தணும். எல்லா லைனுக்கும் ஒரு பைபாஸ் வச்சருக்கோம். இது அடைஞ்சிடுச்சன்னா அது. அது அடைஞ்சிடுச்சன்னா. இது, அப்படின்னு ஒண்ணுக்கு ரெண்டா வேற வழி வச்சருப்போம். அதுல மாத்திவிட்டுட்டு என்ன பிரச்சினையோ அதை கவனிக்கணும்."

"எப்போவும் வேலை இருக்குமா."

"எப்போ வேணா வேலை இருக்கும்."

"பைப்பு தரையோட போகுமா. இல்ல... மேல பத்தடி இருவதடி உயரத்துலயும் போகுமா."

"நாப்பதடி உயரம். அறுவதடி உயரம். அந்த உயரத்துல கூட பைப் இருக்கும்ப்பா. சில சமயம் அந்த நூத்தி நாப்பதடி உயரம் சிம்னிலேயும் பிரச்சினை வரும். அப்போவும் அங்க ஏறிப் பாக்கணும்."

"எல்லாம் நீயே தான் நேர கவனிக்கணுமா. இல்லை ஆள் இருக்காளா."

"என் தலைக்கு மேல் மூணு சீஃப் இன்ஜீனியர். என் மாதிரியே இன்ஸ்ட்ருமென்டேஷன் இன்ஜீனியரிங் பாஸ் பண்ண பத்து இன்ஜீனியர். எனக்கு உதவியா ரெண்டு இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக். அப்படின்னு ஒரு பெரிய பட்டாளமே இருக்கும். கழட்டி மாட்டறதெல்லாம் மெக்கானிக் பார்த்துப்பான். அதெல்லாம் மெக்கானிக் வேலைதான். ஆனால், எப்படி கழட்டியிருக்கான். எப்படி மாட்டியிருக்கான் பார்க்கணும். அது

மட்டுமில்ல. பிரச்சினை வந்தபோது ஏன் பிரச்சினை வந்தது. எதனால பிரச்சினை, தப்பு, அப்படின்னு கண்டுபிடிச்சு அந்தப் பிரச்சினையே வராம இருக்க வைக்கறதுதான் என் வேலை."

"எப்போவும் படபடப்பா இருப்பியோ."

"அப்படியில்லை. அடைப்பு ஏற்பட்டு வெடிச்சதுன்னு வச்சுக்க, பெரிய விபத்து நடக்கறதுக்கு வாய்ப்பிருக்கு. நிறைய சேதம் ஏற்படறதுக்கு வாய்ப்பிருக்கு. குறிப்பா நாப்தா அப்படின்னு ஆயில்லேர்ந்து பிரியற விஷயம், ஒரு ஸ்டேஜ் வரைக்கும் ஆவியா இருக்கும். உள்ள புகையா இருக்கும். வெடிச்சதுன்னா பக்கத்துலயே போக முடியாது. அப்படி எவனாவது பக்கத்துல இருந்தா மூச்சுத் திணறி செத்துடுவான். இல்லை, உடம்பு பலமா காயம்படும். கண்ணு போகும், பேச்சு போகும். தலை தூக்க முடியாதபடி ஆறேழு மாசம் வாந்தி மயக்கம் இருக்கும்."

"அப்போ எப்படி அந்த விஷயத்தை சமாளிப்பீங்க."

"தப்பாவுதுன்னு வால்வ் சத்தம் கொடுக்கும். அப்பவே திசைமாத்தி விட்டுடுவான். இல்லை... நிறுத்திடுவான். அதுலயும் அசட்டையா இருந்தா லீக் ஆகும். கேட் வால்வ் திறந்து புகையை வெளிய அனுப்பும். அதுவும் அடைபட்டாதான் வெடிக்கும். இது அனேகமா நடக்காது. நடக்கவே நடக்காதுன்னு சொல்ல முடியாது."

"ரொம்ப அபாயகரமான வேலை இல்ல."

"அபாயம் எல்லா இடத்துலேயும் இருக்கு. எதுல இல்ல."

லட்சுமிநாராயணன் அலட்சியமாகப் பதில் சொன்னான்.

"எந்நேரமும் வெயில்லயே சாகணுமாடா."

"எனக்கு அப்படி இல்லைப்பா. ஏ.சி.ரூம் கொடுத்து கண்ணாடி கேபின்ல உட்கார வச்சுருக்காங்க. டெலிபோன்ல எல்லா இடம்பற்றியும் செய்திகள் வந்துகிட்டே இருக்கும். மொத்த பேக்டரியினுடைய வரைபடமும் எங்க எதிர இருக்கும். எங்க பிரச்சினை இப்படின்னு மெக்கானிக் சொன்னவுடனே அந்த



இடத்துக்கு நாங்க போயிடுவோம் அல்லது அவனே சரி பண்ணிடுவான்."

"மழை கொட்டுது. ஏர் லீக்குன்னு சொல்றான். என்ன பண்ணுவ."

"நனைஞ்சுகிட்டே ஓடணும். இல்ல, ரெயின்கோட் போட்டுகிட்டு ஓடணும். என்னப்பா இப்படி கேட்கற."

"மழை பெய்ஞ்சா, மழை பெய்யுது. அப்புறம் பார்க்கலாம்னு சொல்ல முடியுமா."

"அந்த மாதிரி வேலை இல்லைப்பா இது."

"நீ எவ்வளவு சம்பளம் வாங்கற."

"ஆறாயிரத்து ஐநூத்தி நாப்பது ரூபா."

"இந்த வேலைக்கு ரொம்ப கம்மி இல்ல."

"அப்படி சொல்ல முடியாதுப்பா. இன்னைய தேதிக்கு மெட்ராஸ் சிட்டியில இது நல்ல சம்பளம்தான். எங்க சீஃப் இன்ஜினீயருக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம். இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக்குக்கு இரண்டாயிரத்து எண்ணூத்தி அம்பது ரூபா சம்பளம்."

"இல்ல, ஒரு கல்யாணம் பண்ணி குடித்தனம் பண்றதுக்கு இது போதுமா. நல்ல இடத்துல பெண்ணு எடுக்கணும்னா என்ன எதிர்பார்ப்பாங்களோ."

அப்பா கவலையோடு பேசினார்.

"என்னைப்பத்தி பேசறியா, என் கல்யாணம் பத்தி பேசறியா."

"பொதுவா பேசறேன்ப்பா. ஒரு குடித்தனம் பண்றதுக்குண்டான சம்பளமா இல்லையேன்னு பேசறேன்."

"இது நம்ம மனசு. போனமாசம் இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக் மூணுபேர் கல்யாணம் பண்ணிகிட்டாங்க. அதுல ஒருத்தனுக்கு நல்ல பணக்கார வரனே வந்தது. என் கூட வேலை செய்யற இன்ஜீனியரும் கல்யாணம் பண்ணிகிட்டாரு. சொந்த மாமா பொண்ணையே கல்யாணம் பண்ணிகிட்டாரு."

"அவரும் இந்த மாதிரி அஞ்சரை மணிக்கு கிளம்பி ஆறே முக்கா மணிக்கு வருவாரா."

"வந்துதான் ஆகணும்."

"லட்சுமிநாராயணா எனக்கு புரியலைடா. என்னுது ஸ்டேட் கவர்மென்ட் வேலை. காலையில ஆறரை மணிக்குதான் படுக்கைவிட்டு எழுந்திருப்பேன். ஏழரை வரைக்கும் பேப்பர் படிப்பேன், அதுக்கப்புறம் பூஜை. அதுக்கப்புறம் தேடிகிட்டு வரவங்களோட பஞ்சாயத்து பேசுவேன். ஒன்பதே முக்காலுக்கு கிளம்புவேன். பத்து அஞ்சுக்கு ஆபீஸ் போயிடுவேன். போனவுடனே வேலை ஆரம்பிக்கறது கிடையாது. பத்தரை பதினோரு மணிக்கு வேலை ஆரம்பிக்கும். ஒரு மணிக்கு கையில கொண்டு வந்ததை சாப்பிட்டு அப்படி கண்ணை மூடிண்டு கொஞ்ச நேரம் சேர்லயே படுத்துண்டு இருப்போம். ரெண்டு மணிக்கு வேலை ஆரம்பிச்சா அஞ்சு அஞ்சேகாலுக்கு முடிச்சுடுவோம். அஞ்சரை மணிக்கு வெளியே கிளம்பிடுவோம். ஆறு மணிக்கு வீட்ல இடுப்பு வேட்டியும், வெறும் பனியனுமா உட்கார்ந்திருப்பேன். மறுபடியும் பேப்பர், ரேடியோ டி.வி., எதுனா பொழுது போயிடும். அரசாங்கத்துல அக்கவுண்ட்ஸ் வேலைங்கறதுனால தொந்தரவே இல்லாத வாழ்க்கைடா என்னுது. அஞ்சு பொண்ணுங்க, ஒரு புள்ள. அரசனும் ஆண்டியாகறா மாதிரி பொண்ணுக பெத்துருக்கியே அப்படின்னாங்க. இந்த நேரம் வரைக்கும் அரசனாத்தாண்டா இருக்கேன். ஆண்டி ஆகலை. அரசாங்க உத்தியோகத்து சூப்ரடெண்டாதான் கல்யாணம் பண்ணி அசோக் நகர்ல வீடும் கட்டிட்டேன். லஞ்சம் வாங்கலை. காசு திருடலை. பொண்ண பெக்கறதோ, ஆணைப் பெக்கறதோ நம்ப கையில இல்லை. பெத்ததை பேணி வளர்க்கறது நம்மகிட்ட இருக்கு."

எங்கிட்ட ஒரு கெட்ட பழக்கம்கூட இல்லைடா. ஊர்ல இருக்கற நிலம் வித்து எனக்கொரு பங்கு வந்தது. அந்தப் பங்குலதான் அசோக் நகர்ல இடம் வாங்கி வீடு கட்டினேன். நான் வீடு கட்டின இடம் மெயின்ரோடாப் போச்சு. கடைக்கண்ணிக்கு விட்டதுல இன்னும் காசு வந்தது."



அப்பா பேசிக் கொண்டே போக லட்சுமி நாராயணன் மனசு வேறுபக்கம் விரிந்தது.

ஐந்து சகோதரிகள். ஐந்து பேரும் மூத்த சகோதரிகள். வீடு முழுவதும் புடவையும், பாவாடையும், ப்ளவுஸுமாய் தொங்கிக் கொண்டிருக்கும். வீட்டில் ஒரு பெண்வாசனை மிதந்து கொண்டே இருக்கும். ஹேர்பின், நீண்டமுடி, ரிப்பன், ரப்பர் பேண்ட் என்று ஏதேனும் எங்கேனும் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். நடு ஹாலில் கையூன்றாமல் கர்ணம் அடித்தால் அத்தனை சகோதரிகளும் சுவரில் ஒட்டிக் கொண்டு கத்துவார்கள். அடிபடப்போறதுடா... என்று அலறுவார்கள். ஆனால் அந்த ஐந்து சகோதரிகளும்தான் அவனை வளர்த்தார்கள். நேரத்துக்கு உணவிட்டார்கள். கணக்கு சொல்லிக் கொடுத்தார்கள். பாடம் ஒப்புவிக்கச் சொல்லி வற்புறுத்தினார்கள். பாடவும், வரையவும், சொற்பொழிவாற்றவும் சொல்லிக் கொடுத்தார்கள். சுழற்றி வீசிய சட்டையை கொண்டு போய் கசக்கி உலர்த்தி அயர்ன் பண்ணிக் கொடுத்தார்கள். சனிக்கிழமை எண்ணெய் தேய்த்து விட்டார்கள். பரிட்சை நாளில் ராத்திரி எழுந்து டீ போட்டுக் கொடுத்தார்கள். பக்கத்தில் உட்கார்ந்து அவனை தூங்காமல் பாடம் படிக்கச் சொன்னார்கள்.

அவன் இன்ஜீனியரிங் படித்து வெளியே வரும்பொழுது எல்லோருக்கும் திருமணமாகி அவரவர் குழந்தைகளுக்கு தன் பார்வையை திருப்பிக் கொண்டார்கள். ஆனாலும், லட்சுமி நாராயணன் மீது மிகுந்த பாசத்தோடு இருந்தார்கள். ஒரேயொரு தம்பி என்று கொண்டாடினார்கள்.

ஐந்து பெண்களால் அப்பாவும் ஆண்டியாகவில்லை. அவனும் கெட்டழிந்து விடவில்லை. மாறாக அப்பாவுக்கு அவர்கள் இன்னமும் உதவிக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு மிகப் பெரிய வழிகாட்டியாய் இருந்திருக்கிறார்கள்.

சகோதரிகளை நினைத்துக் கொள்ளும்போது லட்சுமி நாராயணனுக்கு கண்ணீல் நீர் திரளும். நெஞ்சு ஒரு ஈரத்தில் நெகிழும்.

"லட்சுமி நாராயணா உனக்கு கேது இடம் மாறுறான். குருவும் வேற ஒரு கட்டத்துக்கு போறார். நீ இந்த ஊர்ல இருக்க முடியாது. ஃபாரினுக்கு போவ. உன்னை ஆட்சி பண்றது கேதுங்கறதுனால அனேகமா மிடில் ஈஸ்ட்டுக்கு போவ."

ஒரு முறை அக்கா சொன்னாள். அவள் சொல்லுகிற போது எந்தவிதமான எண்ணமும் இருக்கவில்லை.

இப்பொழுது அந்த எண்ணம் வந்திருக்கிறது.

அடையாறிலுள்ள இன்ஜீனியர் ஸ்வாமிநாதனிடம் பேசிய போது "இங்க உட்கார்ந்துண்டு என்ன பண்ணப்போறடா போ, கிளம்பிப்போ. நல்லாயிருக்கே. இங்க வேலை செய்யற அத்தனை பேர் எண்ணமும் இங்கேயே இருக்கறதில்லைடா. வெளியூருக்கு போறதுதான். மணலி ஒரு நல்ல இடம். வேலை கத்துக்கோ. உனக்கு வர்ற எல்லா ப்ராப்ளத்தையும் நீயே தனியா ஹாண்டில் பண்ணு. நீயே டிசிஷன் எடு. அது உனக்கு ரொம்ப உதவி செய்யும்."

"ஏன் ஸார் அப்படி சொல்றீங்க. எல்லா ஆபீஸ்லயும் டீம் ஒர்க்தான ஸார். கூட்டு முயற்சிதானே ஸார்."

"ஆமாம். ஆனால், வெளிநாட்டுக்கு போனா இந்த மாதிரி கும்பல் கும்பலா டேபிள்ல உட்கார்ந்துகிட்டிருக்க முடியாது. பத்துப்பேர் வேலை செய்யற இடத்துல ஒருத்தனைத்தான் வேலை செய்ய விடுவான். உனக்கு கீழே இந்த மாதிரி பதிமூணு பேரும் சரியா அமைஞ்சா பொழைச்ச. அதுல ரெண்டு தப்பா இருந்தது நீ காலி. ஒருத்தன் தப்பா இருந்தா உபத்திரவம். கூட வேலை செய்யற இன்ஜீனியருக்கு விஷயம் புரியலைன்னா உன் தலைக்கு வரும். அதனால உன் செக்ஷன்னு தனியா பிரிச்சுகிட்டு அதை ராஜாங்கம் பண்றதுக்கு கத்துக்கோ. அப்படித்தான் வெளியூர்ல நடக்கறது."

"வளைகுடா நாடுக்கு போகலாம்னு நினைக்கறீங்களா ஸார்."

"போய்த்தாண்டா ஆகணும். அதுக்குத்தான் இங்க வேலை செய்யறேன்னே உனக்கு புரியலையா."

"அம்பது டிகிரி வெய்யிலாம் ஸார்."



"உன்னை யாருடா வெயில்ல போகச் சொன்னா. ரெண்டு பக்கமும் ஏ.சி.போட்டு உட்கார்ந்துக்கோ. அப்படித்தான் இருக்காங்க."

"மைனஸ் ஃபோர் போகுதாமே."

"கம்பளி கோட் போட்டுக்கோ. ரொம்ப நல்ல சம்பளம்டா. நீ வேலை செய்து காண்பிச்சுட்ட இன்னும் நல்லாயிருக்கும். இன்னும் சம்பளத்தை ஜாஸ்தி பண்ணிடுவான். குவைத்ல கேட்கறாண்டா. ஒரு பெரிய கம்பெனி ஓபன் பண்ணப் போறான். பாதி கன்ஸ்ட்ரக்ஷன் நடந்துகிட்டிருக்கு. கன்ஸ்ட்ரக்ஷன் லெவல்லயே போ. அப்போ புரொடக்ஷன் லெவல்ல உனக்கு ஈஸியா இருக்கும்."

ஹிண்டுவில் வந்த விளம்பரத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

அந்த விளம்பரம் நான்கைந்து நாட்களாக எல்லா இன்ஜீனியர்கள் கையிலும் தவழ்ந்து கொண்டிருந்தது. இன்ஜீனியர்கள் மட்டுமல்லாது இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக்குகளும் அதில் கேட்கப்பட்டிருந்தது. தொழிற்சாலையில் பல பகுதியிலுள்ள மெக்கானிக்குகள் குவைத்துக்குப் போக ஆவல் தெரிவித்து இன்ஜீனியர்களோடு பேசினார்கள்.

அப்பாவிடம் நேற்று இதைத் தெரிவித்தபோது. 'வா, நான் வரேன். நான் வந்து சுவாமிநாதன்கிட்ட பேசறேன்' என்று சொன்னார்.

ஐந்து பெண்ணுக்குப் பிறகு பிறந்த ஒரேயொரு பையனை அவர்கள் சட்டென்று வளைகுடா நாடுகளுக்கு அனுப்புவதற்கு சம்மதிக்கவில்லை. அதேசமயம் 'நீ போகக் கூடாது. இங்கேயே இரு' என்று கட்டளையும் இடவில்லை.

வண்டி ஏறி ஐம்பத்து மூன்றாவது நிமிடம் ரீஃபைனரிக்குள் மோட்டார் சைக்கிள் நுழைந்தது. ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி தோளில் பையை மாட்டிக் கொண்டு நடக்க, நடப்பது சிரமமாக இருந்தது.

அப்பா கால் மரத்துப்போய் அப்படியே நின்றார். மெல்ல அவரை கால் உதறச் சொல்லி, கைத்தாங்கலாய் தன் கேபினுக்கு அழைத்து வந்தான்.

பல இன்ஜீனியர்கள் தத்தம் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு டீ சாப்பிட்டுக் கொண்டும், பேப்பர் படித்துக் கொண்டும் இருந்தார்கள்.

எட்டு மணிக்கு இன்னும் சில நிமிடங்கள் இருக்க எல்லோரும் வேலைக்கு தயாராக இருந்தார்கள்.

லட்சுமிநாராயணன் அப்பாவோடு நுழைய எல்லோரும் அதிசயமாகப் பார்த்தார்கள். யாரு என்று விசாரித்தார்கள். அப்பா என்று சொன்னதும் எழுந்து நின்று கை கூப்பினார்கள். கை குலுக்கினார்கள். காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள்.

"உங்களைப்பத்தி சொல்லியிருக்கார் ஸார் லட்சுமி நாராயணன். உங்களை பிரமாதமான ஃபாதர்னு கொண்டாடுவார் ஸார்."

அப்பா கூச்சத்தில் நெளிந்தார். அவன் நாற்காலிக்கு அடுத்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். மிகுந்த வியப்போடு எல்லா இடமும் சுற்றிப் பார்த்தார். கண்ணாடிக்கு வெளியே தெரிந்த தொழிற்சாலையை ஆவலாக நோக்கினார்.

"அதான் தொழிற்சாலையா."

"அதான் தொழிற்சாலை ஆரம்பம். அங்கேயிருந்து போகணும். அடுத்த கோடிக்கு போகணும்னா இருவத்தஞ்சு நிமிஷம் நடக்கணும். கார்ல போனா அஞ்சு நிமிஷம் ஆகும்."

"நீ எங்க வேலை செய்வ."

"எல்லா இடத்துலயும்."

"அந்தக் கோடியில ஏதாவது பிரச்சினைன்னா இருவத்தஞ்சு நிமிஷமும் நடந்தா போகணும்."

"இல்ல. அதுக்குன்னு பேட்டரியில ஓடற கார் இருக்கு. சின்ன கார். ஒப்பனா இருக்கும். அதுல உட்கார்ந்துகிட்டு போயிடு



வோம். பெட்ரோல் கார்ல புகை வரும். சூடு இருக்கும். பேட்டரி கார்ல அதெல்லாம் இருக்காது. ஜாக்கிரதைக்காகத் தான்."

அப்பா ஜன்னலுக்கருகே போய் வியப்பாக பார்த்தார். நூற்றுக்கணக்கான குழாய்கள் பெரிதும், சிறிதுமாக எல்லாப் பக்கமும் பரவிக் கிடந்தன.

"அங்க எங்கயோ புகை வரதுடா."

லேசான பயத்தோடு அப்பா சொன்னார்.

"நீராவிப்பா. சேஃப்டி வால்வ் ரிலீஸ் ஆயிண்டேயிருக்கு."

"அப்படி ஆகலாமா."

"அப்படி ஆயிண்டுதான் இருக்கணும். ஆகறதுதான் நல்லது. ஆகலைன்னாதான் தப்பு."

சீஃப் இன்ஜீனியர் ஸ்வாமிநாதன் வந்து அப்பாவைப் பார்த்து குதூகலத்தோடு அருகே நெருங்கினார். தழுவிக் கொண்டார்.

"உங்க கடைசி பொண்ணு கல்யாணத்துல பார்த்தது. எப்படி இருக்கேள். சௌக்கியமா" என்று கைப்பிடியாய் பிடித்துக் கொண்டு தன்னுடைய கேபினுக்குள் நுழைந்தார்.

லட்சுமிநாராயணன் அவர் கேபின் வாசலிலேயே நின்றிருந்தான்.

"உள்ள வாடா."

அவனை உள்ளே அழைத்தார்.

"எப்படி இருக்கு. ஷுகரெல்லாம் கண்ட்ரோல்ல இருக்கா."

அப்பாவிடம் அக்கறையாக ஸ்வாமிநாதன் குசலம் விசாரித்தார்.

உடல்நலம் பற்றி அவர்கள் பேசத் துவங்கினார்கள்.

"என்ன சமாச்சாரம். இவ்ளோ தூரம்."

"லட்சுமி நாராயணன் எங்கயோ மிடில்ஈஸ்ட் போறேன். குறிப்பா குவைத் போவறேங்கறான். போகலாமா, வேண்டாமான்னு கேட்கத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்."

"இதுக்கு இவ்ளோதூரம் வரணுமா. ஏண்டா.. அறிவிருக்கா, ஏன் அவரைப் போய் இப்படி இழுத்தடிக்கற. போன் பண்ணா ஒரு ஞாயித்துக்கிழமை நான் வந்துட்டுப் போறேன்."

"ரீ பைனரி பார்க்கணும்னு ரொம்ப நாள் ஆசை. எந்த மாதிரி இடத்துல பிள்ளை வேலை செய்யறான்னு தெரிஞ்சுக்கணும்னு நானே வரேண்டான்னேன்."

"வெரிகுட். இங்க செக்யூரிட்டி ஜாஸ்தி இருக்கற இடம். ரொம்ப உள்ள போக முடியாது. உங்க பிள்ளைய குவைத்துக்கு அனுப்பி வைங்க. நல்ல சம்பளம். நல்ல சம்பளம்னு சாதாரணமா சொல்லலை. பல ஆயிரக்கணக்கான சம்பளம். ட்ரெஸ் தரான். கார் தரான். பெட்ரோல் தரான். வருஷத்துக்கு நாப்பத்தஞ்சு நாள் லீவு கொடுத்து போகவர ஏரோப்ளேன் சார்ஜும் தரான். அவனுக்கு மட்டுமில்லை. குடும்பத்துல உள்ளவாளுக்கும் தரான்."

"அங்க நல்ல வெய்யிலாமே."

"இங்கயும்தான் வெய்யில். நாப்பத்திரெண்டு டிகிரி மெட்ராஸ்லயும்தான் அடிக்கறது. நாப்பத்தஞ்சு டிகிரி ஆந்திராவில கூடத்தான் இருக்கு. அங்க அம்பது டிகிரி. ஆனா, வெயில்ல எல்லாம் போய் நின்னு வேலை செய்ய வேண்டாம். அது எப்போவாவது இருக்கும். தொழிற்சாலைக்குள்ளேயே ஏ.சி. கேபின். அவன் தங்கறதுக்கு தனியா ஏ.சி.கேபின். ஏசி இல்லாத அங்க இருக்கவே முடியாது.

இங்க ஒரு வருஷத்துக்கு நூத்தம்பது ரூபா இல்ல இருநூறு ரூபா இன்க்ரிமெண்ட். இன்ஜீனியர்ஸ் கன்வேயன்ஸ் கேட்டா கொடுக்க முடியாதுன்னு சொல்றான். அதெல்லாம் தவிர ப்ரமோஷனெல்லாம் பிரச்சினை. கன்னாபின்னான்னு சலுகை கொடுத்து கெட்டிக்காரனுக்கு, வேலை செய்யறவனுக்கு வெறுப்பு தான் வெகுமதியாக கிடைக்கிறது. அலாரம் சத்தம் கேட்டவுடனே பறந்தடிச்சுண்டு போகணும். மெக்கானிக்கே போகலை. அப்புறம் நாம என்னத்துக்கு போகணும் அப்படின்னு உட்கார்ந்துடறான். இல்லப்பா, போய் பாருன்னு சொன்னாதான் போறான். இவனைப் போகச் சொல்லுங்கன்னு" அதிகாரம் வேற.



லட்சுமிநாராயணன் ரொம்ப சுறுசுறுப்பு. அவனை நம்பி வேலை கொடுக்கலாம். நாம எதிர்பார்த்ததைவிட நல்லா வேலை செய்வான். என்னடா அம்பி நீ பாட்டுக்கு அப்பாவை கூட்டிண்டு வந்துட்டியே. நீ ஷிப்ட் முடிஞ்சு போறவரைக்கும் அப்பா இருப்பாரா இங்க."

ஸ்வாமிநாதன் கவலையோடு கேட்டார்.

"இல்ல ஸார். அத்தியப்பனுக்கு நைட் ஷிப்ட்.' அவர் போறபோது அப்பாவை கூட்டிட்டு போயிடுவார். மயிலாப்பூர்ல ட்ராப் பண்ணிடுவார். மயிலாப்பூர்லேர்ந்து அப்பா போயிடுவாங்க."

"வெரிகுட். கவலைப்படாம லட்சுமிநாராயணனை குவைத் அனுப்பி வைங்க. ஒரு வருஷம் அங்கே போய் இருக்கட்டும். அந்த வேலை, அந்த அட்மாஸ்பியர். அதனுடைய வளர்ச்சி தெரிஞ்சுதுன்னு வச்சுக்கோங்க, டக்குனு ஒரு கல்யாணத்தை பண்ணிடுங்க.

பொண்டாட்டிய கூட்டிண்டு போயிடட்டும். இனிமே இந்தியாவுல படிச்சவனுக்கு வேலை கிடையாது ஸார். திறமையை காட்டி முன்னேறுகிறவன் அப்படின்றவனுக்கு இந்தியாவுல இடமில்லை."

ஸ்வாமிநாதன் டையை உறிஞ்சிக் கொண்டு அப்பாவைப் பார்த்து பேசினார்.

"இனிமே பத்தாயிரம் சம்பளம், பதினஞ்சாயிரம் சம்பளம், இருவதாயிரம் சம்பளம் இதெல்லாம் போறாது. குறைஞ்சபட்சம் ஒரு மாசத்துக்கு ஒரு ஆள் ஒரு லட்ச ரூபா சம்பாதிக்கணும். இப்போ இந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூத்தஞ்சுல இதுதான் விதி. இதுதான் நடைமுறை. இதுதான் ஜெயித்தல். ஒரு லட்ச ரூபா ஒரு மாசம் சம்பாதிச்சு நான் என்ன பண்ணப் போறேன்னு ஒரு இன்ஜீனியர் கேட்டார். செலவு பண்ணுன்னு சொன்னேன். சம்பாதி. செலவு தானா வாசல்ல உட்கார்ந்திருக்கும். கொடுக்கணும்னு தோணும். கொடுத்தோம்னா அது ரொம்ப சந்துஷ்டியா இருக்கும். அந்த சந்துஷ்டி இன்னும் அதிகம் சம்பாதிக்க வைக்கும். இன்னும் அதிகம் சம்பாதிச்சு

இன்னும் அதிகப் பேருக்குக் கொடுக்கலாம். உங்க வீடுபத்தி எனக்குத் தெரியும்."

ஸ்வாமிநாதன் நெருங்கி வந்து அடிக்குரலில் பேச ஆரம்பித்தார்.

லட்சுமிநாராயணன் அப்பா காது கொடுத்துக் கேட்டார்.

"அஞ்சு பொண்கள் எல்லாரையும் நல்லபடியா கல்யாணம் பண்ணி ஆறாவதா இருக்கிற ஒரு பிள்ளையையும் அற்புதமா படிக்க வச்சுருக்கேள். அந்தப் பெண் குழந்தைகளுக்கு குழந்தைகள் இருக்குமோன்னோ, அந்தக் குழந்தேளுக்கு நாம பண்ணணுமோன்னோ. அப்படிப் பண்ண வேண்டிய கடமை தாய்மாமனான லட்சுமி நாராயணனுக்கு இருக்கு. அனுப்புங்க ஸார் போகட்டும். போய் சம்பாதிக்கட்டும். அஞ்சு பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி கொடுத்து ஒரு வீடு வாங்கியிருக்கேள். அந்த வீட்டை இவன் பாதுகாக்க வேண்டாமா. அந்த மாதிரி இன்னொரு வீடு கட்ட வேண்டாமா. அந்த வீட்டுக்கே மாடி எழுப்ப வேண்டாமா. நிறைய செலவு இருக்கு ஸார். கல்யாணம் பண்ணிக் கொடுத்ததோட முடிஞ்சுபோச்சா. பேரக் குழந்தேகளுக்கு பண்றதுக்கு உங்களுக்குத் தைரியம் வரணும்னா நம்ம பிள்ளை பலமா இருக்கணுமில்லையா."

அப்பா "ஆமாம்" என்று தலையசைத்தார்.

"இன்னும் எவ்வளவு பண்றது அப்படின்னு உள்ளுக்குள் தோணும். இல்லை, நல்ல ஆம்பளையுடைய கடமை கடைசி வரைக்கும் நம்மள சுத்தி இருக்கற உறவுகளுக்கு உதவி செய்யறது. எல்லா மாப்பிள்ளைகளும் நன்னாயிருக்கா, உங்க வீட்டுப் பெண்களை நன்னா வச்சுண்டிருக்கா, நல்ல குழந்தைகள் பெத்து வளமா இருக்கா. அதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் நம்ம வீட்டுப் பெண்களுக்கு நம்ம பக்கத்துலேர்ந்து பத்து ரூபா காசு ஒரு மஞ்சக்கிழங்கு, ஒரு முழம் பூ கொடுத்தா அத்தனை சந்தோஷம். அத்தனை கௌரவம். என் தம்பி கொடுத்தான். என் தம்பி கொடுத்தான்னு அத்தனை அக்காவும் ஆடுவா. மஞ்சக்கிழங்கு, மல்லிகைப்பூவோட நம்மால நிக்க முடியுமா. அள்ளி கொடுக்க வேண்டாமா. அதுக்காகவே உங்க



பிள்ளையை வெளியூருக்கு அனுப்புங்கோ. வளைகுடா அற்புதமான இடம். அதுலயும் குவைத் ரொம்ப சந்தோஷமான இடம். ரொம்ப பிரச்சினையில்லை. மிரட்டல் இல்லை. வீட்டுக்குள்ளே பூஜை பண்ணிக்கலாம். வெய்யில் ஜாஸ்தி. ஆரம்பத்துல கஷ்டமா இருக்கும். அப்புறம் பழக்கமாயிரும். அது தவிர இன்னொன்னு சொல்றேன் கேட்டுக்கோங்கோ. லட்சுமி நாராயணன் மகா கெட்டிக்காரன். முன்னேறத் துடிக்கிறவன். இந்த ரீஃபைனரியெல்லாம் அவனுக்கு போறாது ஸார். ஆளுமை பண்ணணும்னு ஆசை இருக்கறவன். பெரிய பட்டாளத்தை அவனா வழி நடத்திண்டு போக முடியும். இங்க எந்த தொழிற்சாலையிலும் ஏகப்பட்ட பாலிடிக்ஸ், கெட்டிக்காரத் தனத்தைத் தவிர மத்தது எல்லாமே குவாலிபிகேஷனா இருக்கு அதனால இங்க வேலை செய்யறதுக்கு கெட்டிக்காரனுக்கு இஷ்டம் இல்லை. அதையும் தவிர இன்னொன்று சொல்றேன். லட்சுமி நாராயணன் ரொம்ப சின்சியர்."

இங்க இருவத்தொன்பது இன்ஜீனியர் இருக்கான். அங்க ஏதாவது ஒரு அலாரம் சத்தம் கேட்டுது ஒரு புகை வந்தது. உடனே தபதபன்னு தன் வீட்ல நெருப்பு பத்திண்டா மாதிரி ஓடுவான். அது,தன் ஏரியாவா, தன் வேலையான்னு பார்க்கவே மாட்டான் ஃபாக்டரி பாதிக்கப்படக்கூடாது அப்படின்னு திடமா நம்பற பையன்.

இயல்புலயே ஒரு பிரச்சினைன்னா அந்த இடத்துக்கு போகணும்னு அவனுக்கு ஆசை இருக்கு. அதெல்லாம் இன்பார்ன் குவாலிட்டி ஸார். உயிர்த்துடிப்புல இருக்கற குணங்கள். பரம்பரை பரம்பரையா ஜீன்ல இருக்கற குணங்கள். நீங்க ஒரு நல்ல பிள்ளைய பெத்திருக்கேள். நீங்க சந்தோஷமா இருக்கணும்."

அப்பா ஸ்வாமிநாதனை நோக்கி கைகூப்பினார். அவர் கண்கள் பனித்தன. திரும்பி வாஞ்சையுடன் லட்சுமி நாராயணனை பார்த்தார்.

லட்சுமி நாராயணனுக்கு உள்ளே உருகி வழிந்து ஓடியது.

ஸ்வாமிநாதனை நோக்கி கும்பிட்டான். குனிந்து கால்கள் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"எனக்கும் இவனுக்கும் சண்டை வந்திருக்கு. நான் திட்டியிருக்கேன். அவன் பதிலுக்கு கத்தியிருக்கான். ஆனாலும், இவன் கெட்டிக்காரன்றதுல எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இவன் நல்லவன்கறதுல எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. நம்ம பிள்ளை கெட்டிக்காரன். எங்க போனாலும் மேக்கடிச்சகிட்டு வந்துருவான் ஸார். கவலையேபடாத அனுப்புங்க."

அப்பா எழுந்து நின்றார். ஸ்வாமிநாதனை தழுவி கொண்டார்.

"பெத்த மனசு பித்து. அதுக்கு தன் பிள்ளையை எடை போடத் தெரியாது. என் வயசாளி ஒருத்தர் என் பிள்ளையை பெருமையா பேசறபோது எனக்கு ரொம்ப நிறைவா இருக்கு. கெட்டிக்காரனா இல்லாததுகூட பரவாயில்லை. அவனை நல்லவன்னு சொன்னீங்க பாருங்க அது ரொம்ப பெரிய வாசகம். காது முழுக்க ரொம்பிடுச்சு. மூச்சு முழுக்க நிறைஞ்சுடுச்சு. என் பிள்ளை நல்லவன். நான் பண்ண முப்பத்துநாலு வருஷத்து குடித்தனம் வீண்போகலை. இதைப்போய் என் பொண்டாட்டிகிட்ட சொல்லணும். அவகிட்ட சொன்னா அழ ஆரம்பிச்சுடுவா. அவ அப்பாவை சொல்லுவோ. அவராலத்தான் அவராலத்தான்னுவோ. நாங்க ஒரு நல்ல பரம்பரை ஸார். இது என்னுடைய கெட்டிக்காரத்தனம், நான் சொல்லிக் கொடுத்த வித்தைன்னு சொல்றதுக்கு எனக்கு மனசு ஒப்பலை. என்னுடைய மாமனார் என்னுடைய அப்பா அவா போட்ட பிச்சைதான் இந்த லட்சுமி நாராயணன். தவமிருந்து பெத்த பிள்ளைம்பாளே, இவன் தவமிருந்து பெத்த பிள்ளை. நான் கிளம்பறேன் ஸார்."

"ரொம்ப சந்தோஷம். கல்யாணத்துக்கும் அப்படியே பார்த்துண்டே இருங்கோ. இப்போ பார்க்க ஆரம்பிச்சேள்னா ஒரு வருஷத்துல நல்ல பொண்ணா பார்த்து நிச்சயதார்த்தம் பண்ணி வச்சுக்கலாம். எப்போ திரும்ப வரானோ டக்குனு கல்யாணத்தைப் பண்ணி அப்படியே ஊருக்கு பேக் பண்ணிடலாம். லட்சுமி நாராயணா அத்தியப்பன்கிட்ட சொல்லிட்டியா."

"சொல்லிட்டேன் ஸார். வந்துகிட்டே இருக்கார்."



"அத்தியப்பனும் இவன்மாதிரிதான். ஆறரை மணிக்கே டூட்டி முடிஞ்சிடும். ஆனால், போக மாட்டார். அடுத்தாள் வந்து இன்சார்ஜ் எடுத்துக்கறவரைக்கும், அவர் செட்டில் ஆகறவரைக்கும் இவர் சும்மாபோய் உட்கார்ந்துண்டிருப்பார். மணி பாருங்க ஏழரை. இப்போதான் கிளம்பறார். வேலைதான் முக்கியம், வீடு அப்புறம். இந்த மாதிரி இன்ஜினியர்ஸ் ரொம்ப கம்மி ஸார். வேலை செய்யற இடத்துலேயே தூங்கறது. வேலை செய்யாத டபாய்க்கறது. வெறுமனே கட்சி அரசியல் பேசிண்டிருக்கறது. இல்லை, ரசிகர் மன்றம் நடத்திண்டிருக்கிறது. இப்படியில்லாத, இது என் கம்பெனி. வீடு மாதிரி இருக்கற என் கம்பெனின்னு அத்தனை ஆசை ஆசையாய் வேலை செய்யற இன்ஜினியர்ஸ் ரொம்ப கம்மி. உனக்கு தெரியுமாடா. அத்தியப்பனும் குவைத் போக ட்ரை பண்றார்."

"அப்படியா ஸார். வெரிகுட்"

"என்ன வெரிகுட். எல்லாரும் கிளம்பி போயிட்டீங்கன்னா. இதை எவன்டா நடத்துறது."

"வருவாங்க ஸார்"

"ஆமாம். ரெண்டுங்கெட்டான் பசங்களா வருவாங்க. ரெக்கமண்டேஷன்ல வருவாங்க. இன்ஜினியர்னா பெரிய புடுங்கின்னு நினைச்சு வருவாங்க. ஒரு வால்வை கழட்டத் தெரியாது. மீட்டரை புரட்டிபோட்டு ரிப்பேர் பண்ணத் தெரியாது. ரின்ச்சை பிடிச்சு பைப்ப கழட்டத் தெரிஞ்சாதான் இன்ஜினியர். இல்லைன்னா மெக்கானிக் ஏய்ச்சுடுவான். உனக்கு வேலை தெரியாதுன்னு உன் காதுபட சொல்லுவான்."

லட்சுமிநாராயணனை பார்த்து ஸ்வாமிநாதன் சொல்ல அருகிலிருந்த அப்பாவும் மெல்ல நகர்ந்தார்.

வாசலில் அத்தியப்பனை சந்தித்து அத்தியப்பனை வணங்கினார். அத்தியப்பனுக்கு லட்சுமி நாராயணனை விட கூடுதலாக ஐந்து வருடம் இருக்கும்.

திருமணமாகி ஒரு பையன் அப்பொழுதுதான் பிறந்திருந்தான்:

"உள்ள கூப்பிடறாங்க. நான் கிளம்பறேன். அத்தியப்பன் ஸார் மயிலாப்பூர்ல இறக்கி விட்ருங்க. அங்கேர்ந்து ஆட்டோ பிடிச்சு அப்பா அசோக்நகர் போயிடுவார்."

அத்தியப்பன் சரி என்று மெல்லியதாய் தலையாட்டினார். தன் கார் நோக்கிப் போனார். அப்பாவுக்கு கார் கதவு திறந்து விட்டார். அப்பா உட்கார்ந்ததும், தான் ஏறி காரில் உட்கார்ந்து ரிவர்ஸ் எடுத்து வாசல் நோக்கி நகர்ந்தார்.

லட்சுமிநாராயணன் விடை கொடுக்க கார் ரீபைனரியை விட்டு வெளியே வந்தது.

"குவைத் போறீங்க போலிருக்கு."

"ஆமாம் ஸார், அப்ளிகேஷன் போட்டிருக்கேன்."

"கிடைச்சுடுமா."

"அப்ளிகேஷன் போட்டாலே கிடைச்சா மாதிரிதான். இந்த ரீபைனரியிலிருந்துதான் ஆள் கேட்கறான். எத்தனை வருஷம் சர்வீஸுன்னு பார்க்கறான். அதுக்கேத்தபடி அங்கே வேலை கொடுக்கறான். கொடுக்கற சம்பளத்தை நாம ஏத்துக்கிட்டோம்னா போய் வேலையில சேர்ந்துடலாம்."

"எவ்ளோ ரூபா சம்பளம் கிடைக்கும்."

"லட்சரூபா கொடுக்கறேன்னு சொல்லியிருக்காங்க."

"இங்க எவ்வளவு வாங்கறீங்க."

"பத்தாயிரம் ரூபா."

"அப்போ போயிட வேண்டியதுதான் இல்ல."

அப்பா பரபரத்தார்.

"போகலாம். அங்க என்ன மைனஸ் பாயிண்ட் அப்படின்னு பார்க்கணும்."

"என்ன மைனஸ் பாயிண்ட். ரெண்டு சம்பளத்துக்கு நடுவுல தொன்னூறு ஆயிரம் இருக்கே."

"அது பார்த்தா போறுங்களா. தமிழ்நாட்டுல இந்த இடத்துல வேலைக்கு சேர்ந்துட்டோம்னாக்க ரிடையர் ஆகறவரைக்கும் யாரும் அசைக்க முடியாது. இந்த வேலையிலேயே நிம்மதியா



இருக்கலாம். நாம போறது குவைத். அங்க எதுனா பிரச்சினை வந்ததுன்னா டப்புன்னு ஊருக்கு அனுப்பிடுவான். இங்க வந்து மறுபடியும் எங்க போய் ஜாயின் பண்றது. என்னாவா ஜாயின் பண்றது."

"அப்போ வேலை நிரந்தரமில்லைன்றீங்களா."

"அப்படித்தான். நாம நல்லா வேலை செய்தா அதனால மட்டுமே வேலை நிரந்தரமாயிடாது. அந்த ஊர்லயும் கலவரம் வந்து வார் வந்ததுன்னா பிரச்சினை ஆயிடும். போன தடவை யுத்தம் வந்து நிறைய இந்தியர்கள் வெளிய வந்துட்டாங்க. போட்டது போட்டபடி வந்துட்டாங்க. நிறைய பேருக்கு நஷ்ட மாயிடுச்சு. அப்படியும் நேரலாமில்லையா. அந்த ஒரு ரிஸ்க் இருக்கு. இதைத்தவிர வேற ஒண்ணு."

"வேற என்ன."

"வெய்யில் ஸார். ஏண்டாப்பா வந்தோன்ற மாதிரி பண்ணிடுமாம்."

"அதுக்கப்புறம்?"

"நம்மூர்ல வேலை செய்யறமாதிரி வருமா. எங்கயோ உட்கார்ந்துட்டு தமிழ்நாடு... தமிழ்நாடு... தமிழ்நாடுன்னு பேசிட்டிருப்போம். பழைய பேப்பரை புரட்டி புரட்டி படிச்சுகிட்டிருப்போம். அப்பா. அம்மா. தங்கச்சி.. தம்பி எல்லாரையும் விட்டுட்டு போகணும். ஒய்ஃபை கூட்டிட்டு போகலாம். பையனை கூட்டிட்டு போகலாம். எல்லாரையுமா கூட்டிட்டு போகமுடியும். ஒய்புஃக்கே இது பிடிக்குமா. இந்த ஊர் தாங்குமான்னு தெரியலை. ஒய்ஃப் வரலைன்னு வச்சுக்கோங்க. அப்போ வாழ்க்கை அத்தனை ரம்மியமா இருக்காது. நாமளே சமைச்சு, நாமளே சாப்பிட்டு, நாமளே தட்டுகழுவி, நாமளே படுக்கை தட்டி போட்டு, நாமளே நம்ம துணியை துவைச்சு, கல்யாணம் கட்டி, குழந்தை பெத்து மறுபடியும் பேச்சுலர் லைஃபுங்கற போது ஒரு உதறல் இருக்கத்தான் செய்யுது."

"குவைத்போறது நல்லதுங்கறதுக்கு வேற ஏதாவது காரணம் இருக்குங்களா. காசு தவிர."

"அம்பது வயசுல ரிடையர்ட் ஆயிடலாம் ஸார்."

அத்தியப்பன் லட்சுமிநாராயணனின் தந்தையை திரும்பிப் பார்த்து மறுபடியும் சாலை பார்த்து வண்டி ஓட்டினார்.

"எனக்கு இப்போ முப்பத்திரெண்டு வயசு. இன்னும் பதினெட்டு வருஷம் வேலை செய்தா போதும். சேலத்துல வீடு கட்டி, சின்னதா நிலம் வாங்கி பழத்தோப்போ, தென்னந் தோப்போ போட்டு செட்டில் ஆயிடுவேன். ஏதாவது ஒரு இரும்புக் கம்பெனியில, பெரிய பட்டறையில கன்சல்டண்டுனு உட்கார்ந்துட்டு வாரத்துக்கு மூணுநாள் வேலைக்கு போயிட்டு நிம்மதியா காலத்தை கழிப்பேன். அம்பத்தெட்டு வயது வரைக் கும் நெஞ்சை பிடிச்சுகிட்டு வேலை செய்ய வேணாம் ஸார். சீக்கிரம் ரிட்டயர்ட் ஆயிடணும். பொண்டாட்டியோட அதுக்கப் புறம் ஊர் ஊரா போகணும். பிறகு பேரன் பேத்திய பார்த்துட்டு அமைதியா இருந்துடணும்தான் எனக்கு ஆசை. இந்த சம்பளத் துல அப்படி வாழ முடியாது. அம்பத்தெட்டு வயசு வரைக்கும் நீங்க சம்பாதிச்சாலும் சேர்க்க முடியாது."

"அங்க செலவும் இருக்குல்ல."

"அதிகமா இருக்காது ஸார். சாப்பாட்டு செலவு மட்டும்தான். துணிமணி செலவுதான். வீடு, கார், பெட்ரோல் எல்லாம் கம் பெனி செலவு. குவைத்துக்கு வேலைக்குபோய் ஒரு வருஷம் கழிச்சுதான் இந்த மாதிரியான வசதிகளெல்லாம் கிடைக்கும்."

"நம்மாட்கள் அங்க இருக்காங்களா ஸார்."

"இருக்காங்க. மலையாளிஸ் அதிகம்இருக்காங்க."

"ஒர்க்கர்ஸா."

"ஷாப் கீப்பர்ஸா இருக்காங்க. இன்ஜீனியர்ஸ் நம்மாளுங்க தான். அங்க வார் முடிஞ்சு மறுபடியும் புதுசு புதுசா ரீ பைனரிஸ் ஆரம்பிக்கிறாங்க. அதுவும் ஃபாரின் கொலாப்ரேஷனோட ரீ பைனரிஸ் நிறைய ஆரம்பிக்கறான். நம்மாளுங்களுக்கு நிறைய வேலை இருக்கு ஸார். குவார்ட்டர்ஸ் கட்டிகிட்டே இருக் கானாம். அவன் கட்டற குவார்ட்டஸ் பார்த்தா குறைந்தபட்சம் ஆயிரம் இன்ஜீனியர்ஸ் குவைத்துக்குள்ள இறங்குவாங்கன்னு தோணுது."



"வீட்லேர்ந்து வேலைக்கு போற இடம் ரொம்ப தொலைவா இருக்குமோ. இப்போ வரான் பாருங்க. அசோக் நகர்லேர்ந்து மணலிக்கு அந்த மாதிரி இருக்குமா."

லட்சுமிநாராயணன் அப்பா கவலையாகக் கேட்டார்.

"லட்சுமிநாராயணனுக்கு கொஞ்சம் தொலைவா இருக்கும். எனக்கு சிட்டிக்குள்ளேயே ஆபிஸ்."

"ஏன்."

"நான் டிஸைனர். அடுத்தபடி எப்படி ஆயில் ரீஃபைனரி கட்டறது அப்படின்னு கம்பெனிக்கு ஆலோசனை சொல்றவன் அல்லது யாராவது கட்டறேன்னு வந்தாக்க அவனை கேள்வி கேட்டு அவனுடைய யோக்யதையை கம்பெனிக்கு சொல்ற வன். அவன் சொல்ற விலையை குறைக்கறதுக்கு ட்ரைபண்ற வன். என் வேலைகளெல்லாம் ஏ.சி.ரூமுக்குள்ளதான்."

"ரொம்ப பொறுப்பான வேலையில்ல."

"ஆமாம். நாம சொல்றதுலதான் நம்ம கம்பெனி தலை யெழுத்தே இருக்கு. ஒரு தடவை நாம சொல்லி ஒரு சின்ன விஷயம் தப்பாயிடுச்சுன்னா நீ போயிட்டு வா அப்படின்னு உடனே அனுப்பிடுவான். ஒரு சின்ன தப்பு ஒரு தடவை கூட செய்யாத கண்குத்திப்பாம்பா வேலையில இருக்கணும். அதான் அவங்க ஆசைப்படுவாங்க. அதை சரியா செய்துட்டோம்னா நல்லா வச்சுப்பாங்க."

"நல்லா வச்சுப்பாங்கன்னா."

"தடுக்தடுக்குனு இன்க்ரீமெண்ட் கொடுத்துடுவான் ஸார்."

"இது உங்களுக்கு எப்படிதெரியும்."

"சொல்லியிருக்காங்களே. எனக்கு தெரிஞ்ச ஒருவர் குவைத் போனாரு. ஒரு இட்டாலியன் டர்பைன் கம்பெனி வந்தது. அது என்ன ஏதுன்னு அக்குவேறா ஆணிவேறா அவங்க சொல்ற ப்ளானை பிரிச்சுப் போட்டு பார்த்து. அதுக்குண்டான குறையை கண்டுபிடிச்சு அவங்க போடற காசுக்கு வேற ஒரு காசு போட்டு அதை முதல்ல யாரு ஓனரோ அவங்கிட்ட சொல்லிட்டு அவன் சரின்னு சொன்னவுடனே அந்த இட்டாலியன்கிட்ட பேசி அந்த

இட்டாலியன் சொன்னதைவிட ரொம்ப குறைச்சலான விலையில அந்த காண்ட்ராக்டை முடிச்சு, ப்ராப்ளம் வரபோது இவரே அந்த ப்ராப்ளத்தை ஸால்வ் பண்ணி அந்த இட்டாலியன் கம்பெனியே எங்ககூட வந்துடறியான்னு இவர கேட்கற அளவுக்கு. இவரை பாராட்டற அளவுக்கு நடந்துகிட்டாரு. ஒரு லட்சம் சம்பளம் ரெண்டு லட்சம் ஆயிடுச்சு."

"என்ன."

"ஆமாம். டபுள் ஸேலரி."

"நிஜமாவா."

வியப்போடு லட்சுமிநாராயணன் அப்பா பார்த்தார்.

"அதான் ஸார் ஃபாரின் கம்பெனி. இங்க இருக்கற ரீபைனரி கம்பெனிக்கும், அங்க இருக்கற கம்பெனிக்கும் அதான் வித்தியாசம். அவனுக்கு பிடிச்சு போச்சு, டபுள் தி ஸேலரி."

"எப்படி ஸார். எப்படி மனசு வந்து கொடுக்கறான்."

"அவர் ஏற்படுத்தின லாபம் நாப்பது கோடி ரூபா."

"கூட ஒரு லட்சம் கொடுத்தா என்ன ஸார் குறைஞ்சு போகுது அவனுக்கு. நாப்பது கோடி ரூபா லாபம் காண்பிச்சு கொடுத்திருக்கார்னா இதைவிட இன்னும் அதிகமா இல்ல கொடுக்கணும்."

"வாஸ்தவம்தான். கொடுத்திருக்கான் ஸார். இப்போ எங்கயோ உச்சாணிக்கிளையில இருக்கார். சாப்பாடு செலவு விருந்து செலவு துணிமணி செலவு எல்லாமும் கொடுத்திருக்கான்."

"அப்படியா.."

லட்சுமிநாராயணன் தந்தை வியந்தார்.

"அது தவிர அறுவது நாளைக்கு ஒரு தடவை மெட்ராஸுக்கு ஒய்ஃபோட போய்ட்டு வரலாம். ரெண்டு டிக்கெட் ஃபர்ஸ்ட் க்ளாஸ்ல கொடுத்திருக்கான்."

"அடிச்சக்கை.."

லட்சுமி நாராயணன் அப்பா துள்ளி குதித்தார்.



"அவனுக்கும் ஏ.சி.ரூம்லதான் வேலையிருக்குமோ" என்று வியப்பாகக் கேட்டார்.

"ரெண்டு இடத்துலயும் இருக்கும். காலங்கார்த்தால கிளம்பி என்ன வேலை நடந்திருக்கோ அந்த இடத்துக்குப்போய் இன்ஸ்பெக்ட் பண்ணிட்டு வெய்யில் ஏறபோது ஏ.சி.ரூமுக்கு வந்துடுவாரு. திருப்பி சாயந்தரம் வெய்யில் தாழ போவாரு அல்லது நைட் ஷிப்ட் பாப்பாரு. இதுல இன்னொரு சௌகரியம் ஸார்."

"என்னது."

"ஏழு மணிக்கு போயிட்டு ஒரு மணிக்கு திரும்பிடலாம் ஸார். ரெண்டு மணிக்கு வீட்ல சாப்டுட்டு படுத்து தூங்கிடலாம்."

"இன்ஜீனியர்ஸுக்கு மட்டும் அப்படியா, எல்லாருக்கும் அப்படித்தானா."

"இன்ஜீனியர்ஸுக்கு அப்படி. மத்தவங்களுக்கு கொஞ்சம் கூடுதலா, ஒரு ஒன்றரை மணி நேரம் கூடுதலா இருக்கும். ஒர்க்கர்ஸும் ரெண்டரை மணிக்கு திரும்பிடலாம். வந்தவுடனே தூங்கிடுவாங்க எல்லாரும்."

"வீட்ல கூட்டிண்டு போறேளா."

"எப்படி ஸார். இப்போதான் குழந்தை பொறந்திருக்கு. உடனே கூட்டிட்டு போக முடியாது ஸார். கூட்டிட்டு வந்துடுங்க நல்லதுன்னு அந்த இன்ஜீனியர் சொல்றாரு. நான் ஒரு வருஷம் பொறுத்துதான் கூட்டிட்டு வருவேன்."

"ஸார். அங்க போனா என் பிள்ளை லட்சுமி நாராயணனை பார்த்துக்குங்க ஸார்."

அப்பா கைகூப்பினார்.

அத்தியப்பன் சிரித்தார்.

"நான் கேட்கறேன். இந்த கேள்வியை நீங்க லட்சுமி நாராயணன்கிட்ட சொல்லுங்க. அங்க போனா எனக்கு கூடமாட ஒத்தாசையா இருக்கச் சொல்லுங்க லட்சுமிநாராயணன் மாதிரி ஒரு இன்ஜீனியர் பக்கத்துலே இருந்துட்டா கவலையே கிடை

யாது. என்ன கொஞ்சம் பரபரப்பு. பேசறபோது கொஞ்சம் வேக மான வார்த்தைகள் வரும். அதை குறைச்சுக்கிட்டா நல்லது."

"அசிங்கமாவா பேசறான்."

"வயசு. நல்லா செய்யணும்கற ஆவல். யாராவது தப்பு பண்ணா முட்டாள் அப்படின்னு ஆரம்பிப்பாரு. ஒர்க்கர்ஸுக்கு அது அவ்ளோ பிடிக்காது. கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. நல்ல வார்த்தைகள் இருக்கும்போது கெட்ட வார்த்தைகள் பேசினா... 'தம்பி.. தப்பு பண்ற. இன்னொரு தடவை தப்பா பண்ணா வீட்டுக்கு அனுப்பிடுவேன்னு' சொன்னா போறுமே. முட் டாள்னு சொல்லி சொல்லணுமா. அது மட்டும் கொஞ்சம் கவனமா இருக்கச் சொல்லுங்க."

"சொல்றேங்க."

"ஒண்ணு பண்ணுங்களேன்."

"என்ன அத்தியப்பன்."

"நீங்களும் வந்துருங்களேன்."

"எதுக்கு."

"அங்க எங்களோட ஜாலியா இருங்களேன்."

"என்னால மெட்ராஸை விட்டு வரமுடியாதய்யா. அது என்னமோ இந்த மாம்பலம் அசோக்நகர்லயே மனசு அழுத்தி கிட்டிருக்கு. அயோத்யா கல்யாண மண்டபத்துக்கு போய் சாயந்தர வேளையில் உட்கார்ந்தாதான் மனசு நிம்மதி ஆவறது. ஏதாவது கதை, ஏதாவது பாட்டு நடந்துண்டே இருக்கா. சாயந் தரம் ஆனா பாட்டு கேட்கலாமா, கதை கேட்கலாமான்னுதான் புத்தி போகுதே தவிர வீட்ல இருக்க முடியலை. வேற எங்கயும் வெளியே போக முடியலை. நாலா பக்கமும் பொண்ணுங்க இருக்காங்க. பல பேர் வாங்க வாங்கன்னு கூப்பிடறாங்க. அயோத்யா மண்டபம் போற ஒரு கிறுகிறுப்புலயே நான் வேற எங்கேயும் போகமாட்டேன்னுடுவேன். போதையா போச்சு போங்களேன்."

"புரியுது."

அத்தியப்பன் மெல்லச் சொன்னார். சிரித்தார்.



"ஏங்க இந்தப் பக்கம் போறீங்க."

அப்பா திடீரென்று விழித்துக் கொண்டு கேட்டார்.

"அசோக் நகர்லதானே இறங்கணும்."

"இல்லையே. மயிலாப்பூர்ல இறக்க சொன்னேனே."

"மயிலாப்பூர்ல என் வீடு இருக்கு. அசோக்நகர்ல நீங்க இருக்கீங்க இல்ல. அந்தப்பக்கம் போறேன்."

"ஐயா, மயிலாப்பூர்ல இறக்கி விட்டா நான் போயிட மாட்டேனா."

"அதெப்படி... என் ஃப்ரெண்ட் அப்பாவை அதுவும் என் கூட குவைத்துக்கு வரப்போற என் ப்ரெண்டோட அப்பாவை நான் பாதி வழியில இறக்கிவிட முடியுமா. உங்க வீட்டு வாசல்ல இறக்கிவிட்டுட்டுதான் போவேன்."

வீட்டு வாசலில் கார் நின்றது. அப்பா நன்றியோடு அத்தியப் பன் கைகளை பிடித்துக் கொண்டார்.

"எனக்கு தெரியும். என் பிள்ளைய நீங்க பார்த்துப்பீங்கன்னு தெரியும்." சந்தோஷமாக அத்தியப்பனின் தோளைத் தடவி, தலையைத் தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

அந்த செய்கைகள் எல்லாம் உண்மையாக இருந்தன. அன்பு அவர் விரலில் வழிந்தது.

அத்தியப்பன் கை கூப்பினார். விடைபெற்றுக் கிளம்பினார்.

அப்பாவும், பிள்ளையும் குவைத்... குவைத் என்று தினமும் உட்கார்ந்து பேசினார்கள். லட்சுமிநாராயணன் வேலையை ராஜினாமா செய்து விட்டு, மூன்று நாட்கள் நிம்மதியாகத் தூங்கினான். சாப்பிட்டு சாப்பிட்டு உறங்கினான். அத்தியப்ப னோடு தொலைபேசியில் பேசி என்னென்ன எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து நிறைய விஷயங்களை சேகரித்துக் கொண்டான்.

"வாட்டர்பாட்டில் தவிர வேறெந்த பொருளும் வாங்க வேண்டாம்."

அத்தியப்பன் தீர்மானமாகச் சொன்னார்.

"குடிக்கறதுக்கு டம்ளர், ஜக்.." என்று லட்சுமி நாராயணன் பேச, தம்பி சும்மாயிரு என்று அத்தியப்பன் அதட்டினார்.

மாலை வீட்டிற்கு வந்தார்.

"நல்ல சூட் தச்சு எடுத்துக்கோ தேவைப்படும். அங்கெல்லாம் தைக்கக் கொடுத்தா காசு கொடுத்து மாளாது. ஷு ஒண்ணுக்கு மூணு... ஜோடி எடுத்துக்கோ. அங்க ஏகப்பட்ட விலை. இருவது இருவத்தஞ்சு டை எடுத்துக்கோ. நமக்கும் உபயோகப்படும். நாம யாருக்காவது ப்ரசன்ட் பண்ணவும் நல்லாயிருக்கும். மாத்திரை மருந்து அங்க விலை ரொம்ப ஜாஸ்தி. தலைவலி தைலம், வாந்தி பேதி மாத்திரை, ஜுரம் மாத்திரை, வைட்டமின் மாத்திரை, நம்மூர்லேர்ந்து எடுத்துக்கலாம். மத்தபடிக்கு செம குவார்ட்டர்ஸ் தராங்களாம். மூணு பெட்ரூம். கீழ மொத்தமும் கார்ப்பெட்டாம். ஃபர்னிச்சர் இருக்காம். அடுப்பு, ஸ்டவ் எல்லாமும் கனெக்ஷன் இருக்கு. மைக்ரோவேவ் ஓவன் ஒண்ணு வாங்கி வச்சுக்க வேண்டியது. வெளியில சாப்பாடு வாங்க வேண்டியது. உள்ள வச்சு சூடு பண்ணி சாப்பிட வேண்டியது. சும்மா காபி போட்டு குடிக்கறதுக்கு மட்டும் சில பாத்திரம் அங்க வாங்கிக்கலாம். இங்கேயிருந்து தூக்கிட்டு போக வேண்டாம். நிறைய ட்ரெஸ் எடுத்துக்கோ. கேஷீவல் வேர், ஸ்லிம்மிங் சூட், ஜாக்கிங் ட்ரெஸ் அந்த மாதிரி விதவிதமா எடுத்துக்கோ."

"ஜாக்கிங் போக டைம் இருக்குமா ஸார்."

"ஈவினிங் போறோம். நம்ம காம்பௌண்ட்லயே ஸ்விம்மிங்கு இடம் இருக்காம். ஸம்மர்ல ஸ்விம் பண்ணாதான் நல்லா இருக்குமாம்."

"வீடு ஏ.சி.தானே ஸார்."

"சென்ட்ரலைஸ்டு ஏ.சி., சமையல் ரூமுக்கு கூட ஏ.சி., போட்டிருக்கும். வீடு முழுக்க குளுகுளுன்னு இருக்கும்."

"வேலை எப்படி ஸார் இருக்கும்."

"ரொம்ப சிக்கலா இருக்கும்."

"என்ன ஸார் பயமுறுத்தறீங்க."



"இப்போ கான்ட்ராக்ட் எடுத்து ரீபைனரி கட்டிகிட்டிருக்கற கம்பெனியோட குவைத் அரசாங்கத்துக்கு ஏதோ மனஸ்தாபம் இருக்கு. பக்கத்துல நின்னு அதை எடுத்து முடிச்சு கொடுக்கறதுக்கு சரியான ஆள் இல்லை. அதனாலதான் கூப்பிடறாங்க."

"இது உங்க வேலை. எனக்கு எங்க ஸார் கிடைக்கும் வேலை. நான் டர்பையின் இல்ல பார்க்கறேன்."

"டர்பையின் இல்லாத ஆயில் கம்பெனியா. ஒரு ஆள் ஆறு டர்பையின் பார்க்கணுமாம்."

"ஜாஸ்தி சிரமமாயிடும். ரெண்டு டர்பையின் எந்த இடத்துல ஒரே நேரம் மாட்டிகிச்சு, உண்டு இல்லைன்னு பண்ணிடும்."

"இன்னைய தேதிக்கு மூணு டர்பையின் ஃபெயிலியர்னு சொல்றாங்க. உன் பேரைச் சொல்லி கூட்டிட்டு வந்துடு.. கூட்டிட்டு வந்துடுன்னு அங்க இருக்கற சீஃப் இன்ஜினியர் சொல்றார்."

"டபுள் ஸேலரி வாங்கறாரே அவர்."

"ஆமாம்."

"இன்னும் டிக்கெட்டே வரலையே ஸார்."

"நாளைக்கு வரும்."

"விசா."

"டிக்கெட்டோட வரும்."

"அங்க யார் ரிசீவ் பண்ணுவாங்க."

"சீஃப் இன்ஜினியர் ரிசீவ் பண்ணுவாரு."

லட்சுமிநாராயணன் அத்தியப்பனோடு அவர் வீட்டிற்குப் போனான்.

அத்தியப்பன் வீட்டில் கம்ப்யூட்டர் மூலம் குவைத்தின் முழு விஷயத்தையும் அவர் அறிய முயற்சி செய்து கொண்டிருந்தார். எல்லா விதமாகவும் அந்தக் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்திக் கொண்டு ஜெயிப்பது அவருக்கு ஒரு பெரும் பொழுதுபோக்காக இருந்தது.

"இங்க இருக்கற மாதிரி கம்ப்யூட்டர் லேட் ஆகாது. அங்கெல்லாம் டக்டக்குனு இன்ஃபர்மேஷன் கிடைக்கும். அதனால அங்க போனவுடனேயே ஒரு கம்ப்யூட்டர் வாங்கிட வேண்டியதுதான்."

"சொந்த காசா ஸார்.."

"கம்பெனி கொடுக்கணும்னு சொல்லியிருக்கேன். கொடுக்காட்டி என்ன. சொந்தக்காசுலயே வாங்கிடுவேன்."

அத்தியப்பனிடம் திறமையோடு ஒரு பிடிவாதம் இருந்தது. அந்தப் பிடிவாதம்தான் அவரை ஜெயிக்க வைத்தது.

லட்சுமிநாராயணன் அத்தியப்பனையே வியப்போடு பார்த்தான்.

இவரோடுதான் இனி தன் சொச்ச வாழ்க்கை பின்னிப் பிணைந்திருக்கப் போகிறது என்பதை புரிந்துக் கொண்டான்.

ரெண்டு பேரும் கடைக்குப் போய் சட்டைகளும், உள்ளாடைகளும், பேண்ட்டுகளும் வாங்கினார்கள்.

விமான டிக்கெட்டும், விசாவும் வந்ததும் இரண்டு பேரும் சென்னையிலுள்ள பல கோவில்களுக்குப் போய் வந்தார்கள்.

"என் கூட சேலத்துக்கு வறியா. அங்க கோட்டை மாரியம்மனையும், நாமக்கல் ஆஞ்சநேயரையும் பார்த்துட்டு வரலாம்."

அவர் கூப்பிட அவன் கிளம்பினான். அத்தியப்பன் வீட்டில் தங்கினான். அவர் மனைவியிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சினான். தான் கொண்டு போயிருந்த ஒரு பவுன் சங்கிலியை குழந்தையின் கழுத்தில் போட்டான்.

அத்தியப்பன் தப்பு... தப்பு.. என்று மறுக்க, 'தயவு செய்து ஒத்துக்கோங்க' என்று அவரைத் தொட்டு சமாதானப்படுத்தினான்.

கோட்டை மாரியம்மனுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலுக்கும் போய் வந்தார்கள்.



ஊருக்குக் கிளம்ப இன்னும் ஐந்து நாட்கள் இருந்தன. மனைவியிடம் அவர் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார். போகிறபோது மனைவி மெல்ல விசும்பி அழத்துவங்கினாள்.

"என்னா இப்படி அழுதீன்னா நான் எப்படி போவேன்" என்று அத்தியப்பன் அடிக்குரலில் கடிந்து கொள்ள, லட்சுமிநாராயணன் எழுந்து போய் "என்னக்கா என்ன இப்படி பண்றீங்க. அவர் அப்செட் ஆகமாட்டாரு" என்று சொன்னான்.

"கொஞ்சம் அவரை பார்த்துக்கோங்க தம்பி" என்று சொல்ல "இதோ பாருங்க, அஞ்சு அக்காவோட பிறந்தவன் நான். எனக்கு ஆறாவது அக்கா நீங்க. எங்க வீட்டு மாப்பிள்ளையை நான் எப்படி பார்த்துப்பேனோ அதே மாதிரி அத்தியப்பனை பார்த்துப்பேன். கவலைப்படாதீங்க. எனக்கு அவர் துணை, அவருக்கு நான் துணை, குழந்தை ஓடி ஆட ஆரம்பிச்சதும் கூட்டிட்டு வந்துடுங்க. எல்லாரும் அங்க வந்துட்டா குவைத்தே தமிழ்நாடா மாறிப்போயிடும்."

அத்தியப்பன் வீடு ஸ்டேஷனுக்கு வந்து வழி அனுப்பியது. ஊருக்கு வந்து கடைசி நேர வேலைகளை முடித்துவிட்டு அவர்கள் விடியற்காலை விமானம் ஏறினார்கள்.

சூரிய வெளிச்சம் தமிழ்நாட்டில் பரவ ஆரம்பித்த நேரத்தில் விமானம் கிளம்பியது. தங்கத் தமிழகத்தை அவர்கள் ஆசைதீர பார்த்தார்கள். ஜன்னல் வழியே மெரினாவை ரசித்தார்கள். கபாலி கோவில் கண் சிமிட்டும் நேரத்தில் மின்னி மறைந்தது. பேஸின் பிரிட்ஜ், மணலி ரீஃபைனரி என்று தெரிந்தது. விமானம் பம்பாய் நோக்கி பறக்கத் துவங்கியது. பம்பாய் தாண்டி கடலைக் கடந்தது. மஸ்கட்டில் இறங்கியது. மஸ்கட்டில் இறங்கி அவர்கள் விமானம் மாறினார்கள்.

எங்கும் அன்னியர் முகம். வேறு கலாச்சாரம். வேறுவித உடைகள். வேறுவித மொழி. வேறுவித வாசனை. அடுத்த ஒரு மணி நேரத்தில் வேறு விமானம் பிடித்து மேலும் வடக்கே நகர, துபாயில் சற்று நேரம் விமானம் நின்றது. பிறகு மறுபடியும் கிளம்பி குவைத்தில் இறங்கியது. விசாவைக் காண்பித்து

பாஸ்போர்ட்டில் முத்திரை வாங்கி வெளியே வர, சீஃப் இன்ஜீனியரே வெளியில் காத்திருந்தார்.

அத்தியப்பனை அணைத்துக் கொண்டார்.

"இவர்தான் லட்சுமிநாராயணரா."

கை குலுக்கினார்.

தோளில் கைபோட்டபடி ஏர்ப்போர்ட்டில் இருக்கிற உணவு விடுதிக்கு அழைத்துப் போனார்.

"ஒரு... ஒரு மணிநேரம் நிக்கலாமா. பாம்பேலேர்ந்து இன்னொரு ஃப்ளைட் வருது. அதுல மூனு இன்ஜீனியர்ஸ் வராங்க. அதுல ரெண்டு பேர் தமிழர். ஒரு மலையாளி. மூனு பேருமே பாம்பேல வேலை செய்தவங்க. லட்சுமி நாராயணா.. டர்பைன்ல தான்யா வேலை செய்த."

"ஆமாம்."

"தனியா டர்பையின் பார்த்துப்பியா."

"ட்ரை பண்றேன் ஸார்."

"ட்ரை பண்றதெல்லாம் இல்லைய்யா. வேற வழியே கிடையாது. ஆறு டர்பையின் உன் மடியிலதான் வந்து விழப் போகுது. மூனு தகராறுல இருக்கு. இன்னொன்னு எப்போ வேணா வெடிக்கும். பேய் மாதிரி வேலை செய்தா ரெண்டு மாசத்துல க்ளியர் பண்ணலாம். வேலை அதிகம் இருக்குய்யா. பயந்துடாத. ஆனா எப்பவுமே இவ்ளோ வேலை இருக்காது. சரியான ஆள் இல்லாத எல்லா விஷயங்களும் கலைஞ்சு கிடக்கு. நேர் பண்ணிட்டோம்னா சிஸ்டம் சரியாப் போயிடும்."

"நல்ல ஒர்க்கர்ஸ் இருக்காங்களா ஸார்."

"நல்ல ஒர்க்கர்ஸ் இருக்காங்கய்யா, வேலை வாங்கத் தெரியலை.."

"இப்போ வேலை வாங்கறது யார்."

"நான்தான்..." சொல்லிவிட்டு அவர் சிரித்தார்.

"ஏன் ஸார். ஏன் உங்களால வேலை வாங்க முடியல."



"ஒரு வேலை செய்தா பரவாயில்லை. நாலஞ்சு வேலை செய்தா. வாரத்துக்கு ஒரு தடவைதான் என்னால டர்பையினை கவனிக்க முடியும். அது சரியா வராது இல்ல."

"ஆமாம் ஸார். தினம் உட்காரனும்."

"ஆங்.. என்னால எப்படி உட்கார முடியும். நான் எந்த வேலைன்னு கவனிப்பேன். ரொம்ப அல்லாடறன்யா."

"கவலைப்படாதீங்க ஸார். நான் இருக்கேன். நீங்க சும்மா கைய்ட் பண்ணா போதும்."

"என்னா கைய்டன்ஸ். எல்லாம் சூப்பர் டர்பையின். சின்னச் சின்னதா மிஸ்டேக். எங்கேன்னு கண்டுபிடிக்கறதுக்கு ஒர்க்க ருக்கு தெரியலை. உட்காரத்துக்கு நம்மால முடியலை."

ஏர்போர்ட்டு விட்டு வெளியே வந்தவுடன் முகத்தில் குளிர் தாக்கியது.

"ஸார்... வெய்யில்னு சொன்னாங்க."

"இந்நேரம் வெய்யில் இருக்காது. மே, ஜூன் ஜூலைலதான் பீக்ல இருக்கும். இப்போ குளிரான நேரம். ராத்திரி மைனஸ் ஃபோர், மைனஸ் ஃபைவ் கூட போகும். வெளியே எங்கேயும் கிளம்பிடாதீங்க. ரெண்டு நாள் ரெஸ்ட். ஞாயிற்றுக்கிழமை காலையில வேலை ஆரம்பிக்கலாம். இன்னிக்கு வெள்ளிக் கிழமை லீவு. எல்லாக் கம்பெனியும் லீவு. சிட்டி ஹோன்னு இருக்கும். போய் தூங்குங்க. நாளைக்கு ஊர் சுத்தி காமிக் கிறேன். ஞாயிற்றுக்கிழமை கார்த்தால வேலைக்கு வந்துடலாம். என்ன பார்க்கறீங்க. சண்டே ஹாலிடே. அது நம்மூர்ல. ஸண்டே தான் ஃபுல் ஸ்விங்ல வேலை நடக்கும். வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ரெண்டு நாள் ஹாலிடே. வியாழக்கிழமை ஒரு அரைநாள் வேலை இருக்கும். என்னைப் பொறுத்தவரைக் கும் வெள்ளிக் கிழமையும் வேலை இருக்கும். வெள்ளிக் கிழமை மத்தியானம்தான் எனக்கு கொஞ்சம் தூங்க நேரம் கிடைக்கும்."

"ஸார் நாங்க வந்துட்டோம். கவலையே படாதீங்க. உங்க டர்பைனெல்லாம் எங்க தலையில போடுங்க."

அத்தியப்பன் சொல்ல, சீஃப் இன்ஜீனியர் ராமனாதன் பாய்ந்து அத்தியப்பன் கைகளை பிடித்துக் கொண்டார்.

"இப்படி ஒரு வார்த்தை கேட்கறதுக்குத்தான் கிட்டத் தட்ட ஆறு மாதம் தவிச்சுகிட்டிருந்தேன். காதாலகூட ஆறுதலா வார்த்தை கிடைக்காம ரொம்ப அவஸ்தை பட்டேன்யா."

அவருடைய துக்கம் அந்த இரண்டு இன்ஜீனியர்களுக்கும் புரிந்தது. அடுத்தபடியாக இன்னொரு பட்டாளம் வர, எல்லோரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். சிறிது நேரம் கழித்து விடைபெற்றுக் கிளம்பினார்கள்.

"இதோ பார் லட்சுமிநாராயணா நாம ரெண்டுபேரும் ஒரே ரூம்ல படுத்துப்போம். வேற ஆளை உள்ளவிட வேண்டாம்."

அடிக்குரலில் ரகசியமாக அத்தியப்பன் சொன்னார்.

தன்னோடு அத்தியப்பன் ஜதை சேர்ந்தது லட்சுமி நாராயண னுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஸார்... ஸார்... நான் ஒண்ணும் உங்களை மாதிரி சுத்தமான ஆள் இல்லை ஸார்."

"எனக்கு வேற வழியில்லையே. சுத்தமோ சுத்தமில்லையோ என்கூட நீ இருக்கறதுதான் உனக்கும் நல்லது. உன் கூட நான் இருக்கறதுதான் எனக்கும் நல்லது."

"எப்படி ஸார்."

"நீ போட்டது போட்ட படி போயிடுவ. எடுத்து வைக்கணும் யாரு... நம்ம லட்சுமிநாராயணன்தானே' அப்படின்னு நான் சாதாரணமா எடுத்து வைப்பேன். இதுவே வேற ஆளா இருந்தா கோச்சுப்பேன். வீணா மனஸ்தாபம் வரும்."

"ஸார் நான் முயற்சி பண்றேன். சுத்தமா இருக்கறதுக்கு."

"வெரிகுட். தட் இஸ் த ஸ்பிரிட்."

அத்தியப்பன் பாராட்டினார்.

அவருக்கும் சரியாக தூக்கம் வரவில்லை. உடம்பு அயர்ந்து போயிருந்தாலும் மனம் விழித்துக் கொண்டிருந்தது. அடுத்தபடி யான அனுபவங்களுக்கு காத்திருந்தது.



எது பாலைவனம். எது ஃபாக்டரி. என்ன பிரச்சினை. எத்தனை டர்பையின். எந்த தயாரிப்பு என்று மனம் ஏகப்பட்ட விஷயங்களில் அலைபாய்ந்தது.

"அம்பது டிகிரி வெய்யில்னா வெளிய நிக்கவே முடியாது. நாலு டிகிரி குளிர்னா பல்லு உதறுமா. கை விரைச்சுடுமா. வேலைக்குச் சேர்ந்த ரெண்டு நாள் கழிச்சுத்தான் என்ன சம்பளம்னு முடிவாகும்."

அந்த ஒரு நாளையும் மிக ஆவலாக லட்சுமிநாராயணன் எதிர்பார்த்தான்.

அத்தியப்பனுக்கும் அந்த ஆவல் இருந்தது. ஆனால், அது பற்றிப் பேசாது மௌனமாக இருந்தார். ஆனால், இதை மிகப் பெரிய விஷயமாக அடுத்த அறையில் உள்ளவர்கள் உரத்த குரலில் பேசினார்கள்.

"அறுவதாயிரத்துக்கு ஒரு ரூபா குறைஞ்சா கூட நான் மயிராச்சேன்னு வெளியே போயிடுவேன்."

யாரோ பேசுவது கேட்டது. கெட்ட வார்த்தைக்குத் தமிழும் மற்ற விஷயங்களுக்கு ஆங்கிலமுமாய் அவர்கள் பிளந்து கட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மலையாளி ஹாலில் உட்காரந்து தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் சோகம் இருந்தது.

"என்ன.." என்று அத்தியப்பன் விசாரிக்க

"அம்மைக்கு உடம்பு சரியில்லை. நான் கிளம்பறபோது இன்னும் மோசமாயிடுச்சு. என்ன தப்பா இருந்தாலும் வரவேண டாம். நாங்க பார்த்துக்கறோம்னு சொல்லிட்டாங்க. அவ அம்மா. நான் எப்படி இங்க உட்கார்ந்துகிட்டிருக்க முடியும். எனக்கு ஒண்ணும் புரியல."

"என்ன உடம்புக்கு."

லட்சுமிநாராயணன் விசாரித்தான்.

"வயசாச்சு. வயசானவா.. எல்லா வியாதியும் இருக்கு. ஹார்ட் ப்ராப்ளம், சர்க்கரை, ஆஸ்துமா எல்லாம் இருக்கு. நான் சாகப்போறேண்டா பாஸ்கரா... என்னை இப்போ விட்டுட்டு

போகறயே' அப்படின்னு அம்மா அழறாங்க. நான் நின்னுடலாமான்னு நினைச்சேன். அம்மா எப்போ சாவாங்கன்னு காத்துக்கிட்டிருந்த மாதிரி அது ஆயிடாதா. அதனால உனக்கு ஒண்ணும் ஆகாதுன்னு சொல்லிட்டு கிளம்பி வந்துட்டேன். ஒண்ணும் ஆகாம இருக்கணும்."

"ஆகாது ஸார். கவலைப்படாதீங்க. அம்மா உங்களை மறுபடியும் பார்க்கணும்கற ஆசையில, சக்தியெல்லாம் திரட்டி மனசுக்கு கொண்டு வந்து நல்லா இருப்பாங்க."

அந்த மலையாளிக்கு அந்த வார்த்தைகள் பிடித்திருந்தது. நன்றியோடு எழுந்திருந்து லட்சுமிநாராயணன் கைகளை குலுக்கினார்.

"யாருமே சப்போர்ட்டா இல்லையேன்னு வருத்தப்பட்டேன். உங்க ரெண்டு பேரையும் பார்த்த பிறகு எனக்கு சந்தோஷமாயிடுச்சு. அவங்க வேற மாதிரி ஸார். ரொம்ப சத்தம் போடறாங்க. எப்படி தூங்கப் போறேன்னே தெரியலை." அறைக்குள் டேப்ரிகார்டர் சத்தமாக வைக்கப்பட்டிருந்தது. எல்லாச் செயல்களிலும் ஒரு அநாகரீக அதிரடி தெரிந்தது.

முகம் கழுவி உடுத்திக் கொண்டு ஹாலுக்கு வர அந்த மலையாளியும் அவ்விதமாகவே தயாராக இருந்தார்.

"எங்க கிளம்பிட்டீங்க."

லட்சுமிநாராயணன் கேட்க, "நீங்க எங்கே போறீங்களோ அங்க. இங்க உட்கார முடியாது போலிருக்கே.." என்று அறையைக் காண்பித்துப் பேசினார்.

அவர்கள் மூவரும் வெளியே வந்தார்கள்.

அந்த அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழே நின்றபடி கட்டடத்தை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

"வந்து சேர்ந்தாச்சுன்னு சொல்லணும். எப்படி சொல்றது. இங்கிருந்து நாலாவது பில்டிங்ல சீஃப் இன்ஜினியர் வீடு இருக்கு. வரும்போது காண்பிச்சாரே."

"அப்படியா.. நான் பார்க்கலையே."

"நீங்க தூங்கிட்டிருந்தீங்க லட்சுமிநாராயணன்."



அத்தியப்பன் பதில் சொல்ல லட்சுமிநாராயணன் வெட்கப்பட்டான்.

அவர்கள் வேகமாக அத்தியப்பன் சுட்டிக்காட்டிய பதினாறு மாடி கட்டிடத்தை நோக்கி நடந்தார்கள். ஒரு காவலாளி. அவர்கள் யாரென்று விசாரித்தான். புதிய முகமும், தெளிந்த பேச்சும் அவர்களுக்கு சந்தோஷமாயின.

"ராமனாதன் ஸார் மேல இருக்கார் வாங்க" என்று அழைத்துப் போனான். மணியடித்து விட்டு, அவர்கள் காத்திருந்தார்கள்.

கதவு திறந்தது. மத்திம வயது தாண்டி ஒரு குண்டான பெண்மணி கதவு திறந்தாள். ராமனாதன் மனைவி போலும்...

"யாரு.. இன்ஜீனியர்ஸா.. உள்ள வாங்கோ.." என்று பின்னடைந்தாள்.

அவர்கள் ஹாலுக்குள் நுழைந்தார்கள். இரண்டு லஸ்தர் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மென்மையான ஒரு வெளிச்சம் அறை முழுவதும் பரவியிருந்தது. வெல்வட் சோபாக்கள் பெரிய ஹாலில் சீராக வைக்கப்பட்டிருந்தன. ஷூக்களை களைந்துவிட்டு மெத்தென்ற கம்பளத்தில் கால் வைத்து சோபாவில் உட்கார்ந்து கொள்ள ராமனாதன் வந்தார்.

இடுப்பில் லுங்கியும் பனியனுமாய் இருந்தார்.

"வாங்கய்யா... எங்க இந்தப்பக்கம்."

"மெட்ராஸுக்கு போன் பண்ணலாம்னு."

"அடடே.. பண்ணுங்க. ரெண்டு மூணு போன் இருக்கு. இங்க நீ பண்ணு. அந்த போன்ல அவர் பண்ணட்டும். பாஸ்கரன் இது ஹாண்ட் செட். இதுல பண்ணுங்க" என்று போன் கொடுக்க அவரவர் வீட்டுக்கு பேசத் துவங்கினார்கள்.

"அங்க போயிட்டு வரக்கூடாதா."

ராமனாதனின் மனைவி ஏதோ பேசுவது கேட்டது.

"என்னம்மா எங்க போயிட்டு வரணும்."

லட்சுமி நாராயணன் முன்னேறி அந்தப் பெண்மணியிடம் பேசினான்.

அத்தியப்பனுக்கு சட்டென்று பேச தயக்கமாக இருந்தது.

"மறுபடியும் இவர் ஏர்போர்ட் போகணும். இன்னிக்கு வெள்ளிக்கிழமை லீவுன்னு பேரு பாருங்க. ஏர்போர்ட்டுக்கும் வீட்டுக்குமாவே அலைஞ்சுகண்டிருக்கார்."

"அவங்க எப்படிம்மா போவாங்க. ஊருக்கு புதுசு இல்ல."

"என்ன ஸார். ஏர்போர்ட்டுக்கு போகறதுக்கு உங்க டிரைவருக்கு வழி தெரியுமா. நாங்க போய் யாரை ரிஸீவ் பண்ணணுமோ பண்ணிட்டு வந்துடறோம்."

"வேணாம் ஸார். அவன் பாகிஸ்தானி. ஒரு வேளை விட்டுட்டடுங்கன்னா. பயமாயிருக்கு."

"விடமாட்டோம் ஸார். நாங்க பார்த்துக்கறோம்."

அத்தியப்பன் எழுந்திருந்து பதில் சொல்ல லட்சுமிநாராயணன் உற்சாகமானான்.

"பாஸ்கர் உங்களுக்கு ஏதாவது வேலை இருக்கா."

"ஒண்ணுமில்லை ஸார்."

"அவர் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையே ஸார்.." லட்சுமி நாராயணன் இடையில் புகுந்து சொன்னான்.

"இல்லிங்க பேசிட்டேன். அம்மைக்கு இப்போ தேவலாம். லட்சுமிநாராயணன் சொன்னமாதிரி நான் பாஸ்கரனை பார்க்காம போகமாட்டேன் அப்படின்னு எழுந்து உட்கார்ந்துட்டாங்களாம். வீட்ல இருக்கறவங்களெல்லாம் ஒரே கேலி பண்ணிகிட்டிருக்காங்களாம் அம்மாவை. பாஸ்கரன் வந்தவுடனே செத்துப் போயிடணும். ரொம்ப டிலே பண்ணக் கூடாது அப்படின்னு என் தங்கைகளெல்லாம் அம்மாவை கிண்டலடிக்கிறாங்களாம்."

"கடவுளே.. நல்லபடியா தீர்க்காயுசா இருக்கட்டும்."

ராமனாதன் கைகூப்பினார்.

"எண்பத்தஞ்சு வயசு ஸார்."

"இருக்கட்டுமேய்யா.. இன்னும் பத்து வருஷம் இருக்கட்டுமே."



ராமனாதன் சொல்ல எல்லோருக்கும் அங்கு ஒரு சந்தோஷம் பரவியது.

"நீ துபாய்க்கு போய் கை நிறைய காசு சம்பாதிச்சு தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் கொடுக்கப் போறேன்னா அது அந்தக் கிழவிக்கு எவ்வளவு பெரிய சந்தோஷம். அடிக்கடி வாங்கய்யா. உங்க மூணு பேரையும் புரிஞ்சுண்டா மாதிரியும் இருக்கும்."

அவர் வரவேண்டியவர்களுடைய பெயர், விலாசம், புகைப் படம் எல்லாம் கொடுத்தார்.

மூன்று இன்ஜீனியர்கள். ஆறு இன்ஸ்ட்ருமெண்டேஷன் மெக்கானிக்ஸ் வருகிறார்கள். எல்லா மெக்கானிக்கும் டிப்ளமோ ஹோல்டர்கள். அதில் மணலியில் வேலை செய்தவர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். பன்னிரெண்டு பேர் அமரக்கூடிய நீள வேனில் ஏறி உட்கார்ந்து கொண்டு அத்தியப்பனும், லட்சுமிநாராயணனும் குவைத்தை வேடிக்கை பார்த்தபடி ஏர்போர்ட்டுக்கு பயணமானார்கள். கார்கள் பிசாசாய் விரைந்து கொண்டிருந்தன. அதே நேரம் அத்துமீறாத ஒரு சுகம் இருந்தது. எதிர்ப்பக்கம் காரே வரவில்லை என்றாலும் சிகப்பு விளக்கு எரியும் வரை தாண்டாமலேயே கார் டிரைவர் நின்றிருந்தார். பச்சை எரிந்த பிறகே வண்டியை நகர்த்தினார்.

"உங்க ஊர்லயும் இப்படித்தான் ஓட்டுவியா."

பாஸ்கரன் ஹிந்தியில் அந்த பாகிஸ்தானியைக் கேட்க பாகிஸ்தானி வாய்விட்டுச் சிரித்தான்.

"இல்லை. எங்க ஊர் தொட்டதும் எங்க புத்தி வந்துடும். இஷ்டத்துக்குதான் ஓட்டுவோம். இங்க தப்பா ஓட்டினா உள்ள தூக்கி போட்டுவாங்க. அதனால பயந்து ஒழுங்கா ஓட்டுவோம்" என்று சொல்ல மூவரும் சிரித்தார்கள்.

ஏர்போர்ட்டில் மறுபடியும் சிற்றுண்டி எடுத்துக் கொண்டு அவர்கள் வருபவர்களுக்காக காத்திருந்தார்கள்.

## 2

"இந்த வீட்ல இருக்கறதுக்கு பதிலா எங்கனா ஆறோ, குளமோ பார்த்து விழுந்து சாகலாம். ஓடற ரயில் முன்னாடி குதிச்சு தற்கொலை பண்ணிக்கலாம்."

பெரியசாமி உரத்த குரலில் பேசினான். அவன் அம்மா திகைத்தாள்.

"வேணாம் கண்ணு. அப்படியெல்லாம் பேசாத. நீ ஒருத்தன் தலையெடுத்து நம்ம குடும்பத்தை காப்பாத்துவேன்னு நான் ரொம்ப தைரியமா இருக்கேன். இப்போ போய் இந்த மாதிரியெல்லாம் பேசினா எனக்கு விட்டுப் போயிடும்டா.

"நான் உயிரோட இருக்கறதே உனக்காக. இப்போ கிரகம் சரியில்லைன்னாலும் என் கடைசி நாள்ல உன் பக்கத்துல நிம்மதியா உட்கார்ந்து சாப்பிடலாம்னு ஒரு எண்ணம் இருக்கு."

"சாகறதப்பத்தி பேசாத கண்ணு. வாழணும்... நல்லா வாழணும்னு ஆசைப்படணும். முன்னேறணும்னு வேகப்படணும். அதெல்லாம் விட்டுட்டு, இப்படி பேசினா நல்லாவா இருக்கு."

"இந்த வீடு நல்லாயில்லேயே."

"அப்படித்தாண்டா. அதை சரிபண்ண வேண்டியது நம்ம வேலை."

"உன் புருஷன் இருக்கற வரைக்கும் எதுவும் உருப்படாது."

அவன் தன் தகப்பனை நோக்கி கைகாட்டினான் அவர் எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தார். வீடு முழுவதும் மட்டமான மதுவின் நெடி குப்பென்று வீசியது.

"கல்யாணத்துக்கு அன்னிக்கு காலையிலேயே குடிச்சுட்டு வந்து தாலி கட்டின ஒரே மனுஷன் உங்கப்பாவாத்தான் இருக்க முடியும்."

அம்மா அடிக்கடி நொந்து பேசுகின்ற வார்த்தைகள் இவை. அம்மா மட்டுமில்லை. பெரியசாமியின் பல உறவுகள் குடிக்கிற



பழக்கத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். 'குடிப்பதே வாழ்க்கையின் லட்சியம்' என்பதுபோல குடிக்கிறார்கள். உடம்பு நோக்காடு என்று உடனே காரணம் சொல்கிறார்கள். தேவையில்லாத ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு உடம்பையும், மனசையும் சுற்றுச்சூழலையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாள் கூட நிம்மதியாக அம்மா உறங்கியதில்லை. உறங்க விட்டதில்லை. ஏதேனும் ரகளை, உரத்த குரலில் பேச்சு. கெட்ட வார்த்தைகளின் சிதறல். மனசைக் குத்திப் புண்ணாக்குகின்ற வார்த்தைகள், இரையாமல் இந்த வீடு இருந்ததில்லை. அடித்து வீசி விடலாமா என்ற ஆத்திரம் எழும்பும், சில சமயம் அழுகை வரும். வீட்டை விட்டு ஓடி போய் விடலாமா என்ற ஆத்திரமும் வரும்.

அன்றைய ரகளையில் எல்லாமும் வந்தது. முஷ்டியை மடக்கி அப்பாவின் முகத்தில் நச்சென்று குத்தினான். அப்பா உருட்டுக்கட்டை தேடினார். அம்மா அவர்களை சமாதானப் படுத்தி உட்கார வைக்க இரண்டு அறைகள் வாங்கினாள். அன்று தெருவே நாறும்படி அப்பா கெட்ட வார்த்தைகளை இறைத்தார். பதிலுக்கு அவனும் இரண்டு வார்த்தைகள் உரக்கக் கத்த அம்மா அதட்டினாள்.

"நீ பேசக்கூடாது. இப்படியெல்லாம் பேசக்கூடாது. அப்பா பேசறதுல எனக்கு வருத்தமேயில்லை. நீ ஒரு வார்த்தை தப்பா சொன்னாலும் எனக்கு வருத்தமா இருக்கும்" என்று சொல்ல அதையும் அடக்கிக் கொண்டான்.

"ஏங்க ஒரு நாளைப்போல இப்படியே பண்றீங்க."

எதிர்வீட்டு பெண்மணி கேட்க அவளுடைய ஒழுக்கம் பற்றியும் அப்பா பேச, எதிர்வீட்டு ஆள் பாய்ந்து வந்து அப்பாவின் சட்டையை பிடித்துக் கொள்ள, மறுபடியும் அம்மா கெஞ்சி காலில் விழுந்து, "அவர்தான் போதையில இருக்காரே அதை ஏன் பெருசு பண்றீங்க."

அம்மா கெஞ்சினாள்.

"போதையில இருந்தா என்ன வேணா பேசிடுவானா. நாய்க்கு பொறந்தவன்."

அவன் எகிறி பேச அப்பா சுருண்டு படுத்துக் கொண்டார். முனகலாய்... முனகலாய் ஏதேதோ பேசினார்.

"நாங்க க்ஷத்திரியரு. கையில கத்தி எடுத்தா தலை வாங்காத விடமாட்டோம். எதிரிங்க ரத்தத்துல முகம் கழுவறவங்கடா நாங்க" என்று கைமுஷ்டியை உயர்த்திப் பேசினார்.

அப்படியொரு காட்சியை கற்பனை பண்ணவே அருவறுப்பாக இருந்தது.

எங்கேயாவது வெளியே போய் எல்லாம் மறந்துவிட்டு நிம்மதியாய் உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

'சினிமாவுக்கு போகலாமா. அதான் எல்லா படமும் பார்த்துட்டோமே. பார்த்த படத்துலேயே எந்தப்படம் போகலாம். நல்ல காதல் கதையாக இருக்கின்ற படம் போகலாம் என்று மனம் ஆசைப்பட்டது. இனிமையான பாட்டில், பெண்களின் வாளிப்பில்... காதல் காட்சிகளின் கிறக்கத்தில்தான் துக்கங்களை மறக்க முடிகிறது.

தன் வாழ்க்கையிலும் இப்படி அழகான ஒரு பெண் வருவாள். இந்த பாட்டிற்கு ஒரு அர்த்தம் இருக்கும். யாரை நோக்கியாவது இப்படி ஒரு காதல் கவிதை எழுதக்கூடும் என்றெல்லாம் சினிமா அவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

சினிமா பார்ப்பது ஒரு சுகம். சினிமா பார்த்துவிட்டு கனவுகளில் மூழ்குவது அதைவிட சுகம். அதுவும் சினிமா பார்க்க வேண்டுமென்று ஏங்குவது சுகமோ சுகம்.

என்ன படம்போகலாம்.

மனம் அலைபாய்ந்தது. 'பிரச்சினைகளிலிருந்து விடுபட சினிமாதான் அற்புதமான போதை. அப்பாவுக்கு மது. எனக்கு சினிமா. இரண்டும் ஒன்றுதானா இல்லையே. சினிமால ஒரு கெடுதலும் இல்லையே.'

மனம் தொடர்ந்து யோசனை செய்தது.

'சினிமாவினால் நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். எந்த சினிமாவுக்குப் போனாலும் ஏதேனும் ஒரு ரசிகர் மன்றக் கூட்டம் இருக்கிறது. அவர்கள் மிக மரியாதையாக வரவேற்கிறார்



கள். கை குலுக்கிறார்கள். அந்தப்படம் எப்படி இந்தப்படம் எப்படி என்று கேள்வி கேட்கிறார்கள். அவர்களோடு உட்கார்ந்தாலும் பொழுது போய் விடும். ஆனால், காசு செலவு வந்து விடுகிறது.

"என்ன ஸார் டீயே இல்லையா" என்று கேட்கிறார்கள்.

அவர்களில் பல பேருக்கு வேலையில்லை. ரசிகர் மன்றம் தான் வேலை. எப்போவாவதுதான் காசு நடமாட்டம்இருக்கும். இருந்தாலும் வாரி வழங்கத் தயங்கமாட்டார்கள். அவ்வப்போது டீ என்று கேட்பார்கள். வாங்கிக் கொடுத்தால்தான் சுமூகமான உறவு இருக்கும். அங்கங்கே டீ வாங்கிக் கொடுத்தே நானூத்தி எழுபத்தைந்து ரூபாய் கடன் இருக்கிறது. இதைத்தவிர வீட்டு வாடகை இரண்டுமாதம் பாக்கி இருக்கிறது. மளிகைக்கடையில் கடன் இருப்பதாக அம்மா சொல்கிறாள். தாலிக்கொடியை மீட்க வேண்டுமென்று அம்மா ஆசைப்படுகிறாள். வளமான வாழ்க்கைக்கு எந்த வகையும் இல்லை. ஆனால், மனம் மட்டும் சுகத்திற்கு கனவுக்கு இடையறாது ஏங்குகிறது.'

பெரியசாமிக்கு பல நூறு கனவுகள் இருந்தன. அவனுக்கு பெண் கொடுப்பவர் ஒரு புலவராக இருக்க வேண்டும். அத்தோடு சித்தமருத்துவமும் தெரிந்திருக்க வேண்டும்.

மாப்பிள்ளையை மகனைப் போல நடத்தி சகலமும் கற்றுத் தரவேண்டும். மாமியார் அசைவம் சமைப்பதில் பிரமாதமான ஆளாக இருக்க வேண்டும். பெரிய மைத்துனன் அரசியலில் முக்கியமான ஆளாக இருக்க வேண்டும். சிறிய மைத்துனன் விளையாட்டில் தேசிய அளவில் முன்னேறி இருக்க வேண்டும். மனைவியாக வரப்போகிறவள் அழகாய் வாளிப்பானவளாய், நாலு பேர் பார்த்து பொறாமைப்படுபவளாய் இருக்க வேண்டும். கம்பி போட்ட வராண்டாவும் உள்ளுக்குள் திண்ணையும் பெரிய கூடமும் ஊஞ்சலும் முற்றமும், வெளிச்சமான சமையல் அறையும் மாமனார் வீட்டில் இருக்க வேண்டும். அம்மாவைப் பார்த்து சகலரும் எழுந்து நின்று கைகூப்ப வேண்டும். அப்பா. அப்பாவை என்ன செய்ய வேண்டும்.

மனம் யோசித்தது.

அப்பா இல்லாமலேயே இருந்திருக்கலாம் என்று தீர்மானித்தது.

அவர் ஒரு ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போயிட்டாருங்க. மனம் பேசியது.

"அடேடே... அப்படிங்களா" என்று ஊர் இரக்கப்படுவது மனசுக்குப் பிடித்திருந்தது.

"புருஷன் இல்லாத பொம்பளைக்கு பிள்ளைதாண்டா துணை. கடைசி வரைக்கும் அம்மாவை கைவிட்டுடாதப்பா."

மனைவியின் உறவுகள் சொல்ல வேண்டும். விடமாட்டேன் என்று நெஞ்சு நிமிர்த்தி நிற்க வேண்டும்.

சட்டென்று பெரியசாமி யோசிப்பதை நிறுத்தினான்.

கனவுகள்... கனவுகள்.. கனவுகள்... சம்மந்தா சம்மந்தமில்லாத கனவுகள். இதில் என்ன லாபம். யாருக்கு உதவி.

துக்கப்பட்டான்.

ஆனால், காசில்லாத கஷ்டம் போக்க வீட்டில் அப்பா செய்யும் ரகளையை மறக்க இப்படி பகல் கனவு காணுவது சுலபமாக இருக்கிறது. இப்படி கனவு காண்பதற்கு சினிமா உதவி செய்கிறது.

நெஞ்சம், மஞ்சம், தஞ்சம் என்று மனசு இடையறாது பாடிக் கொண்டே இருக்கிறது. பாட்டை நிறுத்த முடியவில்லை. ஏதாவது ஒரு பாட்டு மனசைக் கவ்விக் கொண்டு, ஏதாவது ஒரு கற்பனைக்கு இழுத்துப் போகிறது.

மதுவைவிட போதை சினிமா பாடல்கள்தான். மனதை இயக்கவொட்டாமல் செய்து விடுகின்றன.

மனம் விட்டுப் பாடியபடியே பல நேரங்களில் பல விஷயங்களை மறந்திருக்கிறான். போக வேண்டிய இடத்தைத் தாண்டிப் போயிருக்கிறான். நின்றிருக்கிறான். ப்ளஸ்டூ வரைக்கும் அரசாங்க உதவிப் பணத்தில் படித்துவிட்டு ஐம்பத்து மூன்று சதவீத மதிப்பெண்களோடு தேறினான்.

"பெரியசாமி அறுவது பர்செண்ட் வாங்குவேன்னு நினைச்சேன். குறைச்சலா வாங்கியிருக்கியேடா. அரசாங்கத்துல நிறைய சலுகை தராங்க. எங்களா சேர்ந்து இன்ஜினியர் ஆயிடக் கூடாதா." பள்ளி ஆசிரியர் பேசினார்.



"இல்லை ஸார். இன்ஜினியர் சீட் கிடைச்சாக்கூட சேர முடியாது."

"ஏம்பா.."

"வசதி இல்லை ஸார். சம்பாத்தியமே இல்லை. ஒரு வேளை வீட்ல உலை கொதிக்கறதுக்கே தினம் உன்னைப்பிடி என்னைப்பிடின்றாங்க. நான் எங்க ஸார் இன்ஜினியரிங் படிக்கறது. பஸ் சார்ஜ், சட்டை, துணிமணி, புஸ்தகம்."

"அதுவும் கவர்மெண்ட்ல தராங்களேடா."

"எப்போ தருவாங்க ஸார். முதல் போட வேணாமா. யார் நம்மள நம்பி கடன் கொடுப்பா. வீட்டு வாடகை கட்டலை ஸார். அது பெரிய ரகளையா இருக்கு."

"யார் யாரோ முன்னேறபோது. இத்தனை சலுகை உள்ள நீ முன்னேற முடியாதா."

"முன்னேறலாம் ஸார் அப்பா சரியில்லை."

அவன் சொல்லிவிட்டு வலது பக்கம் திரும்பி ஜன்னல் வழியே வானம் பார்த்தான்.

ஆசிரியர் அருகே வந்து நின்றார்.

"என்ன தொந்தரவு."

அடிக்குரலில் கேட்டார்.

"குடிச்சுட்டு வம்பு பண்ணுவாரு ஸார். வீட்ல ஒரு பொருள் வைக்கறதுக்கு இடம் கிடையாது ஸார். ஒரு வீட்டு மாடியில குடிசைபோட்டு தங்கியிருக்கோம் வெட்ட வெளியிலதான் குளிக்கறோம். பொதுக் கக்கூஸ் தான் உபயோகப்படுத்துறோம். ரொம்ப... ரொம்ப மோசமான வாழ்க்கை ஸார் என்னுது."

"திருவேற்காடு கோயிலுக்கு போயிட்டு வாடா. உனக்கொரு நல்ல வழி பிறக்கும். போய் என்னை கரை ஏத்தும்மான்னு கேளு. மாசத்துக்கு ஒரு தடவையாவது போ. வாரத்துக்கு ஒரு தடவை போனேன்னு வச்சுக்க இன்னும் நல்லது."

"அதுக்கும் பஸ்ல போகறதுக்கு காசு வேணுமில்லை."

"ஏண்டா பஸ்ல போற. காலையில நாலுமணிக்கு எழுந்து குளிச்சுட்டு சும்மா நடந்து போ. வரும்போது எதுனா லாரி வேன் பிடிச்சு வந்துடு."

ஆசிரியர் சொன்னது ஞாபகம் வந்தது. சினிமாவுக்கு போறதுக்கு பதிலா திருவேற்காடு போகலாம்.

மனம் எண்ணத்தை மாற்றியது. எவ்வளவு கையில் காசு இருக்கிறது என்று பார்த்தான்.

ஆறு ரூபாய் ஐம்பது பைசா இருந்தது. ஐம்பது பைசாவிற்கு ஒருமிட்டாய் வாங்கி வாயில் அடக்கிக் கொண்டான். வேகமாக திருவேற்காடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

இந்த முறை எண்ணங்கள் வேறு மாதிரியாக இருந்தன. திருவேற்காடு அம்மன் வாசலிலேயே காத்திருப்பது போலவும் வா.. வா.. என்று இவனை அழைப்பது போலவும் கோவிலுக்குள்ளே புடவை கட்டி பூ வைத்திருந்த பல பெண்களுக்கு நடுவே அவனை அமரவைத்தது போலவும் அந்தப் பெண்கள் எல்லாம் அவனை ஆசையோடு பார்ப்பது போலவும், நாணப்படுவது போலவும் எண்ணங்கள் தோன்றின.

கோவிலை அடைந்த போது உச்சிவேளை வந்து விட்டது.

"இங்க யாரோ அன்னதானம் பண்றாங்க. டோக்கன் கொடுக்கறாங்க" என்று யாரோ முன்னும் பின்னும் அலைவது தெரிந்தது.

ஓடிப்போய் டோக்கன் வாங்கலாமா... எங்கே... என்று மனசு பரபரத்தது.

சட்டென்று அடக்கி நிறுத்தி கோவிலுக்குள் நுழைந்தான். வலம் வந்தான். க்யூவில் நின்று நகர்ந்து சுவாமி தரிசனம் செய்தான். தீர்த்தம் வாங்கிக் குடித்தான். விபூதி இட்டு கொண்டான். இன்னும் அருகே போய் கைகூப்பி அந்த விக்ரஹத்தைப் பார்த்தான்.

"எத்தினி நாள் காசு இல்லாத நடந்து பாக்கறதுக்கு வரணும். உன்னை பார்க்கறதுக்கு நான் வேற விதமா வரக்கூடாதா. நல்ல



சட்டை போடக்கூடாதா. நல்ல செருப்பு போட முடியாதா. இப்படித்தான் பிச்சைக்காரனா வரணுமா. எனக்கு உதவி செய்ய மாட்டியா. உபத்திரவம் பண்ற அப்பா. ஒண்ணுமே தெரியாத அம்மா. நான் எப்படி முன்னேறுவேன். யாரைவச்சு முன்னேறுவேன். எனக்கு யார் துணை சொல்லு" என்று அவளைப் பார்த்துக் கேட்டான்.

பூக்கள் சரிந்து விழுந்தன. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. மூக்கு உறிஞ்சினான். மெல்ல கர்ப்பக் கிரஹம் விட்டு வெளியே வந்தான். எந்த யோசனையும் இல்லாமல் வருத்தம் கொடுத்த சோர்வோடு கோவிலைச் சுற்றினான்.

பசித்தது. எங்கே சோறு என்று பார்ப்பதற்கு இடது பக்கமுள்ள மண்டபத்திற்குப் போனான். மண்டபத்தின் மறுபக்கம் டோக்கனுக்கு ஜனங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு மூலையில் சாப்பாடு இறக்கி வைக்கப்பட்டிருந்தது. இலைக்கட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"ஆளுங்களை நிறுத்தி இலை போடச் சொல்லுயா. ஜனம் சாப்டுட்டு போகட்டும். சும்மா டோக்கனை கொடுத்துட்டு அலைய வைக்காதே."

யாரோ கத்தினார்கள்.

இலைபோட ஒரு ஆள் மட்டும் முயற்சித்த போது சற்றுப் பணக்காரரைப் போல தோற்றமளித்த ஒருவர் உரக்கக் கத்தினார்.

"மத்தவங்களெல்லாம் எங்க" என்று கேட்டார்.

இலைக்கட்டு எடுத்தவன் பேசாமல் நின்றிருந்தான்.

"மத்த ஆளுங்க எல்லாம் எங்கய்யா" என்று மறுபடியும் அவர் கத்த, "தண்ணி போடப் போயிட்டாங்க ஸார்" என்று அவன் சர்வசாதாரணமாக பதில் சொன்னான்.

"குடிச்சுட்டு வந்து பரிமாறுவானா. அப்படிப்பட்ட நாயெல்லாம் எனக்கு தேவையில்லை. நீயும் குடிச்சிருக்கியா" என்று கத்த அவன் இல்லையென்று தலையசைத்தான்.

"ஏம்பா... இங்க வா. இலை போடு. கொஞ்சம் உதவி செய்."

சட்டென்று திரும்பி எதனாலோ பெரியசாமியைப் பார்த்து அவர் அழைத்தார்.

பெரியசாமி காத்திருந்தவன் போல இலைக்கட்டை எடுத்துக் கொண்டான். மடமடவென்று இலையை நான்கு வரிசையாக வைத்தான். டம்பளரில் நீர் ஊற்றினான்.

பணக்காரன் தலை அசைத்ததும், வாழைக்காய் கறி வைத்துக் கொண்டு போனான். அடுத்தபடி அந்த இளைஞன்.

புடலங்காய் கூட்டு வைக்க, அவன் சோறு பரிமாறினான்.

சூடான சாதத்தின் நெடி மூக்கில் அடித்தது. சாம்பார் ருசி உமிழ்நீரை சுரக்க வைத்தது. ஆனாலும், அடக்கிக் கொண்டான்.

'நல்லா சாப்பிடட்டும், ஜனங்க சாப்பிடட்டும்' என்று உள்ளுக்குள் ஏனோ ஒரு குரல் வந்தது. அள்ளி அள்ளி போட ஆசை வந்தது.

"அடக்கமா போடு. ஏன் வாரிவாரி கொட்ற."

யாரோ ஒரு அம்மா வந்து கத்தினார்கள்.

"ரொம்ப ஏழை ஜனங்கம்மா. எப்போவோ ஒரு தடவைதான் இந்த மாதிரி விருந்து சாப்பாடு சாப்புடுவாங்க. அதனால நிறைய சாப்பிடுவாங்க. குறைச்சலா போட்டா மனசு கஷ்டப்படும்மா அவங்களுக்கு."

கோபமே இல்லாமல் நிதானமாகச் சொன்னான்.

அந்த அம்மாள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த எஜமானன் அருகே வந்தார்.

"நல்லா போடு. சாப்பிடட்டும். நீ சொல்றது சரி" என்று சொன்னார்.

"இதுங்களுக்கெல்லாம் சோறு போட்டே பழக்கமில்லை" என்று குற்றம் சொன்னவளை நோக்கி மெல்ல கடிந்து கொண்டார்.



பெரியசாமி அள்ளி அள்ளி போட்டான். இன்னும் கூட்டம் வந்து குவிந்தது. இரண்டாம் முறையும் சில பேர் சாப்பிடுகிறார்கள் என்று தெரிந்தது. கோபத்திற்குப் பதில் ஆச்சரியம் வந்தது.

இப்போதான் சாம்பார், ரசம் மூணும் சாப்பிட்டான். மறுபடியும் உட்கார்ந்துட்டான் பாரேன் என்று அந்த ஆளை உற்றுப் பார்த்து வியந்தான்.

என்னாயிற்று இன்று. எந்தக் கோபமும் வராமல் எதைத் தொட்டாலும் சந்தோஷமாகவே இருக்கிறது. எதைப் பார்த்தாலும் சிரிப்பாகவே இருக்கிறதே என்று தன்னைத்தானே வியந்து கொண்டான்.

அடுத்தபடி கோயில் ஊழியர்கள் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு வெஞ்சினங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது. உள்ளே சோறுக்கு போக சோற்றை யாரோ பக்கெட்டுகளில் அடைத்துக் கொண்டிருந்தார்கள்.

"எங்கத்திக்கு.." என்று கேட்க, "உனக்கென்ன வாயை மூடிகிட்டு இரேண்டா" என்று சொன்னார்கள்.

சமையற்காரர்கள் போல தோற்றமளித்த அவர்கள் பக்கெட்டுகளை வேகமாக வண்டியில் ஏற்றினார்கள்.

எல்லா பக்கெட்டுகளிலும் உணவுப் பொருட்கள் இருந்தன.

"அவ்ளோதான் சாப்பாடு ஆயிடுச்சு."

அந்தப் பெண்மணி குரல் கொடுத்தாள்.

பெரியசாமிக்கு பகீரென்று இருந்தது. தான் சாப்பிடவில்லை என்று உரைத்தது.

"ஏங்க... ஏங்க..." என்று அந்த சமையற்காரர்களை துரத்திக் கொண்டு வேனுக்குப் போனான்.

"நான் சாப்பிடலைங்க."

"என்னா அதுக்கு. இத்தினி பேர் சாப்பிடறபோது உட்கார்ந்து துன்ன வேண்டியதுதானே. எங்களுக்கு முந்தி பக்கெட் தூக்கினியே.இலைக்கட்டு எடுத்து போட்டியே."

ஒருவன் வேகமாக சீறினான்.

அவன் சீறலுக்குப் பயந்து பெரியசாமி பின்வாங்கினான்.

"போலாமா... போலாமா."

அந்த பணக்காரர் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர்கள் வீடு மெல்ல நகர்ந்து வாசலுக்குப் போயிற்று. பெரிய மஹேந்திரா வேனில் ஏறி உட்கார்ந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு பரிதாபமான முகத்தோடு அவரையே பெரியசாமி பார்த்துக் கொண்டிருந்தான்.

"அப்போ வரோம் தம்பி."

அவர் கைகூப்பினார்.

"பாவம் அந்தப்புள்ள சாப்பிடவேயில்லை."

அதுவரை குறை சொல்லிக் கொண்டிருந்த பெண்மணி சட்டென்று பேசினாள்.

"யாரு."

"இதோ சோறு போட்டானே அந்தப் பையன்."

"ஏன் சாப்பிடலை."

"ஏழைங்ககூட சாப்பிட மாட்டாரோ என்னவோ."

அந்த அம்மாள் தானாகவே பதில் சொன்னாள்.

"இல்லீங்க பசி எடுத்தது. சாப்பிடணும்னு நினைச்சேன். சோறு போட்டுகிட்டே இருந்தேனா மறந்துட்டேன். சமையக் காரங்க பக்கெட்ல சாப்பாடு எடுத்துகிட்டு போனாங்க. போய் கேட்டேன். அவங்க முடியாதுன்னு சொல்லிட்டுப் போயிட் டாங்க."

அவன் நிதானமாக எந்தக் குறையுமில்லாமல் பதில் சொன்னான்.

"வா... வண்டியில ஏறு."

அந்த வேனில் முன்பக்கத்துக் கதவை திறந்து வைத்து தன் இடத்திற்கு அடுத்த இடம் அந்தப் பணக்காரர் கொடுத்தார்.



திருவேற்காட்டிலிருந்து வண்டி கிளம்பி பெரிய வீதியில் நுழைந்தது. ஒரு ஹோட்டலில் நின்றது. எல்லாப் பெண்மணி களும் இறங்கினார்கள்.

"வீட்டுக்கு போனவுடனே போன் பண்ணி சொல்லிடணும். நானூத்தி நாப்பது பேருக்கு சாப்பாடு போட்டோம்னு."

"இன்னும் பன்னெண்டு பேர் சாப்பிடப்போறேமே இதையும் சேர்த்து சொல்லுங்க."

"ஆமாம். ஆமா. நானூத்தி அம்பத்து ரெண்டு பேருக்கு சாப்பாடு போட்டோம்னு சொல்லிடணும்."

கோவிலில் போட்டதைவிட இங்கு உணவுப் பதார்த்தங்கள் வாசனையாக இருந்தன. பாயசமும், ஜாங்கிரியும் முதலில் பரிமாறப்பட்டது. பேச்சும், சிரிப்புமாய் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

திருவேற்காடு கோவிலில் அன்னதானம் செய்தது வேறு யாருக்கோ என்பது புரிந்தது. அந்த வேறு யாரோ என்பவர் கப்பல் வேலையில் இருக்கிறார் என்பது சொல்லப்பட்டது.

"போனவாரமே வரேன்னான்... காணும். எப்போ வரப் போறான்னே தெரியலை." என்று அவர்கள் ஒரு கவலையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர் நன்றாக சம்பாதித்த அந்த சம்பாதிப்பில் இப்படி அங்கங்கே கோவிலுக்கு அவர் பெயரால் செய்து கொண்டிருப் பதாகவும் அவன் புரிந்து கொண்டான். திரும்பி அந்தப் பணக்காரர் பெரியசாமியைப் பற்றி விசாரித்தார்.

"அழகா காலேஜ்ல பி.ஏ.வாவது படிச்சுருக்கலாமில்ல. வெறும் ப்ளஸ்டூ படிச்சிட்டு என்ன பண்ணப்போற நீ. கரஸ் பாண்டென்ஸ் கோர்ஸ் படிச்சாக்கூட மதிப்பாயிடுமே."

"காசு இல்லீங்க."

"அந்த மூணு வருஷம் என்னாதான் பண்ணீங்க."

"ரெண்டு மூணு இடத்துல வேலை செய்தேன்."

"என்ன வேலை."

37680 5246987 ...சாந்தூர், சென்னை - 93.

"ஒரு ஐயர் வீட்ல காவலா இருந்தேன். வீட்ல மூணு லேடீஸ் இருப்பாங்க. வீடு ஊருக்கு தள்ளி இருக்கும். அதனால என்னை காவலுக்கு வச்சுட்டுப் போனாங்க. ஐயா... வந்தபிறகு திரும்பி வந்துடுவேன்."

"அந்த வேலை என்னாச்சு."

"அவங்க எல்லாரும் வெளியில போயிட்டாங்க. அதனால எனக்கு வேலை போயிடுச்சு."

"அதுக்கப்புறம் எங்கவேலை செய்த."

பெரியசாமி பதில் சொல்ல வெட்கப்பட்டான்.

"சொல்லு.. பரவாயில்லை... திருடலை, பொய் சொல்லலை, ஏமாத்தலை, வேலைதானே செய்த. எந்த வேலை செய்தாலும் மரியாதை தாண்டா. என்னா செய்த."

"ஹோட்டல்ல சர்வர் வேலை செய்தேன்."

"இதுக்கு ஏண்டா இவ்வளவு வெட்கப்படற. ஒரு காலத்துல நான் டீ அடிச்சுக்கிட்டிருந்தேன் தெரியுமா. இவங்களுக்கே தெரியாது."

பின்னே உள்ள பெண்களை சுட்டிக் காட்டினார்.

பெண்கள் அவரை வியப்போடு பார்த்தார்கள்.

"ஏழு மாசம் டீ அடிக்கிற வேலை.அங்க தகராறு வந்துடுச்சு. யாரோ ரெண்டு பேர் சண்டை போட்டு பாய்லரை சாய்த்தி விட்டான். என் தொடை, வயிறு எல்லாம் வெந்து போச்சு. ஆஸ்பத்திரியில மூணுமாசம் இருந்து அப்புறம் டீ வேலையே வேணாம்னு வேற வேலைக்கு போயிட்டேன். டீக்கடையில வேலை செய்ததுதான் மனுஷாளை புரிஞ்சுக்கறதுக்கு ரொம்ப உதவி செய்தது. என்னை சுத்தி ஆயிரம் கலாட்டா நடக்கும். பேச்சு நடக்கும். சிரிப்பு நடக்கும். அழுகை நடக்கும். எல்லாத்தையும் பார்த்துக்கிட்டே மடமடன்னு டீ போட்டுகிட்டு இருக்கணும். சரி. இருக்கட்டும். என் வீட்டுக்கு வேலைக்கு வந்துடறியா."

அவர் சட்டென்று கேட்க அந்தப் பெண்களும், அவனும் திகைத்தார்கள்.



"என்ன வேலை ஸார்."

"இப்போ என்னா சொன்னியோ அதே வேலைதான் கூடமாட ஒத்தாசையா இருடா."

"சின்னப் பொண்ணுங்களெல்லாம் இருக்கு. டக்குனு சொல்றியே." கோவிலில் மறுத்துப் பேசிய பெண்ணே இப்போதும் எதிர்ப்பாகப் பேசினாள்.

"இவனெல்லாம் தப்பு பண்ணமாட்டான்."

"எப்படி சொல்றீங்க."

"இவன் மூஞ்சியை வச்சுகிட்டு சொல்லிடலாம். சோறு சாப்பிடறதுக்குன்னு வந்துட்டு, சோறு சாப்பிடாத தானே முன்னால வந்து பரிமாறிட்டு, பரிமாறின பிறகும் சோறு இல்லைன்ற போதும் அதை பெருசா சொல்லாத சாதாரணமா நான் சாப்பிடலைன்னு சொல்றானே. அது எவ்வளவு பெரிய விஷயம். அவனுக்கு பசின்னு மூஞ்சிய பார்த்தா தெரியலை. அந்தப் பசியை பொறுத்துகிட்டு மேற்கொண்டு ஒண்ணும் கேட்காத இருந்தானே. மனசு அடக்கமா இருக்கறவனாலதான் முடியும். இத்தினி வேலை வாங்கினோமே இவனுக்கு எதுனா கொடுத்தோமா. நம்மவீட்டு பொம்பளைங்க எவளாவது குனிஞ்சு பரிமாறினாளா. இவன் யாரோ அன்னியம். எத்தினி வேலை செய்திருக்கான். சமையக்காரனை காணோம். பக்கெட்டை இறக்கி வச்சுட்டுப் போயிட்டான். இந்தப் புள்ளயும் நானும் பரிமாறினதுதானே சோறு. உன் பொண்ணுங்க ரெண்டும் குனிஞ்சு ஒரு டம்பளர் வச்சதுங்களா. சும்மா டப்புனு பேசாதே."

அவர் கோபமாகச் சீற, அந்த இடத்தில் ஒரு அமைதி நிலவியது.

"சரி... உன் இஷ்டம். நீ கொண்டாடிக்கோ. அதுக்காக என் பொண்ண குறை சொல்லாத."

"நிச்சயமா சொல்லுவேன். எதுக்கு கோயிலுக்கு வந்திருக்கறோம். உனக்கே அறிவில்லாதபோது உன் பொண்ணுக்கு எப்படி அறிவிருக்கும். எல்லாரும் வேண்டுதலுக்காக வந்திருக்

கோம். அங்க கொசகொசன்னு பேச்சு. என்னாதான் பேசுவாங்களோ. நேத்து ராத்திரி படத்தைப்பத்தி பேச்சு. இன்னிக்கு ராத்திரி பார்க்கப்போற படம்பத்தி பேச்சு. வேற ஒண்ணுமே இல்லையா வாழ்க்கையில."

"டி.வி. பார்க்கறத குறை சொல்லாதீங்க ஸார். அந்த ஒரு விஷயமும் இல்லைன்னாக்க பொம்பளைங்களுக்கு மனசு ரொம்ப பேஜாராயிடும். எங்கப்பா குடிகாரர். தினம் ரகளை பண்ணுவாரு. எங்கம்மா எட்டரை, ஒன்பது ஆச்சுன்னா பக்கத்து வீட்ல போய் டி.வி. பார்ப்பாங்க. பத்தரை மணி வரைக்கும் பார்த்துட்டு வந்து படுப்பாங்க. படுக்கறதுக்கு முன்னாடி இந்த டி.வி. சீரியலெல்லாம் என்னான்னு தனக்குத்தானே உரத்த குரல்ல பேசிப்பாங்க. ஐயோ பாவம் அவ நிலைமையை பார்த்தியா, என் நிலைமையைவிட மோசம் அப்படின்னுதான் சொல்லுவாங்க, இது ஒண்ணுதான் ஸார் ஆறுதல். நம்ம வீட்ல நடக்கறதுதான் ஸார் காட்டறான். அதைப் பார்த்துட்டு நான் மட்டும் கஷ்டப்படலை. உலகத்துல நிறைய பேர் கஷ்டப் படறாங்கன்னு மனசை தேத்திக்கறாங்க. இதுல என்ன தப்பு இருக்கு. இதைப்போய் ஏன் கோவமா பேசறீங்க."

மறுத்துப் பேசிய அந்தப் பெண்மணிக்கு சட்டென்று கண்ணில் நீர் துளிர்த்துவிட்டது.

அந்த மனிதரும் மௌனமாக இருந்தார்.

சற்று நேரம் கழித்து "உங்கப்பா குடிப்பாரா" என்று கேட்டார்.

"ஆமாம் ஸார். தினம் குடிப்பாரு."

"நீ குடிப்பியா."

"இல்லை ஸார். எங்கம்மாகிட்ட சத்தியம் பண்ணி கொடுத் திருக்கேன். 'வாழ்நாள்ல என்ன நேரம் வந்தாலும் சரி. எந்த ஒரு பெரிய இடத்துக்கு போனாலும் சரி. குடிக்கறதுங்கறது இல் லை'ன்னு சத்தியம் பண்ணியிருக்கேன்... யார் கொடுத்தாலும் குடிக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க அம்மா. சரின்னு சொல்லியிருக்கேன்."

"டிபிக்கலா நம்ம கேஸு."



அவர் கை உதறி உரத்த குரலில் பேசினார்.

"என்னா ஸார் சொல்றீங்க."

"அவங்க அப்பா பெரிய குடிகாரரு. நிறைய சொத்தை குடிச்சே அழிச்சவர். இவரு தலையெடுத்துதான் வீட்டு பொண் ணுங்களுக்கு கல்யாணம் பண்ணி கொடுத்ததே."

"துளுவ வேளாளர்."

"நாங்க செங்குந்தர்."

ஒருவருக்கொருவர் ஜாதி கேட்டுக் கொண்டார்கள். பெயர் கேட்டுக் கொண்டார்கள்.

"பயப்படாத. நானும் உன்னை மாதிரியேதான் இருந்தேன். கஷ்டப்பட்டு உழைச்சோம்னா நிச்சயமா ஜெயிச்சுடலாம். அடிக்கடி வந்து போயிகிட்டிரு."

அவர்கள் வண்டியை நிறுத்தி வழியில் இறக்கி விட்டார்கள். வீட்டு விலாசம் கொடுத்தார்கள்.

"வந்து பாரு. பத்து நாள் கழிச்சு பாரேன்" என்று சொன்னார் கள்.

"காலையில தாண்டா நினைச்சேன். சாயந்தரம் வந்துட்ட, கொஞ்ச நேரம் இருக்கலாமா."

"இருக்கலாம் ஸார்."

"சாயந்தரம் என் தம்பி வராண்டா. ஏர்போர்ட்டுக்கு போய் கூட்டிகிட்டு வரணும். எப்படிடா பொட்டிய தூக்கி வைக்கப் போறோம்னு பார்த்தேன். நீயே வந்துட்ட நல்லது வா."

பிற்பகல் அவனுக்கு நல்ல உணவளித்து அழைத்துக் கொண்டு போனார்கள். நான்கு மணிக்கு விமானம் வந்தது. வெளியே காத்திருந்து ஆறு பெட்டிகளோடு வந்து தம்பியை வரவேற்று அணைத்து அறிமுகப்படுத்தி அந்தப் பெட்டியை காரில் ஏற்றி வீட்டிற்கு வந்தார்கள்.

"இவன் பெரியசாமி. திருவேற்காட்ல உனக்காக சோறு போட் டோமே. அப்போ அறிமுகமானான். நம்ம ஜாதிதான். ரொம்ப

சின்னவயது. ரொம்ப நல்ல புள்ள. இது தாமோதரன் என் சொந்த தம்பி."

"நல்லா சாப்பாடு போட்டீங்களாண்ணே."

ஆவலாக தம்பி கேட்டான்.

"நானூத்தி அம்பத்திரெண்டு பேருங்க. எல்லாரும் நிதானமா, நிறைய சாப்பிட்டாங்க. மூணுபேர் ரெண்டாந்தடவையும் சாப்பிட்டாங்க. அப்போ கத்தரிக்காய் குழம்பு, எலுமிச்சம்பழம் ரசம், வாழக்காய் கறி, புடலங்காய் கூட்டு, நல்ல மோரு, அப்பளம் எல்லாம் போட்டாங்க."

"எவ்ளோ ஆச்சு."

"ஐயாயிரம் ரூபா."

"இன்னொரு தடவை போட்டுடலாமா."

"இப்போதானே போட்டோம்."

"இன்னொரு தடவை போட்டுடலாம். நான் வேண்டிகிட்டிருக்கேன்."

"என்னத்துக்கு."

"வேற கம்பெனி மாறப்போறேண்ணே. குவைத் போகப்போறேன். தொன்னுத்தஞ்சு பர்செண்ட் ஓகே. நான் சொல்ற காசு கொடுத்தாக்கா போயிடலாம்."

"ரொம்ப வெய்யில் ஆச்சேடா."

"வெய்யில்தான். ஆனா, நிலத்துல வேலை செய்யலாம். கடல்ல வேலை செய்யறதுல பெரிய ரிஸ்க் இருக்குண்ணே. ரெண்டு மூணுதடவை கவிழ்ந்துடற மாதிரி ஆயிப்போச்சு. உயிர் பிழைப்பேனான்னே பெரிய கேள்வியாப்போச்சு."

"ஐயோ... அப்புறம்."

"அதை இன்னொரு தடவை சொல்றேன். இந்த குவைத் மட்டும் கிடைச்சதுன்னா நான் இன்னொரு ஐயாயிரம் ரூபா தரேன். மறுபடியும் சாப்பாடு போட்டுருங்க."

"அது பேஜாரான வேலைடா."

"ஏன்... பெரியசாமி ஹெல்ப் பண்ண மாட்டாரா."



"நான் பார்த்துக்கறேங்க... நீங்க ஏன் கவலைப் படறீங்க."

அவன் சந்தோஷமாகச் சொன்னான்.

அந்த மனிதர் திரும்பி பெரியசாமியைப் பார்த்தார்.

சோறு போடுவதில் பெரியசாமிக்கு உள்ள சந்தோஷம் அவருக்கும் தொற்றிக்கொள்ள, அவருக்கு பெரியசாமிக்கும் சட்டென்று ஒரு ஸ்நேகம் வந்தது.

"பெரியசாமி வேற எதுனா வேலை இருக்கா."

"ஒண்ணுமில்லை ஸார்."

"என்கூட இரேன். தினம் கார்த்தால வந்துடு. எங்கூட சுத்திகிட்டிரு. ராத்திரி விட்டுக்கு போயிடு."

"சரிங்க. உங்ககூட சுத்தறதுதான் வேலையா. வேறு ஏதாவது இருக்குமா."

"எதுக்கு கேட்கறடா."

"துடைக்கறது, பெருக்கறதுன்னா அதுக்கு ஒரு மாதிரி டிரஸ். உங்களோட சுத்தறதுன்னா அது வேற மாதிரி டிரஸ். அதுக்குத்தான் கேட்டேன்."

"நல்லதா போட்டுகிட்டு வாடா."

வங்கிக்கணக்கு மாற்றுவது, சாமான்கள் வாங்கிப் போடுவது என்று அவருக்குப் பல வேலைகள் இருந்தன.

எப்பொழுதுமே வெளியூரில் நாலைந்து ஆட்கள் புடைசூழ வேலை செய்யப் பழக்கப்பட்டவர் போலும் இங்கே தனியாக அவுருக்கு எந்த வேலையும் செய்ய முடியவில்லை.

பெரியசாமி அவருக்கு உதவியாக இருந்தான். ஒரு நாள் காலை பெரியசாமி அந்த வீட்டுக்கு போகும்போது அங்கு எல்லோரும் சிரித்து வரவேற்றார்கள்.

தாமோதர முதலியாருக்கு குவைத்தில் வேலை கிடைத்து விட்டது என்று கையில் மைசூர்பாக்கோடு சொன்னார்கள்.

"அரை அரை கிலோ நாலு டப்பா வாங்கிக்கோ. ரெண்டு கிலோவா ஒரு டப்பா வாங்கிக்கோ."

பெரியசாமி சைக்கிளை எடுத்துப்போய், மறுபடியும் இனிப்பு வாங்கி வரச்சென்றான்.

"நீங்க லட்சுமிநாராயணனா... மெட்ராஸ்லேர்ந்து வரீங்களா. மெட்ராஸ்ல உங்க அட்ரஸ் சொல்லுங்க ஸார். நான் இன்னும் வேலைய ரிசைன் பண்ணலை ஸார். வேலையை ரிசைன் பண்ணிட்டு வரத்துக்கு ஒரு மாசம் ஆகும்."

"என்னான்னு சொல்லுங்க ஸார்."

"குக் வேணுமா... ஸார் எனக்குத் தெரிஞ்சு ஒரு பையன் இருக்கான். பேர் பெரியசாமி. என்னோடதான் இருக்கான். நல்லா சமைப்பான் ஸார். கூடமாட ஒத்தாசையா இருப்பான். வெஜிடேரியன், நான்வெஜிடேரியன் ரெண்டுமே பண்றான். ரொம்ப நம்பிக்கையான பையன். நீங்க தங்கற இடத்துல சமைக்கணும். அப்படித்தானே. சரியா வருவான் ஸார். பார்த்துப்போம். எத்தனை பேர் உபயோகப்படுத்திக்கறோம்கறத வச்சுகிட்டு ஷேர் பண்ணிப்போம் ஸார். சம்பளம் நாம சொல்றது தான். நீங்க ஏன் அதைப்பத்தி கவலைப்படறீங்க. கஷ்டப்பட்டு சம்பாதிக்க றோம். சாப்பாடு சௌகரியமா இருக்கணும் ஸார். அதைப் பார்த்துப்போம்."

பெரியசாமி திகைத்தான்.'எந்த பெரியசாமி. நானா என்பது போல பார்த்தான்.

"நீதான்ப்பா..."

"எனக்கு அவ்வளவு ஒண்ணும் சமைக்கத் தெரியாது ஸார்."

"கத்துக்கோ. ஒரு மாசம் இருக்குல்ல, மூணு நாள்ல கத்துக் கலாம்யா. சாம்பார், ரசம், சாதம் வைக்க கத்துக்கோ. பருப்பு தொகையல் அரைக்க கத்துக்கோ. நம்ம வீட்ல அண்ணன் பொண்ணு ரெண்டும் நல்லா சமைக்குங்க. எங்க அக்கா கூட நல்லா சமைப்பா. உப்பும், புளிப்புமா சிக்கன் பிரியாணி பண்ணுவா. அத்தினி டேஸ்ட்டா இருக்கும். உங்கிட்ட பாஸ்போர்ட் இருக்கா."

"இல்லை ஸார்."



"நான் வாங்கித்தரேன். ஏஜண்ட் மூலமா டக்குனு கிடைச் சுடும். உன் எஸ்.எஸ்.எல்.சி. சர்ஃபிகேட், ரேஷன்கார்டு எல்லாம் எடுத்துகிட்டு வா."

அங்கே லட்சுமிநாராயணனும், இன்னும் சில இன்ஜினியர் களும் சேர்ந்து இன்ஜினியர்கள் சங்கம் ஆரம்பித்தார்கள். தலை வர், உபதலைவர், செயலாளர், தொழிலாளர்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தாங்கள் பெரியசாமிக்கு பொறுப் பேற்பதாக விசா எடுத்து அனுப்பினார்கள். ஒரு வருடத்திற்கான வேலை உத்தரவாய் அது வந்தது. ஐயாயிரம் ரூபாய் சம்பளம் என்று இந்திய ரூபாயில் குறிப்பிடப்பட்டிருந்தது. பெரியசாமி மகிழ்ச்சியில் திண்டாடினான். மறுபடியும் திருவேற்காடு ஓடிப் போய் விழுந்து வணங்கினான். அம்மனையே பார்த்துக் கொண் டிருந்தான்.

'உன் இடத்துல நிறைய பேருக்கு சோறு போட்டேன். என்னை உடனே சமையல்காரனா மாத்திட்ட. சமையக்காரனா இருக்கறதுக்கு மட்டும் நான் விரும்பலை. இன்னும் பெரியா ளாகணும். ரொம்ப பெரியாளாகணும் இதுமாதிரி நானூறு பேருக்கு, ஐநூறு பேருக்கு, ஆயிரம் பேருக்கு சோறு போடற வனா நான் மாறணும். அந்த அளவு சம்பாதிக்கணும். என்னைக் காப்பாத்து. என்னைக் காப்பாத்து.'

கைகூப்பி உள்ளுக்குள் உரத்த குரலில் கூவினான்.

யாருக்கு மாலை போடணும். இவருக்கா.. இவருக்கா என்று கேட்டுக் கொண்டு வந்து அவன் கழுத்தில் மாலை போட் டார்கள்.

"அவருக்கு இல்லைங்கய்யா... அவருக்கு" என்று அடுத்த ஆளைக்காட்ட அவன் மாலையைக் கழட்ட முற்படும்போது அடுத்த ஆள், "இருக்கட்டும். என்னை கை காண்பிச்சாலும் உனக்குன்னு விழுந்துடுச்சு. மாட்டிக்கோ. நல்லாயிரு." யாரோ சொன்னார்கள்.

அவளுக்கு நன்றி சொல்வதா... இவருக்கு நன்றி சொல் வதா...

அவன் திண்டாடினான், கைகூப்பி கண்மூடி தனக்குள் இருக்கின்ற ஒரு அம்சத்திற்கு நன்றி சொன்னான்.

"இதுக்கு என்ன அர்த்தம்."

"உனக்கு மரியாதை கிடைக்குது. நீ எல்லார்கிட்டயும் மரி யாதையா இரு. எல்லார்கிட்டயும் அக்கறையா இரு. உன்னை வேலைக்கு கூட்டிகிட்டு போறாரு தாமோதரன். சமைக்க கத்துக் கோன்னு சொல்லிட்டாரு. சமைக்க கத்துக்கணும்."

ஓடிப்போய் அம்மாவிடம் சொல்ல அம்மா சந்தோஷப் பட்டாள். கட்டித் தழுவிக் கொண்டாள்.

"எனக்கு நாலு நாளா கனவுடா. நீ டிரெய்ன்ல ஏறி போறா மாதிரி கனவு. சம்பாதிக்கப்போறேன்னு சொல்லிட்டுப் போற. நான் சரின்னு சொல்றதா வேணாம்னு சொல்றதான்னு அலை மோதறேன். வண்டி கிளம்புது. பின்னாடியே ஓடியாறேன். ஒரே அழுகை எனக்கு. இவனும் என்னை விட்டு போறானே... இவ னும் என்னை விட்டுப் போறானேன்னு... எதிர்வீட்டு மரகதம் வந்து எல்லாம் நல்லதுக்குத்தான். போய் நிறைய துட்டு எடுத்துகிட்டு வருவான் இரு. அப்படின்னாங்க. யாருமே இல்லை அந்த ப்ளாட் பார்ம்ல. நான் மட்டும் உட்கார்ந்திருக் கிட்டிருக்கேன். வண்டி எப்ப திரும்பி வரும்ன்னு ரொம்ப துக் கமா இருந்ததுடா. நான் எழுந்ததும் அழுதுட்டேன்போயேன்."

அவன் அம்மாவின் கைகளை கோர்த்துக் கொண்டான். விரல்களில் முத்தமிட்டான். அம்மாவின் தலையைத் தடவிக் கொடுத்தான். இறுக்க அணைத்துக் கொண்டான்.

"நான் உனக்கு டீ போடச் சொல்லித்தரேன். எனக்கு எங்கம்மா சொல்லிக் கொடுத்தாங்க. என்னிக்காவது உங்கப்பா ஒழுங்கா வீட்ல சாப்பிட்டிருக்காரா. நானும் நல்லா சமைக்கிறவ தான். ஆனா, எனக்கு எப்பவோ வெறுத்துப் போச்சு சமைக் கிறது."

மறுநாள் டீ போடுகின்ற சூட்சுமங்களை அவள் சொல்லிக் கொடுத்தாள். இட்லிக்கு அரைப்பது பற்றி சொல்லிக் கொடுத் தாள். மாவு எப்படி அரைபட வேண்டுமென்றாள். இட்லி அன்று



செய்தாள். இட்லியை பொறிக்கலாம் என்றும், ஆக்கலாம் என்றும் விவரித்தாள்.

பெரியசாமி ஒரு நோட்புக்கில் குறித்துக் கொண்டான்.

தாமோதர முதலியார் வீட்டிற்குப் போனான். அங்கு அந்தப் பெண்கள் தயாராக இருந்தார்கள். நிறைய ஆங்கிலத்தில் பேசி னார்கள்.

"லெட் அஸ்குக்" என்று அவள் கூப்பிட அவன் பேசாமல் நின்றான்.

"ஏய் உள்ளவான்னு சொல்றேனே காதுல விழலயா."

அவள் மறுபடியும் உரக்கக் கத்தினாள்.

"ஏதோ இங்கிலீஷ்ல சொன்னீங்க. என்னா சொன்னீங்கன்னு புரியலை" என்று சொல்ல அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இங்கிலீஷ் கத்துக்கோ பெரியசாமி. நாங்க பேசற இங்கி லீஷை உத்துப்பாரு. உனக்கும் வந்துடும்."

அவர்கள் ஆங்கிலமும் சொல்லிக் கொடுத்தார்கள். அன் றைக்கு சாம்பார், ரசம் என்று கற்றுக் கொண்டான். இருபது நாளில் முறுக்குப் பிழியவும், போண்டா உருட்டிப் போடவும் பழகினான்.

தாமோதரனைப் பார்த்து நாற்பத்து மூன்றாம் நாள் லட்டு தட்டுகிற ஜாரணியோடும், பெரிய அகப்பை யோடும், சமையல் குறிப்புகளோடும், புதிதாக சமையல் கற்றுத்தரும் சமையல் புத்தகங்களோடும் விமானம் ஏறினான்.

ஜன்னல் வழியாக சென்னை விமானநிலையம் பார்த்தான்.

மறுபடியும் எப்பொழுது வரப்போகிறோம் என்ற ஒரு ஏக்கம் பிடித்துக் கொண்டது. அம்மாவின் முகம் ஞாபகம் வந்தது.

பத்துப் பனிரெண்டு பேருக்கு சமைச்சுப் போடணும். ஒவ் வொருத்தரும் ஒவ்வொரு ரகம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கூச்சல். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு அதிகாரம் செய்வாங்க. பொறுமையா இரு. ரொம்ப ரொம்ப பொறுமையா இரு. வேலை செய்யறதுக்கு வெட்கப்படாத. வேலை செய்யறதுக்கு கூச்சப்

படாத. எந்த நேரம் தட்டி எழுப்பினாலும் டப்புனு எழுந்திரு. திருவேற்காடு அம்மன் படத்தை தினம் துடைச்சு சந்தன குங்குமம் வை. முடிஞ்சா பூ போடு.

சிறிய படம் கிடைக்கவில்லை. ஒரு அடிக்கு ஒன்னேகால் அடி படம் பெரிய முகத்தோடு கூடிய படம் கிடைத்தது. பெட்டிக்கு அடியில் அதை வைத்துக் கொண்டான். சட்டைப்பையில் வைத்துக் கொள்வது போல ஒரு படத்தை எடுத்துக் கொண்டான்.

முழுபேண்ட், அரைநிக்கர், நல்ல செருப்பு, சட்டை, டி ஷர்ட் எல்லாம் தாமோதரன் வாங்கிக் கொடுத்தார்.

விமானம் மேலேறி கிளம்பும்போது அவனுக்கு நம்பவே முடியவில்லை. திரும்ப தாமோதரனை எட்டிப்பார்த்தான். என்ன என்பதுபோல கேட்டார். இரண்டு கைகளையும் அவரை நோக்கி கூப்பினான். கண்ணில் நீர் வழிந்தது.

"ச்சீ.. போடா.. எதுக்கு அழுவற. எல்லாருடைய வெற்றிக்குக் காரணம் கடவுள்டா. அவரு அவர் வேலைய ஒழுங்கா செய்யறாரு. நாம் நம்ம வேலையை ஒழுங்கா செய்வோம். அவ்ளோதான்."

குவைத் ஏர்போர்ட்டில் காலடி வைத்ததும் அவனுக்கு திடுக்கிட்டுப் போயிற்று.

என்ன இது. ஏர்போர்ட்டா, தேவலோகமா. இத்தனை கடைகளா. இத்தனை விளக்குகளா.

ஏர்போர்ட் முழுவதும் ஒரு பளபளப்பு. ஒரு வாசனை.

அவன் தரையில் கால் வைக்க வெட்கப்பட்டான். நீண்ட தூரம் நடந்து வந்து கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லி ஏர்போர்ட்டில் விளிம்புக்கு வர அரைமணிநேரம் ஆகியது.

"வாடா... வெங்கடேசா." லட்சுமிநாராயணன் உரக்கக் கூவினான்.

லட்சுமிநாராயணனைப் பார்த்தவுடன் அவனுக்கு பிடித்து விட்டது.

"என் பேர் வெங்கடேசன் இல்லை ஸார். பெரியசாமி."



"எங்களுக்கு பெரியசாமி வெங்கடேச பெருமாள். அதான் சொல்றேன்."

லட்சுமிநாராயணன் சொல்ல அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

அவன் சிரிப்பு லட்சுமிநாராயணனுக்கு பிடித்து விட்டது. மனசில் கள்ளமில்லாதவனுக்குத்தான் இப்படி கலகலவென்று சிரிக்க முடியும்.

பையன் நல்லவனாக இருக்கிறான். கெட்டிக்காரனாக மிக எளிதாய் மாற்றிவிடலாம்.

"ஸ்வட்டர் வச்சுண்டிருக்கியா."

"இல்லை ஸார். சட்டை வச்சிருந்தேன்."

"ஸ்வட்டர் வேணும்டா. இல்லைன்னா குளிர்ல உடம்பு விரைச்சுடும். நான் வாங்கித்தரேன்."

லட்சுமிநாராயணன் தன்னுடைய காரில் அவனை ஏற்றிக் கொண்டார். பெரிய படகுகார். அவனுக்கு பக்கமாய் மற்ற இன்ஜீனியர்களும் உட்கார்ந்து கொள்ள வண்டி புயல்மாதிரி கிளம்பியது. பெரிய சாலைகளில் வழுக்கிக் கொண்டு ஓடியது. வண்டியின் வேகம் வியப்பாக இருந்தது. குவார்ட்டர்ஸுக்குள் ஏறியவுடன் தான் உடம்பில் சூடு பரவியது.

அவன் தன் பெட்டியைத் திறந்து சமையல் அறையின் ஒரு பக்கத்திலேயே தன் துணிமணிகளை அடுக்கிக் கொண்டான். சமையல் அறை மேடையிலேயே திருவேற்காடு அம்மன் படத்தை மாட்டினான். விபூதிக் குங்குமத்தை கிண்ணங்களில் நிரப்பி வைத்தான்.

"சபாஷ்... சாமி படம் மாட்டிட்டியா."

ஒரு இன்ஜீனியர் வந்து முதுகு தட்டிக் கொடுத்தார்.

"இப்போ கொஞ்சம் கசகசன்னு கூட்டமா இருக்கு. ஒரு ரெண்டு மூணு வாரத்துல குறைஞ்சுடும். வெவ்வேறு இடத்துக்குப் போயிடுவாங்க. அதுவரைக்கும் கொஞ்சம் அட்ஜஸ் பண்ணிக்கோ. அப்புறம் ரூமுக்கே வந்துடலாம். துணி துவைக்கத் தெரியுமா."

"தெரியும்."

"வாஷிங்மெஷின்ல தோய்க்கத் தெரியுமா."

"தெரியும் ஸார். பார்த்திருக்கேன். இது எப்படின்னு தெரியலையே. இந்த மெஷின்ல எப்படின்னு சொல்லிக் கொடுத்தீங்கன்னா துவைச்சுடுவேன் ஸார்."

"இது துணி உலர்த்தற இடம். இந்த குழாய்ல தண்ணி வரும். இந்த குழாய் வழியா வெளியே போயிடும். குழாயை திறந்து விட்டு சோப்பு போட்டு உங்களுக்குள்ள துணிபோட்டு இந்த ஸ்விட்ச் போட்டா போதும். தானா துவைச்சு சரி பண்ணிடும். இதோ பார் க்ளீனிங் லிக்யூட். இதைப்போட்டு வாஷ்பேசின் துடைச்சுடலாம். எல்லா டம்பளருக்கும் இதை தண்ணியில கரைச்சு தடவி நல்ல தண்ணியில கழுவி திருப்பி நல்ல துணியில துடைச்சா பளபளன்னு இருக்கும். வீடு சுத்தமா வச்சுக்க தம்பி."

அவர் பிரியத்தோடு பேச அவர் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அத்தியப்பன் என்று சொன்னதும் அவரோடு கைகுலுக்கினான்.

"ரொம்ப குளிருது ஸார்."

"இப்போ குளிரும். வெய்யில் நாள்ல தாங்க முடியாத வெய்யில் இருக்கும். ஏ.சி. இருக்கறதுனால வெயிலும் தெரியாது. கடை கண்ணிக்கு போறதா இருந்தா காலையிலயே போயிட்டு வந்துடு. இல்லை, ராத்திரி போய்க்கலாம். பகல்ல வெளிய தலை காட்டாத. தாங்காது. உடம்புல கட்டி வந்துடும்."

"ஸார் சமைக்கறதுக்கு சாமான் வாங்கணும்."

"வா போகலாம்."

அவன் குளித்துவிட்டு சாமி கும்பிட்டான். டீ போட்டு அவருக்கு கொடுத்தான்.

"நல்லாயிருக்குடா டீ. கரெக்டா போடற. மசாலா போடலையா."

"மசாலான்னா."



"இதோ பார் இது ஒரு சிட்டிகை போட்டு கலந்துடு. ஜோராக இருக்கும். முட்டை அடிக்கற மாதிரியான ஒரு கருவி இருக்கும். இதை டீக்குள்ள வச்சு எடுத்துட்டீன்னா நல்லா மிக்ஸ் பண்ணிடும். என்னென்னமோ மிஷின் இருக்கு. சாப்பாடு சூடு பண்ற மிஷின் இருக்கு. ஒரு நிமிஷத்துல வென்னீர் போட மிஷின் இருக்கு. ஜூஸ் பிழியற மிஷின் இருக்கு. வா கடைக்குப் போகலாம்."

அவன் அத்தியப்பனோடு காரில் ஏறி கடைக்குப் போனான். கார் ஓட்டும் பாகிஸ்தானியோடு கை குலுக்கினான்.

காலி பிளாஸ்டிக் ஜாடிகள் வாங்கிக் கொண்டான். சாமான்கள் மிகத்தரமாக இருந்தன. அரிசி அற்புதமாக இருந்தது.

"எல்லாத்துக்கும் பாஸ்மதி ரைஸ்தான். பொன்னியெல்லாம் இட்லி தோசைக்குத்தான். சமைக்கறது டக்குனு பிடிபடாது. பார்த்து சோறு வடி" என்று அவனுக்குச் சொன்னார்.

பட்டாணியைப் போட்டு கோஸ் நறுக்கி சிறுசிறு பீன்ஸ் துண்டுகள் நறுக்கிப் போட்டு கிச்சடி செய்தான். தேங்காய் சட்டினியும், புதினா சட்டினியும் செய்தான். பாட்டில் திறந்து கிண்ணத்தில் ஊறுகாய் நிரப்பிக் கொண்டான். பெரிய ட்ரேயில் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான்.

இன்ஜீனியர்கள் ஆவலாக உட்கார்ந்திருந்தார்கள்.

"டேய்... நல்லாயிருக்குடா வாசனை. நல்லா சமைக்கறியே."

கிச்சடியை அள்ளி தட்டில் போட்டுக் கொண்டார்கள். சட்டினியையும், புதினாவையும், ஊறுகாயையும் தொட்டுக்கொள்ள எடுத்துக் கொண்டார்கள். ஒரு உருண்டை காரத்தில் தோய்த்து வாயில் போட்டுக் கொண்டார்கள்.

"க்ளாஸ்.. ரொம்ப நல்லாயிருக்கு. இப்படியே எல்லாம் பண்ணிடுவியாடா."

"பண்ணிடுவேன் ஸார்."

மிகுந்த நம்பிக்கையோடு பெரியசாமி சொன்னான்.

அவர்கள், அவர்களுக்குள் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

"சாப்பாடு பிரச்சினை ஓவர். இவன் சம்பளப் பிரச்சினை என்ன."

"அதை நாம பேசித்தீர்த்துக்கனும்."

"நாங்க ஒரு வாரம்தான் இருக்கப்போறோம். பிறகு எங்களுக்கு குவாட்டர்ஸ் கிடைச்சுடுச்சுன்னா அந்தப் பக்கம் போயிடுவோம். நாங்க எப்படி ஷேர் பண்றது."

பாம்பே இன்ஜீனியர்கள் கேள்வி கேட்டார்கள்.

"ஒண்ணும் ஷேர் பண்ண வேண்டாம் ஸார். நான் பார்த்துக்கறேன்."

அத்தியப்பன் யாரும் இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

"எங்களுக்கு டீயும், டிபனும் கொடுத்தா போதும் ஸார். மத்தியானம் லஞ்ச்சை நாங்க வெளிய பார்த்துக்கறோம்."

அந்த இன்ஜீனியர்கள் சொல்ல அத்தியப்பன் சரியென்று தலையசைத்தார்.

எவ்வளவு பங்கு என்று அப்போதும் முடிவாக வில்லை. அது பற்றி லட்சுமிநாராயணனோ, அத்தியப்பனோ பேசவில்லை.

ராமனாதன் பிற்பகல் படியேறி உள்ளே வந்தார்.

"ம்ம்.. நல்லாயிருக்கு. இந்த ஐடியா. இன்ஜீனியர்ஸ் ஃபார்ம் ஏற்பாடு பண்ணியிருக்கா. வச்சுக்கோங்க. பின்னாடி நான் இருக்கேன். தனியா ரூம் கொடுத்து கம்பெனியிலயே சம்பளமும் கொடுத்துடறேன். நல்லா வரானான்னு பார்த்துக்கோங்க."

அவர்களுக்கு மட்டும் கேட்கும் வண்ணம் அடிக்குரலில் பேசினார்.

அந்த செய்தி பெரியசாமியிடம் அன்று மாலையே வந்து விட்டது.

"அப்படியா இருந்தா புரொபஷனலாவே கூட்டிட்டு வந்திருக்கலாமே" என்று பாம்பே ஆட்கள் சொன்னார்கள்.

"எனக்குப் புரியலையே நீங்க சொல்றது."

லட்சுமிநாராயணன் முகம் சுருக்கினான்.



"ஒரு ஐயரை கூட்டிட்டு வந்திருக்கலாம்."

"என்ன ஸார் ஐயரு. நல்லா சமைக்கறாரா இல்லையா. அதான் முக்கியம். அந்தப்பையன் கெட்டப்பழக்கம் இல்லாதவன். நல்லா சமைப்பான். நாப்பது பேர் அம்பது பேருக்கா சமைக்கறோம். விருந்தா போடறோம்."

"இப்படி ஒரு கம்பெனி வேலையா கொடுக்கறபோது, அப்படி சமைக்கறவனை எடுத்துக்கறதுதானே பெட்டர்."

"நமக்கு சமைக்கறதுக்கு, ஒரு குவார்ட்டர்ஸ்ல சமைக்கறதுக்குத்தான் நாம ஆள் கேட்டோம். கம்பெனியிலே சமைக்கறதுக்கு இல்லை. அதுக்கு பெரியசாமி வேண்டாம். தனியா வேற ஆள் கூப்பிடுவோம்."

"கூப்பிட்டுக்கோ ஸார்."

பெரியசாமிக்கு கம்பெனி வேலை வருவது தடைபட்டது.

"ஈஸியா பன்னெண்டாயிரம் ரூபா வேலை கிடைச்சுருக்கும், டக்குனு உள்ள புகுந்து கெடுத்துட்டான் அந்த ஐயரு."

லட்சுமிநாராயணன் கோபப்பட்டான். அத்தியப்பன் தடுத்து நிறுத்தினார்.

"எல்லாம் நல்லதுக்குத்தான்."

"நாம அங்கேயிருந்து ஆள் கூட்டிட்டு வருவோம். இவங்க கூட்டிப்பாங்களா, என்னாங்க நம்ம சௌகரியத்துக்கு கூட்டிட்டு வந்திருக்கோங்க."

"பார்த்துக்குவோம். பெரியசாமிக்கு நாம வேற ஏற்பாடு பண்ணுவோம்."

"வேற ஏற்பாடுன்னா."

"ஹோட்டல் வைக்க கத்துக்கொடுத்துடலாங்க. அது இன்னும் பெரிய விஷயமில்ல. ரொம்ப சௌகரியமில்ல. நம்ம கிட்ட இருக்கட்டும். வேலை தெரிஞ்சுக்கட்டும். தானா... தானா முன்னுக்கு வந்துடுவான்."

பெரியசாமி விதம்விதமாய் சமைத்துப்போட லட்சுமி நாராயணனும், அத்தியப்பனும் இன்னும் சில இன்ஜீனியர்களும் சரியாக அவனை பயன்படுத்திக் கொண்டார்கள்.

தங்களின் குணத்திற்கேற்ப இன்னும் நான்கு பேர் சேர்த்துக் கொண்டார்கள்.

மூன்று அறைகளும், ஹாலும் இருந்த அந்த கட்டிடத்தில் ஹாலைப் பொதுவாக உபயோகப்படுத்திக் கொண்டு மூன்று அறைகளை இரண்டிரண்டு பேராக எடுத்துக் கொள்ள அவர்களுக்கு சமைத்துப் போடுவது பெரியசாமிக்கு எளிதாக இருந்தது.

அவனே கடைக்குப் போகவும் கற்றுக் கொண்டான். பஸ் ஏறி ஊரின் மத்திம பாகத்திற்குப் போய் சாமான்களை வாங்கி பிறகு அப்படியே டாக்ஸியில் ஏறி வீட்டிற்கு வந்து அவைகளை ஒழுங்குபடுத்தி, வீடு சுத்தம் செய்து, எல்லாத் துணிகளையும் துவைத்து உலர்த்தி டி.வி. பார்க்க உட்கார்ந்து விடுவான்.

வீட்டிற்கு கடிதம் எழுதிப்போட்டான்.

"எங்க அண்ணன்கிட்ட ஆயிரம் ரூபா எடுத்துட்டு போய் உங்க அம்மாகிட்ட கொடுக்க சொல்லிட்டேன். இதோ இது உன்னோட மாசத்து சம்பளம் அஞ்சாயிரம். இந்த ஆயிரம் ரூபாய நான் கணக்குல எடுத்துக்கலை. இந்த அஞ்சாயிரம் ரூபாய்ல என்னா பண்ற, உங்க அம்மாவுக்கு எதுனா நகை வாங்கற. அஞ்சாயிரம் ரூபாய்க்கு ஒன்றரை பவுன் நகை கிடைக்கும். என்னா நகை வாங்கப்போற."

"அம்மாக்கு மோதிரம் வாங்கலாம் ஸார்."

"வாங்கு. வாங்கி வச்சுக்கோ. முதல் முதல் சம்பளம் உங்கம்மாக்குன்னு வாங்கறதுதான் மரியாதை. நானும் என் முதல் சம்பளத்துல எங்கம்மாக்கு மோதிரம் வாங்கி, கொடுத்தேன்."

அத்தியப்பன் சொல்ல தாமோதரன் கைதட்டிப் பாராட்டினார்.



லட்சுமிநாராயணன் பாத்ரூம் எப்படி க்ளீனாக வைத்துக் கொள்வது என்று சொல்லிக் கொடுக்க, வீடு முழுவதும் அவன் மிகத் துப்புரவாக வைத்துக் கொண்டான்.

லட்சுமிநாராயணனுக்கு ஓடியாடி செய்கிற வேலை. கால் குடைச்சல் அதிகம் இருந்தது. எனவே உள்ளங்கையை விரித்து கத்திபோல் வைத்துக் கொண்டு, அவர் ஆடுகால் தசையை வெட்டி அழுத்திவிட அவர் சுகமாகத் தூங்கினார்.

"மகனே... இதுக்கே உனக்கு நான் நிறைய துட்டு தரணும்டா. தரேன்... கவலைப்படாத. உங்க வீட்டுக்கு டி.வி. பொட்டி நான் வாங்கித்தரேன். தூங்கறதுக்கு முன்னாடி அஞ்சு நிமிஷம் கால் பிடிச்சு விடு."

தினமும் லட்சுமிநாராயணனுக்கு கால்பிடித்து விடுவது பெரியசாமியின் வேலையாக இருந்தது.

"எல்லா டர்பையனும் வேலை செய்யுது ஸார்."

லட்சுமிநாராயணன் உற்சாகத்தோடு உள்ளே வர, தாமோதரன் எழுந்து கை குலுக்கினார்.

"சொன்னாங்க. டர்பையின்தான் பெரிய ப்ராப்ளம்னு. லட்சுமி நாராயணன் புகுந்து புறப்படறான்னு சொன் னாங்க. முடிச்சுட்டீங்கன்னு ரொம்ப சந்தோஷப்படறாங்க. டர்பையின் நல்லா இருந்ததுன்னு வச்சுக்கோங்க. புரொடக்ஷன் இன்க்ரீஸ் ஆயிரும். நாம வந்து புரொடக்ஷன் கபாஸிடியை இன்க்ரீஸ் பண்ணிட்டோம்னு தெரிஞ்சாலே நமக்கு இன்னும் மரியாதை ஆயிடும். சம்பளமும் ஜாஸ்தி கிடைக்கலாம்னு சொல்றாங்க."

"யார் சொன்னது"

"ராமனாதன் பேசினாரு எங்கிட்ட."

"நல்ல டீம் ஃபார்ம் பண்ணிட்டோம்னு நினைக்கிறேன் ஸார்."

"ஆமாம். அந்த பாம்பே இன்ஜீனியர்ஸும் கெட்டிக்காரங்களா இருக்காங்க. ஆனா, அலட்டலா இருக்காங்க."

"இருந்துட்டுப் போகட்டும் ஸார். அவங்க பாம்பேயிலயே க்ரூட் வெளிய எடுக்கற ஸ்டேஜ்ல இருந்தாங்க ஸார். அதனால ஒரு மாதிரியாத்தான் இருப்பாங்க."

"ரொம்ப ரஃப்ஜாப் இல்ல. இந்த வெய்யில் தாங்கலைன்னு சொல்லிகிட்டிருக்காங்க. ஒருத்தர் மாத்தி ஒருத்தர் கேபின் போயிடறாங்களாம். அரைமணி நேரத்துக்கு ஒருத்தருன்னு மாத்தி மாத்தி செய்யறாங்களாம். மெக்கானிக்ஸும் நல்லாயிருக்காங்க ஸார். ரொம்ப பிரமாதமா வந்து சேர்ந்திருக்காங்க. வங்காள தேசத்து ஆளுங்களுக்கு தெரியலை. ஆனா, நாம பசங்க ரொம்ப நல்லா வேலை செய்யறாங்க."

"அவங்களுக்கு தங்கற வசதி எப்படியிருக்கு."

"ரொம்ப வசதின்னு சொல்லமுடியாது. ஒண்ணுமே இல்லைன்னு சொல்லமுடியாது. அவங்க இடமும் ஏ.சி. பண்ணியிருக்காங்க. நல்ல சாப்பாடு போடறாங்க. அங்க மூணு பேர் தண்ணி போடற கேஸா இருக்காங்க. அதுதான் பிரச்சினை."

"தண்ணியா, குவைத்துல தண்ணி போட முடியாதே. பார்த்தா நொறுக்கிடுவானே."

"அதனால போடாம இருக்க முடியுமா. ஆஃப்டர் ஷேவ் லோஷன்ல அது என்னமோ கலக்கி மிக்ஸ் பண்ணி வடிகட்டி அதை குடிக்கறாங்க. பச்சுனு போதை தலைக்கு அடிக்குதாம்."

லட்சுமிநாராயணன் சொல்ல தாமோதரன் தலையில் அடித்துக் கொண்டார்.

"கண்ணு கெட்டுப் போயிடும்."

"அதனால என்ன, போதை வேணும், வேற ஒரு விஷயம் நடக்குது. தெரியுங்களா"

அத்தியப்பன் சொன்னார்.

"என்ன."

"ஒரு மலையாளி இங்க திராட்சை பழத்தை நசுக்கி ஒயின் தயாரிக்கிறான். பொண்டாட்டியோட இங்க இருக்கான். அவன் பொண்டாட்டிக்கு இது நல்லா தெரியுது. திராட்சைப்பழத்தை நசுக்கி பானையில வச்சி அதை புளிக்க வச்சு பத்து நாளைக்கப்புறம் மெல்ல வடிகட்டி குடிக்கறதுக்கு கொடுக்கறான். அவ்ளோ போதையா இருக்காம். சாப்பாடும் பூமியில புதைச்சு வச்சு கொடுக்கறாங்களாம்."



"ஆமா.. ஆமா.. மெட்ராஸ் சொண்டிசோறுன்னு சொல்வாங்க."

லட்சுமிநாராயணன் உற்சாகமாய் பேசினான்.

"அந்த மாதிரி வேற ஒரு பக்குவத்துல கொஞ்சம் நேந்தரம் பழம் பிசைந்து போட்டுத்தரான். புளிப்பான புளிப்பாம். நாத்தமாம். ஆனா, அத்தனை சுகமா இருக்காம். வயிறு சுத்தமாயிடுது. நல்லா தூக்கம் வருது. தலைவலி போகுது அப்படின்றாங்க. ஆனா, அவன் மாட்டினாலும் அதோகதி."

"ஸார் மெக்கானிக்கெல்லாம் சேர்ந்து ஒரு அசோசியேஷன் ஃபார்ம் பண்ணியிருக்காங்க ஸார். ஆளுக்கு முப்பது தினார் போட்டு பெரிய அமௌண்ட் கலெக்ட் பண்ணிட்டாங்க. முதல் மீட்டிங் வரவாரம் நடக்குது. நம்மள கூப்பிடறாங்க போகலாமா."

"எப்படி ஸார் போகாம இருக்கறது. இங்க வந்து நாம இன்ஜீனியர்னு சொல்ல முடியுமா. தமிழனுக்குத் தமிழன் ஏதாவது செய்துதானே ஆகணும்."

"மலையாளிஸ் இருக்காங்க ஸார்."

"எல்லாம் இந்தியர்கள்தானே."

"எதுனா உதவி கேட்டா."

"என்னா முடியுதோ அதை செய்ய வேண்டியதுதான்."

"பெரியசாமி வரியா. மீட்டிங் போகலாம்."

பெரியசாமியை அவர்கள் கூட்டிக்கொண்டு போனார்கள். பெரியசாமி பேண்ட் போட்டு, ஷு மாட்டி, முழுக்கை சட்டையை உள்ளே விட்டு, பெல்ட் இறுக்கி மேலே ஜெர்க்கின் போட்டுக் கொண்டு போனான்.

லட்சுமிநாராயணன் டிரைவிங் லைசென்ஸ் வாங்கி விட்டார். அத்தியப்பனும் டிரைவிங் லைசென்ஸ் விண்ணப்பித்திருக்கிறார். இரண்டாவது தேர்வு எழுதினால் அவருக்கும் கிடைத்துவிடும்.

இரண்டு பேருக்கும் டிரைவிங் லைசென்ஸ் கிடைத்து காரும் வாங்கிவிட்டால், போவது வருவது எளிதாகிவிடும்.

ஆறு இன்ஜீனியர்களையும், அவனையும் காரில் அடைத்துக் கொண்டு மெக்கானிக் அசோசியேஷனுக்கு போனார்கள்.

இந்தியக் கலாச்சாரக்கழகம் என்று பெயரிடப்பட்டிருந்தது. மேடையில் ஏறி இறைவணக்கம்பாட அறிமுக விழா துவங்கியது. ஒவ்வொருவராக மேடைக்கு ஏறி தங்கள் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ள, ஒவ்வொருவரையும் கைதட்டி கூட்டம் வரவேற்றது.

"அட.. நீங்க ஈரோடா, இதுவரைக்கும் பார்த்ததே இல்லையே. ஈரோடுல உங்களை பார்த்தா மாதிரி நினைப்பில்லை, ஈரோடுல எங்க இருக்கீங்க."

பரஸ்பரம் அவரவர் அவரவர் ஊரைச் சேர்ந்தவரோடு பழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

"பெரியசாமி நீ மேடைக்கு போகல. போ."

எல்லோரும் போனபிறகு பெரியசாமி மேடைக்குப் போனான். நின்றான்.

"எம்பேர் பெரியசாமிங்க. நான் தமிழ்நாடு இன்ஜீனியரிங் ஃபார்ம் குக்கா இங்க வந்திருக்கேங்க. குவார்ட்டர்ஸ்ல சமையல் வேலை செய்யறேங்க. சொந்த ஊரு மெட்ராஸுங்க. யாருக்காவது வயிறு சரியில்லாம ஜுரம் வந்ததுன்னாலோ, வேற ஏதாவது பிரச்சினை வந்ததுன்னாலோ எனக்கு ஒரு லேகியம் பண்ண தெரியுங்க. அதை சாப்பிட்டீங்கன்னா சட்டுனு வயித்துல இருக்கற பிரச்சினை தீர்ந்துடும். நல்லபடியா வயிறு சுத்தமாகும். அவ்ளோதாங்க வணக்கங்க" என்று சொல்ல கூட்டம் பெரிதாக கைதட்டியது.

பெரியசாமியை இரண்டு, மூன்று பேர் சூழ்ந்து கொண்டார்கள்.

"ஏம்பா... கொண்டு வந்திருக்கியா."

"இல்லீங்க. அதை எப்படி எடுத்துட்டு வரது. எனக்கு தெரியும்னு சொன்னேன். ஏன்னா... இங்க உள்ள வந்தவுடனே



நிறைய பேர் வயிறு பிரச்சினையில தவிக்கறாங்கன்னு தெரிஞ்சது. உடனே எனக்கு இதை சொல்லாமேன்னு தோணிச்சு."

"நல்லபடியா செய்து கொடுப்பா. ஒரு பாட்டில் கொடு" என்று சொல்ல லட்சுமிநாராயணன் மூலம் அந்த லேகியம் அங்குள்ள மக்களுக்குப் போயிற்று.

"எனக்கு பாசுமதி ரைஸ்னாலயும் வாயு தொந்தரவு வந்தது. இவரு கொடுத்ததை ஒண்ணு சாப்பிட்டேன், டப்புனு க்ளியர் ஆயிப்போச்சு."

"சூட்டுல மலம் போகலீங்க. அதனாலயும் நான் அவஸ்தைப் பட்டேங்க. இவரு கொடுத்ததை சாப்பிட்டவுடனே ரொம்ப க்ளியர் ஆயிப்போச்சு."

எல்லோரும் பெரியசாமியைப்பற்றி தொழிற்சாலையில் பாராட்டினார்கள்.

லட்சுமிநாராயணன் இரண்டாவது பட்டியலையும் அவர்களிடம் கொண்டுபோய் கொடுத்தான்.

"வெய்யில் ஆரம்பிச்சுடுச்சு தம்பி. நிறைய லெமன்ஜூஸ், சாத்துக்குடி ஜூஸ் பிழிஞ்சு தனியா வை. பெரிய ஜார்ல வச்சுக்க. அப்பப்போ நீயும் குடி. நாம சமைக்கறதுக்குத்தான் இருக்கோம். சாப்பிடறதுக்கு இல்லைன்னு நினைக்காத. சரியா ஜூஸ் சாப்பிடலைன்னா நீ படுத்துடுவ. நீ படுத்துட்டா எங்களுக்கெல்லாம் பிரச்சினை."

இஞ்சி லேகியம் சாப்பிட்டு வயிறு சரியான மெக்கானிக்குகள் ஒரு பிற்பகலில் அவனைத் தேடி வந்தார்கள்.

அவனை அழைத்துக் கொண்டு தங்கள் இடத்திற்குப் போனார்கள்.

"அஞ்சாயிரம் ரூபா சம்பளமா. என்ன விளையாட்டா. வெளியபோய் ஒரு வீட்ல வேலை செய்தீன்னாக்க குறைஞ்ச பட்சம் பன்னெண்டாயிரம் ரூபா சம்பளம் கிடைக்கும். கூட சம்பளம் கேளு."

உசுப்பேற்றினார்கள்.

"பார்த்துக்கலாம்யா. வந்து ஒரு மாசம்தானே ஆகுது."

"வேற ஏதாவது கையெழுத்து போட்டிருக்கியா."

"ஒண்ணுமே இல்லைய்யா. சமைக்கவே தெரியாது. சமைக்க சொல்லிக் கொடுத்ததே அவங்கதான். அவங்க வீடு தான். நான் சம்பளமெல்லாம் ஜாஸ்தி கேட்க மாட்டேன்யா. தானா கிடைக்கும். கொடுக்காம போக மாட்டாங்க. ஏன்னா... அந்த மூணு பேருமே ரொம்ப நல்ல ஆளுங்க"என்று அவன் சொல்ல மற்ற மெக்கானிக்குகளும் உசுப்பேற்றியவரை சமாதானப்படுத்தினார்கள்.

"நாம ஏதோ ஒரு தகுதியில வந்திருக்கோம். அவன் எந்தத் தகுதியும் இல்லாம கரண்டியை நம்பி வந்திருக்கான். அவ னைப் போய் சம்பளம் ஜாஸ்தி கேளுன்னு நீ சொல்லி, இவன் கேட்டு வெளியே அனுப்பினான்னாக்க, அவன் வாழ்க்கை மொத்தமும் பாழாயிடும். வேணாம் கேட்காதே. நீ சொன்ன மாதிரி அவங்க ரொம்ப நல்லவங்க."

"உங்களுக்கெல்லாம் என்னங்கய்யா சம்பளம்."

"வருது. புதுசா வந்தவங்களுக்கு இருவதஞ்சாயிரம் வருது. அஞ்சு வருஷம் இருந்தவங்க நாப்பதாயிரம் வாங்கறாங்க."

"நாப்பதாயிரம் ரூபா சம்பளம்."

"இன்ஜீனியருக்கெல்லாம் எவ்வளவு சம்பளம் தெரியுமா. எழுவத்தஞ்சாயிரம், எண்பதாயிரம், நியாயத்துக்கு ஆளுக்கு அஞ்சாயிரம் ரூபா கொடுக்கணும். மூவஞ்சு பதினைஞ்சாயிரம் ரூபா சம்பளம் நீ வாங்கணும்."

அவர்கள் ஏற்றிவிட்டார்கள். அவனும் வேகமாய் யோசிக்கத் துவங்கினான்.

அந்தக் கணம் ஒரு காசு ஆசை அவனை சட்டென்று பலமாய் பிடித்துக் கொண்டது.

முப்பதாயிரம் ரூபா சம்பளம் வந்ததுன்னா ஒரு மாசத்துக்கு இருவத்தாஞ்யிரம் ரூபான்னா, ஒரு வருஷத்துக்கு மூணு லட்ச ரூபா. அந்தத் தெருவுலேயே வீடு வாங்கிடலாம். அம்மாக்கு ரொம்ப நாள் ஆசை. வீடு வாங்கணும்னு. நகை வாங்கலாம். புடவை துணிமணி வாங்கலாம். அம்மா நல்ல புடவை கட்டி



ஞாபகமே இல்லை. முதல்ல டி.வி. வாங்கி இறக்கிடணும், அப்புறம் சென்ட் வாங்கிட்டு போகணும். ரூம் ஸ்ப்ரே வாங் கணும். இந்த இடம் எவ்வளவு வாசனையா இருக்கு. பாத்ரூம் கூட எத்தனை மணமா இருக்கு. எவ்ளோ பளிச்சுனு இருக்கு. இனிமே, நம்ம வீடும் இந்தமாதிரித்தான் இருக்கணும்.

யோசித்தான்.

"மெட்ராஸ்ல கார்பெட் போடலாமா."

"போடமாட்டாங்க. அங்க அவ்வளவு குளிர் இல்ல இல்லை. இங்க காலை கீழவச்சா சில்லுனு தாக்கும். அதனாலதான் கார்ப்பெட். மெட்ராஸ்ல தூசு ஜாஸ்தி."

"ஏ.சி. ரூம்ல தூசு வராது. உங்க வீட்டை ஏ.சி.பண்றதா இருந்தா கார்ப்பெட் வாங்கு."

மெக்கானிக்குகள் மனம் விட்டுப் பேசினார்கள்.

சிலருக்குத் திருமணம் ஆகியிருந்தன. பலபேர தான் திருமணம் செய்து கொள்ளாமல், தம்பிக்கு திருமணம் செய்து வைத்து, தங்கைக்கு திருமணம் செய்து வைத்து இவர்கள் இடையறாது இங்கு போராடிக் கொண்டிருந்தார்கள்.

"போறும் இந்த வருஷத்தோடன்னு ஊருக்கு கிளம்பறபோது தோணும். அங்க போன ஒரு வாரத்துல மறுபடியும் இங்க வந்துடணும்னு ஆசை வரும். சிட்டிக்குள்ள வீடு வாங்காது நான் பெருங்களத்தூர்ல வாங்கியிருக்கேன். நான் வாங்கறபோது ரொம்ப சீப். நிலம் வாங்கி, கடன் வாங்கி வீடு கட்டி அந்தக் கடனை வருஷா வருஷம் அடைச்சேன்."

"உங்க வேலை ரொம்ப கஷ்டமா."

பெரியசாமி ஆவலாக கேட்டான்.

"கஷ்டம்னா கஷ்டம். இல்லைன்னா இல்லை. கஷ்டப் படணும்தான் வந்துட்டோம். சுகப்படணும்னு வரலை."

"இல்லை ஸார். நான் கேட்கறது வேலை கஷ்டமா. வெய்யில பளுதூக்கி, வண்டி இழுத்து அப்படியெல்லாம் பண்ணும்படியா இருக்குமா."

"நாங்க இன்ஸ்ட்ருமென்ட் மெக்கானிக். நாங்க பளு தூக்கறதோ வண்டி இழுக்கறதோ இல்லை. அதெல்லாம் நம்மூர்ல தான். இங்க பளு தூக்கறதுக்கெல்லாம், ஆயிரம் விதமான வசதி இருக்கு. சாமானை இழுத்துட்டு போகறதுக்கு விதம்விதமா வண்டி இருக்கு. அந்த மாதிரி கஷ்டம் இல்லை. ஆனா, சமயத்துக்கு அந்த மாதிரி கஷ்டமும் பட்டாசனும். எங்கிருந்தோ ஆயில் ஃபீல்டுலேர்ந்து குருடாயில் பைப் லைன்ல வரும். வந்து டேங்க் டேங்க்கா ரொம்பும். டேங்க்லேர்ந்து அப்பப்போ எடுத்து விதவிதமா அதை பிரிச்சு இருவத்தேழு, இருவத்தெட்டு பொருள் எடுப்பாங்க. குருடாயில் ஏதாவது இடத்துல லீக் ஆகும். பிடுங்கிக்கும். மண்ணுல கருப்பா ஆயில் தங்கும். உடனே கத்துவான். அத்தனையும் துட்டாச்சே. ஆயில் தங்குதுன்னு போன் வரும். உடனே தபதபன்னு ஓடிப்போய் என்னான்னு பார்த்து, வேற பைப் மாத்தி, அதுல இருக்கற கேஜ் சரிபண்ணிட்டு வருவோம். காலையில ஏழரை மணிக்குப்போய் பத்தரை மணிக்குள்ள வேலை முடிச்சுடலாம். சில சமயம் பத்தரை மணிக்குத்தான் பிடுங்கிக்கும். கொதிக்கற வெய்யில்ல ஓடியாகணும். பெரிய குடை எடுத்துட்டு போவோம். மணல் ஊணி நட்டுட்டு, ஒருத்தரை மாத்தி ஒருத்தர் போய் பைப்பை சரி பண்ணுவோம். நாலு பேரா பைப்பை தூக்கிட்டுப் போய் போட்டு குருடாயில் வரத நிறுத்தி, பைப்ப கழட்டி மாத்தி கேஸ்கட் போட்டு இறுக்கமா போல்ட் நெட்டை டைட் பண்ணி, மறுபடியும் குருடாயில் விடச்சொல்லி, லீக் ஆகலையான்னு பார்த்து நாலுமணி நேரம் அஞ்சு மணி நேரம் கொதிக்கற வெய்யில்ல மாட்டிப்போம். மூஞ்சி அறுந்து போகும். ஃபாக்டரியில் சுருண்டு படுத்துடுவோம். யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஈரத்துணியில மூஞ்சியெல்லாம் ஒத்தி எடுப்பாங்க. குளுக்கோஸ் வாட்டர் கொடுப்பாங்க. பழரசம் கொடுப்பாங்க. பால் கொடுப்பாங்க. இது எப்போவாவதுதான். மத்த நேரத்துல வெய்யிலுக்கு வெளிய இல்லாத ஃபாக்டரிக்குள்ளேயே ஏகப்பட்ட பைப் போகுது. அதைச் சுத்தி சுத்தி பார்த்துகிட்டுதான் இருக்கணும். வெப்ப அலை அடிக்கும். ஏ.சி. ரூமுக்குள்ளேயே வெப்ப அலை அடிக்கும்.



நூறடி தூரம் நடக்கறதுக்குள்ளேயே சட்டை தொப்பலா போயிடும். வந்த புதுசுல பலருக்கு தலை சுத்தும். மலம் போகாத தொந்தரவு படுத்தும். கண் எரியும். தலை நோவும். வயிறு வலிக்கும். பப்பாளி, வெள்ளரிக்காய், தக்காளி, வெங்காயம், புதினா அப்படின்னு சாலட் போட்டு தருவான். உப்பு போட்டு சர்க்கரைப் போட்டுத் தருவான். நல்லாயிருக்கும். அந்த மாதிரி ஏதாவது தின்னுகிட்டே இருந்தாக்க, வயிறு தொந்தரவு பண்ணாது."

"உங்களுக்கு நல்ல சம்பளங்களா"

"இதோ பாருடா இந்தப்புள்ள என்னென்னமோ கேள்வி கேட்குது."

அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"எது நல்ல சம்பளம்னு சொல்ற. நீ சொல்லு."

ஒருவன் முன்னே வந்து கேள்வி கேட்டான்.

"தெரியலையே. அதை எப்படிச்சொல்றது."

பெரியசாமி திகைத்தான்.

"கரெக்ட். இதுதான் பிரச்சினை. இருவத்தாஞ்சாயிரம் ரூபா வாங்கறவனுக்கு நாப்பதாயிரம் ரூபா நல்ல சம்பளம். நாப்பதாயிரம் வாங்கறவனுக்கு எண்பதாயிரம் நல்ல சம்பளம். எண்பதாயிரம் வாங்கறவனுக்கு ஒன்றரை லட்சம் ரூபா நல்ல சம்பளம். இதுக்கு ஏதாவது முடிவு உண்டா. நம்ம ஊர்ல நானூறு ரூபாய்க்கும், ஐநூறு ரூபாய்க்கும் வேலை செய்துகிட்டிருந்தோம். வாரக்கூலியா நூத்தம்பது ரூபாய்க்கு இருந்தேன். கமிஷன் போக எனக்கு கையில ஐநூறு ரூபா கிடைக்கிறது பெரிய கஷ்டம். ஓவர்டைம் பண்ணா கூட காசு கிடைக்கும். ஐநூறு ரூபா சம்பளம் எங்க. இப்போ வாங்கற முப்பதாயிரம் ரூபா சம்பளம் எங்க. முப்பதாயிரம் ரூபா சம்பளத்துக்கு கஷ்டப்படக்கூடாதா. நான் கஷ்டம்னே நினைக்கறதில்லை. கஷ்டப்படறதுக்குன்னே வந்துட்டோம். தெள்ளத் தெளிவா புரிஞ்சு போச்சு. அதை நொந்துப்பானேன். ஜாலியா கஷ்டப்படுவோம்."

அவர்கள் தொடை தட்டிக் கொண்டு சிரித்தார்கள்.

பெரியசாமியும் சிரித்தான்.

அந்த இளைஞர்கள்மீது அவனுக்கு கருணையும், காதலும் பொங்கின.

"அப்போ இந்த மாதிரி வேலையில என்னதான் கஷ்டம். இப்படி கேட்கட்டுமா?"

"ஏன் உன்னால கேட்காதயே இருக்க முடியாதா."

"இல்லீங்க. உங்களோட ஏதாவது பேசணும். இதனாலதான் சும்மா பேசறேன்."

"பேசு. நாங்களும் வந்த புதுசுல இப்படித்தான் பேசுவோம்."

"இப்போ பேசிப்பேசி அலுத்துப் போச்சு. பேசறவனைக் கண்டா எங்களுக்கு ஜாலிதான். நல்லா குழப்பி விட்ருவோம்."

வேறொருவர் உரக்கச் சொல்ல மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இங்க என்ன கஷ்டம் தெரியுமா. ஊரைவிட்டு பிரிஞ்சு இருக்கறதுதான்."

ஒரு அந்தண இளைஞன் முன் வந்து சொன்னான்.

"எனக்கு ஊர் திருச்சி. மலைக்கோட்டைக்கு ஒட்டின வீடு. இருவத்தேழு படி ஏறினாதான் எங்க தெருவுக்கே போக முடியும். எங்கப்பாவுக்கு வேற ஒரு கோயில்ல குருக்கள் வேலை. மலைக்கோட்டைலேர்ந்து நாலு கிலோ மீட்டர் போகணும். ரோடு... சைடு பிள்ளையார் கோயில். இன்னிக்கு தட்டுல விழற காசை வச்சுண்டு தான் எங்க வீட்டுக்கு சாப்பாடு. ஒரு நகை கடைக்காரர், ராத்திரி என் கடை வாசல்ல வந்து படுத்துக்க அப்படின்னு சொல்லி என்னை நைட் வாட்ச்மேனா போட்டார். நான் பதினொரு மணி வரைக்கும் படிச்சிண்டிருப்பேன். பிறகு அங்கயே துணியை போர்த்திக் கொண்டு தூங்கிடுவேன். கொசு பிடுங்கும். ஆனாலும் நூத்தி இருபது ரூபா வாட்ச்மேனுக்கு சம்பளம் அப்படின்றதுனால அந்தக் காசுக்கு அங்கதான் தூங்குவேன். அப்படிப்புரண்டா சாக்கடையில தான் விழணும். கைகால் அசைக்காமதான் படுத்துக்க முடியும். நமக்கு ஆயிரம் கனவு. ஆனா ரோட்ல படுத்துண்டிருக்கோமே அசிங்கமா படுத்



துக்க முடியாதே. அதனால மல்லாக்க கண்ணை மூடிண்டு பிள்ளையாரப்பா. பிள்ளையாராப்பான்னுதான் படுத்துப்பேன். கண்ணை திறந்ததும் முதல்ல மலைக்கோட்டை பிள்ளை யாரைத்தான் பார்ப்பேன். 'எத்தனை நாளைக்கு என்னை சாக்கடையிலேயே படுக்க வைப்பேன்'னு அழுவேன்.

படிச்சு முடிச்சதும் அப்ரண்டிஸூன்னு கூட்டிண்டு வந் தாங்க. சர்டிபிகேட் காண்பிச்சா நிறைய கமிஷன் கேட்பாங் கன்னு நான் வெறும் மஸ்தூராகத்தான் உள்ள வந்தேன். இங்க வந்து மஸ்தூராகத்தான் சர்டிபிகேட் காண்பிச்சேன். யோவ்.. நல்ல காலேஜ்ல படிச்சுருக்க, நல்ல மார்க் வாங்கியிருக்க, ஏன் மஸ்தூரா இருக்கேன்னு ஒரு தமிழர்தான் என்னை இன்ஸ்ரு மெண்ட் மெக்கானிக்கா சேர்த்துவிட்டார். வந்த போது பதினஞ் சாயிரம் ரூபாய் சம்பளம். இப்போ முப்பத்தஞ்சாயிரம் ரூபா சம்பளம். இதுல இன்னொரு தமாஷ் என்ன தெரியுமா. நான் ஊரைவிட்டு வந்தபிறகு அப்பாக்கு துட்டு அனுப்பினேன். அப்பா அந்த காசுல கோயிலை இடிச்சு பெரிசு பண்ணார். கோயில் பெருசாகி லட்சணமான உடனே நிறைய ஜனங்க வர ஆரம்பிச்சுட்டாங்க. கோயில் கட்டறதுக்கு, பெயிண்டுக்கு காசு கொடுத்து அற்புதம் பண்ணிட்டாங்க. கவசம் வரைக்கும் வச்சுட் டார். இப்போ அந்தப் பிள்ளையார் கோவில்ல கூட்டமான கூட்டம். அப்பாக்கு மூணு அசிஸ்டெண்ட். எங்கண்ணா உட்பட இப்போ அது எங்க குடும்ப கோயிலாயிடுச்சு.

நான் அங்க இருக்கற வரைக்கும் எல்லாம் ஓட்டு வீடா இருந்தது. இடிச்சு ஃப்ளாட் கட்ட ஆரம்பிச்சாங்க. அதுல ஒரு ப்ளாட் எண்ணூறு சதுரஅடி எங்கப்பா வாங்கிப்பார். இன்னும் கடன் இருக்கு. நானும், அண்ணனும், அப்பாவும் அடைச்சுகிட் டிருக்கோம். ஆனா, ஆச்சரியம். எங்களுக்குன்னு சொந்த வீடு இருக்குமா. எங்களுக்குன்னு ஒரு மோட்டார் சைக்கிள் இருக் குமா. எங்க வீட்ல அரிசி மூட்டையில வாங்குவோமா. பருப்பு கிலோவுல வாங்குவோமா அப்படின்னு ஆச்சரியம். கட்டில், டைனிங் டேபிள், சோஃபாசெட், டி.வி. வீடியோ, ஃபிரிட்ஜ் என்னென்னமோ வந்துடுச்சு வீட்ல. என் தங்கைய மாமா பையன் தாயுமானவர் சன்னதியில குருக்களா இருக்கான். பத்து

சவரன் நகை கேட்டாங்க. நாங்க பதினஞ்சு சவரன் நகை போட்டோம். அவன் வேலை செய்துண்டே பெரிய சிவாச்சாரியாரா ட்ரெயினிங் எடுத்துண்டிருக்கான்.

நாங்க நல்லாயிருக்கறதுக்கு காரணம் இந்த வேலை. வந்து மூணாம் மாசம் பதினஞ்சாயிரம் ரூபா எங்கப்பாக்கு அனுப்பினேன். எங்கப்பா டெலிபோன்ல அழுவுறார். செத்துப் போயிடலாம் அப்படின்னு விஷம் வாங்கறதுக்கு மனசுல நாள் குறிச்சு வச்சேண்டா. நீ காசு அனுப்பினவுடனே எனக்கு ஒண்ணும் புரியலை. அப்படின்னு அழுதார். நான் இங்க உட்கார்ந்து அழுதேன். எங்கப்பா செத்துப் போயிருந்தார்னா என்னால வேலை செய்ய முடியுமா."

அவன் சொல்லி விட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தான். நண்பர்கள் பாய்ந்து அவனை கட்டிக் கொண்டார்கள்.

"கடைசி நிமிஷம் எல்லாம் மாறிப்போச்சு. ஒண்ணே ஒண்ணு சொல்றேன் தம்பி. உன்பேரென்ன பெரியசாமிதானே. வாழ்க்கையில நம்பிக்கையை இழக்கவே கூடாது. ஏதாவது ஒரு க்ஷணம், உன்னை கடவுள் கைதூக்கி விட்டுருவார். வேலை கஷ்டம் தான். நாய் பொழப்புதான். ஆனாலும் இந்தக்காசு யார் தருவா. இந்தக்காசு மெட்ராஸுக்குப்போய் அதை சரியா உபயோகப்படுத்திண்டா, நல்லாயிருந்துடலாம். எட்டு வருஷம் கழிச்சு ஊருக்குப் போறேன். எங்கப்பா பார்த்துட்டு வாயைப் பொத்திண்டு அழுதார். ஏம்ப்பான்னேன். என்னடா இப்படி கறுத்துப் போயிருக்கியேன்னார். நான் என்னமாதிரி வேலை செய்யறேன்னு அப்பாக்கு சொன்னேன். அப்பாவும், அம்மாவும் விக்கி விக்கி அழுவறாங்க. வேணாம்டா கோயில்லயே இருந்துடறான்னு. முடியவே முடியாதுன்னுட்டேன். லீவு முடிஞ்சவுடனே டக்குனு ஏரோப்ளேன் ஏறிட்டேன். இங்க வந்து இறங்கினபோது எனக்கு கஷ்டமே இல்லை. தூக்கமே இல்லை. நாம நல்லா உழைக்கப் போறோம். நிறைய சம்பாதிக்கப் போறோம். சம்பாதிச்சு ஊர்ல கொண்டு வந்து வைக்கப் போறோம். ஊர்ல எல்லாரும் நல்லா இருக்கப் போறாங்க அப்படின்னு ஒரு நிம்மதி இருக்கு. இந்த வேலை பத்து வருஷத்துக்கப்புறம் முடியாது. வலுவில்லைன்னு தெரிஞ்சா நாம ஊருக்குப் போகலாம். ஊருக்குப் போனா அங்க வீடு இருக்கு. நமக்குன்னு கோயில் இருக்கு. கோயிலுக்கு பக்கத்துல கடை இருக்கு. ஏதாவது பண்ணி பொழைச்சுக்கலாம். ஆனால், இங்க எவ்வளவு தூரம் வேலை செய்து எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சம்பாதிச்சுட்டு போகணும். இதுதான் என் திட்டம். இதுல கஷ்டம் எங்கேயிருந்து வந்தது பெரிய சாமி?"



அந்த அந்தண இளைஞன் பேச, எல்லோரும் கைதட்டினார்கள்.

"விஸ்வேஸ்வரா... நீ பேசிட்ட. உன் ஃபேமிலிபத்தி பேசிட்ட. என் கதை உன் கதை மாதிரி இல்லைப்பா. அது வேறமாதிரி இருக்கு."

அந்த இளைஞன் லுங்கியை மடித்துக் கொண்டு எழுந்திருந்தான்.

"பேரு மணிமாறன். ஊர் மதுரைக்கு பக்கத்துல இருக்கற வத்தலகுண்டு. நிறைய பேருக்கு நான் யாருன்னே தெரியாது. ஏதோ பார்த்து குட்மார்னிங் சொல்றதோட சரி. மூணு தடவை ஊருக்குப் போயிட்டேன். ஒவ்வொரு தடவை ஊருக்குப் போற போதும் ஏண்டா ஊருக்குப் போறோம்னு இருக்கும். அங்கேர்ந்து திரும்பி வரும்போது என் தலையெழுத்து இங்க திரும்பி வரோமோ அப்படின்னு துக்கம் இருக்கும். இப்படி சொல்லக் கூட எனக்கு ஆள் கிடையாது."

"சொல்லுப்பா சொல்லு.. நாங்களெல்லாம் என்னாத்துக்கு இருக்கோம். சொல்லு."

யாரோ உற்சாகமூட்ட மணிமாறன் உட்கார்ந்து கொண்டான்.

தலையைக் கவிழ்த்து சற்று நேரம் இருந்தான். நிமிர்ந்தான்.

"நாம கஷ்டப்பட்டு சம்பாதிக்கறோம். அங்க கொண்டு போய் கொடுக்கறோம். ஆனா அந்த நாய்ங்க நன்றியோட இருக்கா. நம்மள பார்த்தே குலைக்கும், ஊருக்கு வந்தவுடனே வா... வா... எப்போ வந்த அப்படின்னு கேட்பான். நேத்துத்தான் வந்தேன்னவுடனே ஏதாவது கொண்டு வந்திருக்கியா அப்ப

டின்னுவான். சென்ட்... பாடிஸ்ப்ரே, சோப்பு, சிகரெட்டுன்னு வாங்கிப்பான். அடுத்த வாரம் நம்மளப்பார்த்து கேட்பான், எப்போ ஊருக்குப் போகப்போற. நமக்கு கடுப்பா இருக்கும். அங்க கஷ்டப்பட்டு வேலை செய்துட்டு அக்கடான்னு வரும் போது இவன் ஒரே வாரத்துல, எப்போ ஊருக்குப் போகறேன்னு நம்மள பயமுறுத்தறானேன்னு ஒரு வேதனை வரும். ஏன் கேட்கறேன்னுவேன். நீ கொடுத்த பாடிஸ்பிரே ஆயிப்போச்சு. எனக்கு வேற எவன் வாங்கித்தருவான். நீதான் வாங்கித்தருவே. மறுபடியும் நீ ஊருக்குப்போய் திரும்பவும் வரும்போதுதான் அந்த மாதிரி டப்பா கிடைக்கும். அதனாலதான் கேட்கறேன். நீ எப்போ ஊருக்குப் போகப்போற. அடுத்த தடவை ரெண்டு டப்பா வேணுங்கறதுக்குகாக நான் அம்பது டிகிரி வெய்யில்ல முன்னயும், பின்னயும் ரத்தம் ஒழுக வேலை செய்யணும். இதை நினைக்கிறபோது எனக்கு கோபம் வருது. சரி, இந்தக் கிழவனா வது அறிவு கெட்டத் தனமா பேசறான் அப்படின்னா அம்மாவும் சரி, அப்பனும் சரி, அக்காளும் சரி, தங்கச்சியும் சரி எவ்வளவு துட்டு நம்மகிட்டேயிருந்து பிடுங்கலாம்னு பார்க்கறாங்களே தவிர நம்மளபத்தி அக்கறைப்படறதா தெரியலை.

எனக்கு இருவத்தொன்பது வயசாச்சும்மா. கல்யாணம் பண்ணலை அப்படின்னா. ஏன் நீ கல்யாணம் பண்ணிகிட்டு எல்லாத்தையும் எவளுக்காவது கொண்டு போய் கொட்டற துக்கா. மெல்ல பண்ணிக்கலாம். அப்படின்றாங்க எங்கம்மா. எவ்ளோ வருத்தமா இருக்கு.

இவங்களுக்கு துட்டு வேணுங்கறதுக்காகவே என் கல்யா ணத்தை தள்ளி போட்டுக்கிட்டிருக்காங்க. இதை வெளியே சொன்னா வெட்கக்கேடு. யார்கிட்ட போய் சொல்வேன். எங்க போய் அழுவேன். தனியா எதிர்பக்கத்து பாலைவனத்துக்கு போய் அங்க நின்னு எனக்கு நானே பேசி அழுதுட்டு மெல்ல திரும்பி வருவேன். பெத்த தாயே உனக்கு இப்போ கல்யாணம் வேணாம். துட்டு சம்பாதின்னாக்க."

"அவங்க சொல்றதுல ஒரு நியாயம் இருக்குப்பா." யாரோ சொல்ல ஆரம்பிக்கும்போது மணிமாறன் சரக்கென்று திரும் பினான்.



"நீங்க கல்யாணம் ஆயிட்டு வந்திருக்கீங்க. பொண்டாட் டிய பிரிஞ்சு இருக்கறீங்க. ஊருக்குப்போய் மறுபடியும் பெண் டாட்டியோடு ஒருமாசம் சந்தோஷமா இருக்கப் போறவங்க. உங்களுக்கு என் துக்கம் புரியவே புரியாது. நீங்க தயவு செய்து பேசாதீங்க" என்று கூச்சலாய் சண்டையாய் பேச அங்குள்ள வர்கள் சமாதானப் படுத்தினார்கள்.

"அதுவும் உனக்கு நடக்கத்தான் போகுது. நீயும் கல்யாணம் கட்டத்தான் போற. கல்யாணம் கட்டிட்டு அவளோட ஒரு மாசம் இருந்துட்டு பொட்டிய தூக்கிட்டு கிளம்பி ஏரோப்ளேனுக்கு வரும்போது மனசு ஒடிஞ்சு கதறும். பொண்டாட்டிய மட்டும் பிரியறது கஷ்டமில்லைடா. ரெண்டு குழந்தைங்க ஆனபிறகு ஒண்ணுத்துக்கு நாலு வயது. ஒண்ணுக்கு ஒன்றரை வயது. ரெண்டும் காலை கட்டிகிட்டு கதறும்பார் போவாதப்பா.. போவதாப்பான்னு. ஆனா அதை விடுவிச்சுகிட்டு ஏரோப்ளேன் ஏறப்போறமே அப்போ மனசு அழும். தலையில அடிச்சுகிட்டு மனசு அழும். இப்படியொரு வாழ்க்கை தேவைதானா. இப்படிப் போய் சம்பாதிக்கிறோமே எனக்கு இந்த சம்பாத்தியத்துல லோக்கலா ஒரு வேலை கிடைக்காதா. இவ்ளோ துட்டுகூட வேணாம். இதுல பாதி துட்டு எனக்கு லோக்கலா சம்பாதிக்க முடியாதா. அப்படின்னு கதறல் வரும். என்னைப் பத்தித்தானே யோசனை பண்ற. உன்னைப்பத்திதானே நான் யோசனை பண்றேன். என் பொண்டாட்டி... அவ நிலமை எவ்வளவு மோசம் தெரியுமா. கல்யாணம் ஆகி ஏழு வருஷமாச்சு. இது வரைக்கும் நாங்க சேர்ந்து இருந்தது ஒன்பது மாசம்.

விஸ்வேஸ்வர ஐயரு சொன்னாரே வீடியோ, டேப்ரிகார்டர், டி.வி., சொந்தவீடு, மோட்டார் சைக்கிள் எல்லாம் எங்க வீட்ல யும் இருக்கு. ஆனா என் பொண்டாட்டி என்ன சொல்றா. இது எதுவுமே வேணாம். நீ இருந்தா போதும், நீ இல்லாத இதெல் லாம் இருந்தா எனக்கு பாரமா இருக்குன்றா. எனக்கு டி.வி. பார்க்க பிடிக்கலைன்றா. கூட்டிட்டு போயிடுங்க. நானும் உங்க கூட வந்துடறேன். அங்கு குழந்தைகளை படிக்க வைக்கலாம் அப்படின்றா. பொண்டாட்டிய இங்க கூட்டிட்டு வந்துட்டா. காசு சேர்க்க முடியாது."

"என்ன... மனைவியை இங்க கூட்டிவர முடியுமா."

பெரியசாமி ஆவலாகக் கேட்டான்.

"ஆங்... கல்யாணத்துக்கு இப்பவே மனசு அடிபோடுதா."

யாரோ சொல்ல கூட்டம் முழுவதும் வாய்விட்டுச் சிரித்தது.

"இருக்காங்க தம்பி. ஒரேயொரு ஃப்ளாட்டை எடுத்துகிட்டு ரெண்டுரும் தனித்தனியா பிரிச்சுகிட்டு சமையல் ரூமையும் ஹாலையும் காமனா வச்சுகிட்டு இருக்காங்க. ரெண்டு ரூமையும் கொண்ட ப்ளாட்டுக்கு பன்னெண்டாயிரம் ரூபா வாடகை. ஆறாயிரம் .. ஆறாயிரமா கொடுத்து ஒத்துமையா இருக்கறவங்களும் இருக்காங்க. அண்ணன், தம்பி ரெண்டு பேரும் இங்க வேலைக்கு வந்தாங்க. ரெண்டு பேருக்கும் தனித்தனியா கல்யாணம் பண்ணாங்க. ஒரு ப்ளாட் எடுத்தான். அழகாக ஒரு சமையல் ரூம்ல சமைச்சுட்டு குடித்தனம் பண்றாங்க. ஒரு சமையல் ரூம்ல இந்தப்பக்கம் ஒருத்தி சமையல். அந்தப் பக்கம் ஒருத்தி சமையல். இப்படியொரு சோஃபா செட். அப்படியொரு சோஃபா செட். இந்த சோஃபா இவங்களது. அந்த சோஃபா அவங்களது. குழந்தைக்கு நடுவுல ஒரு தொட்டில் கட்டி விட்ருக்காங்க. சந்தோஷமாகத்தான் இருக்காங்க. ஆனா, செலவு அதிகம்தான் இதோ இந்த ஷெட்டுக்கு வாடகையே கிடையாது. ஆறாயிரம் ரூபா என்னத்துக்கு வாடகை கட்டணும். ஒரு வருஷம் சேர்த்தோம்னா அறுபதாயிரம் ரூபா ஆச்சே. அண்ணன் தம்பி ரெண்டு பேரும் சேர்த்து லட்சத்து இருபதாயிரம் ரூபா சேர்த்துடலாமே. ஆனாலும், அவங்க பொண்டாட்டிங்க விடலை. அந்த செலவு ஆனாலும் பரவாயில்லை. நாங்க உங்களோட இருக்கோம் அப்படின்னு சொல்லிட்டாங்க.

பையனுக்கு ஒரு வயசு. இங்க வந்துட்டா. நாலு வருஷம் இங்கயே புருஷனோட இருந்து குடித்தனம் பண்ணிட்டு, அஞ்சாவது வருஷம் பையனை கொண்டுபோய் மெட்ராஸ்ல பள்ளிக்கூடத்துல சேர்த்துடுவாங்க. இன்னொரு அஞ்சு வருஷம் இங்க பேச்சலர் லைஃப் லீட் பண்ணிட்டு நேரா மெட்ராஸ் போயிடுவாரு. இது ஒரு விதமான கணக்கு. இது ஒரு விதமான வாழ்க்கை.



வெய்யில்ல என்னால வரவே முடியாதுன்னு சொல்ற பொண்டாட்டியும் இருக்காங்க. மலையாளிஸ் யாரும் பொண்டாட்டிய கூட்டிட்டு வரமாட்டாங்க. அதிகம் செலவு பண்ணமாட்டாங்க. யாரோடும் கலந்து பேசமாட்டாங்க. கரெக்டா ஜுன் மாசமானா பொட்டியை எடுத்துகிட்டு கிளம்பிடுவான். அந்த மாசம் அவங்க ஊர்ல நல்ல மழை இருக்கும். சுத்தமா நனைஞ்சு குளிரக்குளிர திருப்பி இங்க வேலைக்கு வந்துடுவான்."

"ஏங்க எனக்கு இங்க அப்ரண்டிஸ் வேலை கிடைக்குமா."

பெரியசாமி ஆவலை அடக்கமுடியாமல் கேட்டான்.

"அட முட்டாளே. இந்த அடுப்புல வந்து ஏன் வேகணும்னு பார்க்கற. நல்ல ஏ.சி.ரூம் சமையல் செய்துட்டு மத்தியானம் நல்லா படுத்துகிட்டு தூங்கலாம். இஷ்டப்பட்ட நேரத்துல இஷ்டப்பட்டதை சாப்பிடலாம். கேக், பிஸ்கெட்டுன்னு நிறைய இருக்கும். பலவிதமான ஜூஸ் இருக்கும். கீழ ரத்தினகம்பளம் போட்ட வீடு. ஏன் இங்க வந்து மாட்டற."

மணிமாறன் சொன்னான்.

"இங்க உங்களோட இருக்கறது சந்தோஷமா இருக்கு. அங்க அவங்க கிளம்பி போயிடுவாங்க. அப்புறம் போரடிக்குது. வந்தாங்கன்னா அவங்களுக்குள்ளயே இங்கிலீஷ்ல பேசிக்கறாங்களே தவிர, என்கூட பேசமாட்டேன்றாங்க."

"தப்பு பண்ற பெரியசாமி. நான் உனக்கு வேற சில விஷயங்கள் சொல்லித்தரேன். அப்போ உனக்கு டைம் சரியா இருக்கும்" என்று மெல்ல சொல்ல, பெரியசாமி அவரை உற்றுப் பார்த்தான்.

விஸ்வேஸ்வரன் எழுந்து வந்து, அவன் தோளில் கை வைத்து தனியே தள்ளிக் கொண்டு போனான்.

## 3

"என்னப்பா மஸ்தூரா போலாமா அப்படின்னு கேட்டியாமே. மஸ்தூரா போவறதுக்காகவா உன்னை இங்க கூட்டிட்டு

வந்திருக்கேன். உனக்கு எவ்வளவு செலவாயிருக்கு தெரியுமா. அதை ஏதாவது கேட்டோமா. ஏம்ப்பா... இப்படி நன்றி கெட்டத் தனமா நடந்துக்கறீங்க."

தாமோதரன் உரத்த குரலில் கத்த, கைகட்டி பெரியசாமி அவர் எதிரே நின்றிருந்தான்.

"சரி விடு. ஏதோவொரு ஆசையில கேட்டுட்டான். தம்பி மஸ்தூரா போனா கஷ்டம்டா. அப்படி வேணாம். உனக்கு இங்க என்ன சிரமம் சொல்லு."

"என்னா சிரமம். அங்க இருக்கற பசங்க தூண்டி விட்ருப் பாங்க. கூடகாசு கேளுன்னு. இப்போ அதான் சிரமம் அவனுக்கு. ஊர்ல ஒண்ணுமே இல்லாம சுத்திகிட்டு இருந்தான். அஞ்சாயி ரம் ரூபா சம்பளம் கொடுக்கறோம்னு சொன்னோம். ஒழுங்கா இருக்க வேண்டியதுதானே. நம்ம சாப்பிடற அதே ஃபிஷ், அதே சிக்கன், அதே அரிசி இவனும் சாப்பிடறான். இதைவிட ரொம்ப சௌகரியமா எப்படி இருக்க முடியும்."

"மஸ்தூரா இருந்தா என்ன சம்பளம்னுதான் கேட்டேன். மஸ்தூரா வரத்துக்கு சொல்லவேயில்லை. உங்களாண்ட யாரோ தப்பா சொல்லியிருப்பாங்க. எனக்கு இந்த இடத்தை விட்டுப் போகணும்னு ஒண்ணும் ஆசையில்லைய்யா. வாரத் துக்கு ஒரு தடவை அவங்களோட உட்கார்ந்து வெள்ளிக் கிழமை சும்மா சந்தோஷமா பேசிட்டு வரலாம்னு நினைக் கறேனே தவிர, தமிழ் பேசறவங்களோட உட்கார்ந்து, சினிமா, டிராமா பத்தி பேசலாம்னு நினைக்கறேனே தவிர வேற ஒண் ணும் இல்லைய்யா. நான் இங்க நல்லாத்தான் இருக்கேன்.

சௌகரியமாகத்தான் இருக்கேன். நான் நன்றி மறக்கமாட் டேன்யா. நிறைய செலவு பண்ணியிருக்கீங்கன்னு தெரியும்."

மெல்லிய குரலில் பேச, அந்த இன்ஜினியர்கள் அமைதியாக அவனைப் பார்த்தார்கள்.

அத்தியப்பன் அருகே வந்தார். அவன் தோளில் கைவைத் தார்.

"நீ இப்போதான் வந்த தம்பி. நல்லா வேலை செய்ற. உன் வேலை எங்க எல்லாருக்கும் பிடிச்சுருக்கு. எதுவும் படிபடியாத்



தான் போகணும். தடுக்தடுக்குனு போக முடியாது. வேற யாராவது உன்னை கூப்பிட்டு கூடுதலா சம்பளம் தரேன்னு சொல்லுவாங்க. ஆனா, உனக்கொரு ஆபத்துன்னா அவங்க உன் கூட நிக்கமாட்டாங்க. எனக்குத் தெரியாதுன்னு விட்ரு வாங்க. லட்சுமி நாராயணனோ, நானோ, தாமோதரனோ அப்படி இல்லை. எங்களுக்கு மனுஷாள் முக்கியம். நாங்க தேடறது நல்ல மனுஷாளைத்தான். நல்ல வேலைக்காரங்களைத்தான். காசு முக்கியமில்லை. என்னத்துக்கு சமையல்காரன்னு சொல்லி நாங்களும் மெஸ்ல சாப்பிட்டுக்க முடியாதா. பாம்பே லேர்ந்து வந்தவங்க இருக்காங்களே அவங்களுக்கு வேலைக் காரங்களா இருக்காங்க. நல்ல சாப்பாடு சாப்பிடுவோம் அப்ப டின்ற எண்ணத்துலதான் உன்னை வரவழைச்சது. நீயும் நல்லா வேலை செய்யற. என்னாத்துக்கு நடுவுல கலையற."

"இல்லைங்கய்யா நான் கலையலை. உங்ககிட்ட ரொம்ப நன்றியோடதான் இன்னமும் இருக்கேன். நீங்க கூட்டிகிட்டு வந்தீங்க. மரியாதையா நடத்தறீங்க. நல்லா சோறு போடறீங்க. எனக்கு செலவே இல்லை. இந்த அஞ்சாயிரம் ரூபாயை வீட் டுக்கு அனுப்பினாகூட போதும். எங்கம்மா பரம சௌக்கியமா இருப்பாங்க. ஊருக்கு போகும்போது ஒரு செகனேண்ட் டி.வி. வாங்கிட்டு போகணும்."

"ஏண்டா. செகணேண்ட் டி.வி., நல்ல டி.வி. வாங்கித் தரேன்டா. கவலைப்படாத."

லட்சுமிநாராயணன் உரத்த குரலில் சொல்ல, அவன் நடு ஹாலில் அவர்கள் மூவரையும் விழுந்து வணங்கினான்.

"தாமோதரன் இவன்மேல் தப்பில்லை. சுத்தி இருக்கற ஆளுங்க மெல்ல மெல்ல தூண்டி விடறாங்க. அவன் இடத்துல நான் இருந்தாலும் எனக்கும் டெம்ப்டேஷன்தான் வரும். நாப்பது அம்பது மெக்கானிக் நடுவுல உட்கார்ந்து அரட்டை அடிச்சுகிட்டிருந்திருக்கான். எல்லாம் இருவத்தஞ்சாயிரும் ரூபா சம்பளக் காரங்க. அப்படித்தான் இருப்பாங்க. நான் பயப்படறது அவங்களைப்பத்திக்கூட இல்லை."

"இதுக்கு முன்னாடி இருந்த இன்ஜீனியர்ஸே இவனைப்பத்தி விசாரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. நான் உங்களோட இருக்கேன்னு தெரியாத அத்தியப்பன்னு ஒரு இன்ஜீனியர் இருக்காராமே அவர் வீட்ல ஒரு சமையல்காரன் இருக்கானாமே. உனக்கு ஏதாவது ஐடியா உண்டா அவனைப்பத்தி. அத்தியப்பன் வீட்ல சாப்பிட்டிருக்கியான்னு கேட்டாங்க. சாப்பிட்டிருக்கேங்க ரொம்ப நல்லா சமைக்கறான் அப்படின்னாங்க. அந்தப் பையனை எப்படியாவது மடக்கி நம்ம இடத்துக்கு கொண்டு வந்துடணும்ப்பா. அவன் பேர் என்ன சொல்லு அப்படின்னாங்க. தெரியலை ஸார். கேட்டு சொல்றேன்னு வந்துட்டேன். இவன் மாதிரி ஆளுங்களைப் பார்த்தா அள்ளிண்டு போயிடுவாங்க."

"இல்லை ஸார், நான் போகமாட்டேன்."

லட்சுமிநாராயணன் குரலுக்கு பெரியசாமி பதில் சொன்னான்.

அவர்கள் கவலையோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சாமி சத்தியம் ஸார். எங்கம்மா சத்தியம். எங்க ஊர் எல்லையம்மன் சத்தியம். நீங்களா என்னை துரத்தினாலொழிய நான் போக மாட்டேன் ஸார்."

அவர்கள் நெகிழ்ந்தார்கள்.

"சரிடா. நீ இவ்ளோ பெரிய வார்த்தை சொன்னதுனால நானும் பதிலுக்கு சொல்லணும். நீ உள்ள போய் வேலைய கவனி. நான் சொல்றேன்."

லட்சுமிநாராயணன் அவனை சமையலறைக்கு அனுப்பினார். நண்பர்களோடு தனியறைக்குப் போனார். கதவு சார்த்திக் கொண்டார்கள். அவர்கள் உள்ளே ஏதோ பேசிக் கொண்டார்கள்.

பெரியசாமிக்கு சந்தோஷமாக இருந்தது. நிச்சயம் சம்பளம் அதிகப்படுத்துவார்கள் என்று குதூகலம் ஏற்பட்டது.

அவர்கள் வெளியே வந்தார்கள். மாதம் பன்னிரெண்டாயிரம் ரூபாய் சம்பளம் தருகிறேன் என்று சொன்னார்கள்.



பெரியசாமிக்கு மயக்கம் வந்தது. அம்மா என்று அலறி அழவேண்டும் போல் தோன்றியது. போன் போட்டுப் பேச வேண்டும் என்று ஆசை வந்தது.

ஆனால், எப்படிப் பேசுவது.

"ஐயா... மாசத்துக்கு ஒரு தடவை அம்மாவோட பேசினா நல்லாயிருக்கும்."

"ஏற்பாடு பண்ணிடலாம். ரெண்டாவது ஞாயித்துக்கிழமை அம்மாவை நம்ம வீட்டுக்கு வரச்சொல்லி ஒரு லெட்டர் போட்டுடு. நானும் எங்க வீட்டுக்கு போன் பண்ணிச் சொல்லிடறேன்."

பெரியசாமி லட்சுமிநாராயணனைப் பார்த்து நன்றியோடு சிரித்துவிட்டு சமையல் அறைக்குப் போனான்.

இவங்களுக்கு ஏதாவது பண்ணணுமே. அத்தியப்பன் ஒரு மாதிரி அன்பு. லட்சுமிநாராயணன் இன்னொரு மாதிரியான அன்பு. தாமோதரன் ஒரு முரட்டு அன்பு. மூணு பேருமே கெட்டிக்காரங்க. பிரச்சினை எதுவானாலும் பட்டுனு போட்டு உடைச்சு அது என்னான்னு பேசிடறாங்க இல்ல. பன்னெண்டாயிரம் ரூபா எவ்ளோ பெரிய காசு. இவங்களுக்கு ஏதாவது பண்ணணுமே.

மனம் நன்றியில் தவித்தது.

அன்று கேசரியும், வெங்காய பக்கோடவும் பண்ணினான். சுடச்சுட கொண்டு போய் பரிமாறினான்.

அவர்கள் திகைத்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து கண் சிமிட்டிக் கொண்டார்கள்.

லட்சுமிநாராயணன் வாய்விட்டுச் சிரித்தான்.

"இதுதாண்டா... இதான் நான் எதிர்பார்க்கறது."

தாமோதரன் உரத்த குரலில் அவனைப் பாராட்டினார்.

"நீ உன் வேலையைச் செய்டா. மத்ததை நாங்க பாத்துக்கறோம். வயிறு நிறைய சோறு போட்டா உன்னை வேறுவிதமா நடத்தத் தோணுமா. ஏமாத்தத் தோணுமா. ஐயோ இந்தப்புள்ள பார்த்துப் பார்த்துப் பண்றானேன்னு நமக்குத்தானே கூட

செய்யணும்னு ஆசைவரும். உலகத்துல ரொம்ப மரியாதையான வேலை சமையல் வேலைடா. ஒழுக்கமா இருந்தா சமையல் வேலையில உச்சாணிக் கிளையில போயிடலாம். இந்த இடத்துல மட்டும் நான் நூறு பேரை உதாரணம் காட்ட முடியும். ஐயோ... சமைக்கிறோமே அப்படின்னு உனக்கே வெட்கம் வந்துடுச்சுன்னா உன்னால இங்க நிக்க முடியாது. மஸ்தூர் வேலை. அப்ரண்டிஸ் வேலைன்னு கேட்கறியே, என்னா வேலைன்னு தெரியுமா. கக்கூஸ் கழுவணும்டா. தேவையா உனக்கு. பெருக்கித் துடைச்சு பண்ற வேலைக்குப் போய் ஏண்டா சேரணும்."

"அதை மறந்துடுங்கண்ணா. நான் அந்தப் பக்கமே போகலை." அவன் வாக்கு கொடுத்தான்.

ஒரே மாதிரியாய் மூன்று டிபன் பாக்ஸ்கள் வாங்கி வந்தார்கள்.

"காலையில சாப்டுட்டு போறது போரடிக்குதுடா. இட்லியோ, இடியாப்பமோ, பொங்கலோ இதுல அடைச்சு கொடுத்துடு. அங்கப்போய் சாப்பிடறோம்" என்று அவனை கேட்டுக் கொண்டார்கள்.

அவன் காலையில் எழுந்ததும் பல் தேய்த்து சுவாமி விளக்கேற்றி அதற்கு வாங்கின பூக்களை போட்டுவிட்டு ஊதுபத்தி கொளுத்தி வைத்து சிறிதுநேரம் கண்மூடி நின்றிருப்பான். பிறகு அடுப்பு பற்றவைத்து காபி போடுவான். பெரிய ஃப்ளாஸ்க்கில் ஊற்றி ஹாலுக்குக் கொண்டு போய் வைத்துவிடுவான்.

ஐந்தரை மணிக்கு எழுந்த இன்ஜீனியர்கள் பல் தேய்த்த கையோடு குளித்து விடுவார்கள். உடைமாற்றிக் கொண்டு ஹாலுக்கு வந்து உட்கார்ந்து, அன்றைய பேப்பரை பார்ப்பார்கள். டி.வி. பார்ப்பார்கள். இரண்டு மூன்று பிஸ்கெட்டுடன் காபி குடிப்பார்கள். ஏழுமணிக்கு ஷுவை அணிந்து கொண்டு வெளியே கிளம்பி விடுவார்கள்.

டிபன் பாக்ஸ் வாங்கிய மறுநாள் அவன் நிறைய முந்திரி பருப்பு போட்டு, பொங்கல் அடைத்துக் கொடுத்தான். தேங்காய் சட்னியும், காரக்குழம்பும் வைத்திருந்தான்.

"வாசனை தூக்குதே."



அங்கேயே ஒரு ஸ்பூன், வாயில் விட்டுக்கொண்டு லட்சுமி நாராயணன் பாராட்டி விட்டுப்போனான்.

அவர்கள் போனதும் பெரியசாமி வீடு சுத்தம் செய்தான். துணி துவைத்தான். உலரவைத்தான். போய் குளித்துவிட்டு காபி குடித்தான். சிறிதுநேரம் உட்கார்ந்து டி.வி. பார்த்தான். தமிழ் புத்தகங்கள் படித்தான். பிறகு பகல் உணவு தயாரிக்க ஆரம்பித்தான்.

உருளைக்கிழங்கு கறி, கீரை மசியல், முருங்கைக்காய் சாம்பார் வைத்தான். கோழியை துண்டாக நறுக்கி பொறித்து வைத்தான். மீன் வறுவல் வைத்தான்.

"மூணு முருங்கைக்காய் பத்தொன்பது ரூபாயா. என்னாங்க இது" என்று ஆச்சரியமாகக் கத்தியது ஞாபகம் வந்தது.

"அப்படிப் பார்க்கக் கூடாதுடா. நாம வாங்கற சம்பளத்துக்கு இந்த முருங்கைக்காய் ரொம்ப சீப். கேரட் பார் உடைச்சா ஜூஸ் மூஞ்சியில அடிக்குது."

கேரட் உடைக்க, ஜூஸ் வழிந்தது. கீரைகள் தளதளவென்று இருந்தன.

கீரை பாகிஸ்தானிலிருந்து வருகிறது. கேரட் ஆஸ்திரேலியாவிலிருந்து வருகிறது. அமெரிக்க வெங்காயம், உருளைக் கிழங்கு எல்லாம் உள்ளங்கையை விடப் பெரிதாக இருந்தன. புத்தம் புதிய மீன். நாற்றமே இல்லாத மீன்.

ஒன்றரை மணியிலிருந்து ரெண்டு மணிக்குள் ஒவ்வொருவராக வந்தார்கள்.

வெய்யில் தாங்காமல் சிறிதுநேரம் கண்மூடி படுத்திருந்தார்கள். மெல்ல எழுந்து முகம் கழுவி சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள். ருசித்து சாப்பிட்டார்கள்.

"யார் கூப்பிட்டாலும் என்னை எழுப்பாதே" என்று சொல்லிவிட்டு, லட்சுமிநாராயணன் படுக்கப் போனான். ஏ.சி.யை முழு வீச்சில் போட்டுவிட்டு அவர்கள் அடித்துப் போட்டது போல் படுத்து உறங்கினார்கள். ஆறு மணிக்கு எழுந்து டீ குடித்தார்கள். பாட்டு கேட்டார்கள். ஆனந்த விகடன், குமுதம் படித்தார்கள்.

வீட்டிற்கு போன் போட்டு நெடுநேரம் பேசினார்கள். பெரிய சாமி, அவர்கள் போன் பேசும்போது ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பான்.

மெட்ராஸா.. சேலமா, உளுந்தூர் பேட்டையா.. எல்லாம் தமிழ்நாடு இல்லை. அந்தப்பக்கம் போன்ல இருக்கறவங்க எல்லாம் தமிழ்நாட்ல இருக்காங்க இல்லே. தாமோதரன் ஸார் வீட்லேர்ந்து சைக்கிள் எடுத்தோம்னா பதினஞ்சு நிமிஷத்துல அம்மாகிட்ட போய் இறங்கிடலாம். ஓடிப்போய் கட்டி பிடிச்சுக் கலாம். அப்பா எப்படியிருக்கார்னு விசாரிக்கலாம்.

அப்பா மீதும் அவனுக்கு ஆசை வந்தது.

குடிக்கணும் அவ்ளோதானே. நான் வாங்கித்தரேன். காசு போட்டு நல்ல சரக்கா வாங்கி உட்கார்ந்து குடி. சாப்பிட்டு தூங்கு என்று அவரை ஆசுவாசப்படுத்தலாம்.

நான்கு பெரியபடம் வெளிவந்து விட்டது. அரசியல் வாதிக்கு உடம்பு சரியில்லை என்று மருத்துவமனைக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். வீரப்பனை இன்னும் பிடிக்கவில்லை என்று பல விஷயங்கள் தெரிந்து கொண்டான்.

அழகே, தமிழே... அழகிய மொழியே... எனதுயிரே... என்று உரக்கப் பாட்டுப்பாடினான்.

தமிழ் படிக்கணும். நல்லா படிக்கணும். பழைய தமிழ் பாட்டெல்லாம் மனப்பாடம் பண்ணனும். இங்க புத்தகமே இல்லை. வெறும் வாரப்பத்திரிகைதான் இருக்கு. நல்ல புஸ்தகங் களா வாங்கிட்டு வரச் சொல்லணும்.

"டேய்.. தம்பி. இன்னொரு டிபன்பாக்ஸ்ல, எனக்கு கொடுக் கற மாதிரியே டிபன் போட்டுத்தறியா."

"தரேங்க. யாருக்கு."

"என்கூட ஒர்க் பண்றாரு. எனக்கு மேல வேலை செய்யறாரு. யோவ். நீ மட்டும் நல்ல டிபன் சாப்பிடற. எங்களுக்கெல்லாம் காய்ஞ்சுபோன ரொட்டிதான்யா கிடைக்குது. அப்படின்னு திட் டறாரு. அவருக்கு டிபன் எடுத்துண்டு போனா எனக்கு நல்லது."



லட்சுமிநாராயணன் கேட்க அவன் சரியென்று தலையசைத் தான்.

"லட்சுமி.. அப்புறம் இதுபாட்டுக்கு போயிகிட்டேயிருக்கும். எத்தனை டிபன் பாக்ஸ் எடுத்துட்டு போவ சொல்லு."

"இது ஒண்ணுதாங்க அத்தியப்பன்."

"இல்லை. உன் பாஸ் கேட்கறமாதிரி என் சீனியரும் கேட்க றாரு. நான் யோசனை பண்ணி சொல்றேன் ஸார்னு சொல்லிட் டேன்."

"கொண்டுபோய் கொடுங்களேன் என்ன தப்பு."

"எனக்கென்னவோ சரியா படலை."

"உங்களுக்கு சீனியர். என்கூட வேலை செய்யறவன். என் கூடவே படிச்சவன். க்ளாஸ் மேட். டிபன் கேட்கறான் என்ன பண்றது."

அந்த பிளாஸ்டிக் கூடையில் இரண்டிரண்டு டிபன் பாக்ஸ் களைப் போட்டு அவரவர் காரில் கொண்டுபோய் வைத்து விடுவான்.

அவன் கைவண்ணம் அந்த குவைத் அரசாங்கம் நடத்தும் எணணெய் பண்ணையில் கொண்டாடப்பட்டது.

"அந்தப் பையனை ஒரு வெள்ளிக்கிழமை அனுப்பேன்ப்பா. எங்க வீட்ல சமைக்கட்டும்."

எல்லோருக்கும் உயர் அதிகாரியாக இருந்த ஒரு பாலக் காட்டு தமிழர் கேட்டார்.

"அவனுக்கு ஒரேயொரு நாள் லீவு வெள்ளிக்கிழமை ஸார். அன்னிக்கும் போய் வேலை செய்யச் சொன்னா நல்லாவா இருக்கும்."

"ஒவ்வொரு வெள்ளிக்கிழமையுமா கேட்டேன். ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை."

அந்த இன்ஜீனியர்கள் அவனை பணிவோடு வேண்டிக் கொண்டார்கள்.

அவன் ஒரு வெள்ளிக்கிழமைபோல அடையும், அவியலும் செய்துவிட்டு வந்தான்.

அவர் இருக்கின்ற அடுக்குமாடி வீட்டில் எதிர்பக்கம் மலையாளி குடியிருந்தார். அந்த மலையாளியிடம் இன்னொரு மலையாளப் பெண்மணி வேலை செய்து வந்தாள்.

"ரொம்ப நல்லா சமைக்கறியாமே. உன்னைப்பத்தி சொன்னாங்க. இந்த வெள்ளிக்கிழமை பார்க் இருக்கு வர்றியா."

அந்தப் பெண்ணுக்கு நாற்பது வயது இருக்கும். ஆனால், கட்டிளமையாக இருந்தாள். உதடுக்கு சாயம் எழுதியிருந்தாள். பென்சிலால் புருவம் வரைந்திருந்தாள். கனமான ஒரு செண்ட் நெடி மூக்கைத் துளைத்தது.

"எந்த ஊர் உங்களுக்கு. மெட்ராஸா."

"சைதாப்பேட்டை."

"இங்க வந்து எத்தினி நாளாச்சு."

"நாலு வருஷம் ஆச்சு."

"உங்களுக்கு இங்க என்ன சம்பளம்."

"உன் சம்பளம் என்னன்னு சொல்லு. அப்புறம் நான் என் சம்பளம் சொல்றேன்."

அந்த அம்மாள் பேசினாள்.

அவன் தன் சம்பளம் பன்னிரெண்டாயிரம் என்று சொல்ல வாயெடுத்தான். சட்டென்று நிறுத்திக் கொண்டான். பேசாது இருந்தான்.

"ஆங்... உன் சம்பளம் சொல்ல மாட்ட. என் சம்பளத்தை மட்டும் சொல்லணுமா. என் சம்பளம் ஜாஸ்தியா இருந்தா இங்க பேசி உள்ள பூந்துடலாமான்னு பார்க்கறியா. அந்தப் பருப்பு இங்க வேகாது."

திடீரென்று அவள் உரத்த குரலில் சண்டை போடுவது போல் பேசினாள்.



"வேணாங்க உங்க சம்பளமும் வேணாம். என் சம்பளமும் வேணாம். அந்த பார்க் எங்க இருக்கு" அவன் மறுபடியும் கேட்டான்.

"எனக்குத் தெரியாது. நீயா கண்டுபிடிச்சுக்கோ."

அவள் உள்ளேபோய் தடேரென்று கதவு சார்த்திக் கொண்டாள்.

அவனுக்கு வேதனையாக இருந்தது.

எந்தக் காரணமுமில்லாமல் இந்த ஊரில் வந்து யாரையோ எதிரி ஆக்கிக் கொண்டோமே என்று வருத்தம் மிகுந்தது.

அவர் வீட்டு வேலையை முடித்துவிட்டு லிஃப்டில் கீழிறங்கி மிகப்பெரிய புல்வெளி தாண்டி நடக்கும்போது இரண்டு இளைஞர்கள் எதிர்ப்பட்டார்கள். ஒருவன் தோளில் குடிதண்ணீருக்கான ஜாடி இருந்தது. இன்னொருவன் கையில் காய்கறிப்பை இருந்தது.

அவர்கள் வீட்டு வேலை செய்யும் வாலிபர்களாகவே அவனுக்குத் தென்பட்டார்கள். அவன் மெல்ல சிரித்தான்.

அவர்கள் நின்று திரும்பி பார்த்தார்கள். யார் என்று கேட்டார்கள்.

தான் அத்தியப்பனிடம் வேலை செய்வதாக அவன் சொன்னான்.

"ஆங்... டிபன் பாக்ஸ்ல சாப்பாடு அனுப்பற இல்ல."

"ஆமாம். உங்களுக்கு எப்படி தெரியும்."

"இங்க யார் மூச்சுவிட்டாலும் எல்லாருக்கும் தெரிஞ்சுடும். அஞ்சாயிரம் ரூபா சம்பளம் வாங்கறியாமே."

"இல்லை. இப்போ அதிகமா."

"எவ்ளோ ஆறாயிரமா?"

"இல்லை. அதுக்கு மேல."

"எவ்ளோன்னு சொல்லு."

"பன்னெண்டாயிரம்."

அவன் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

"ப்பூ. இதானா வெள்ளிக்கிழமை பார்க்குக்கு வா" என்று சொன்னான்.

"எங்க இருக்கு பார்க்."

அவர்கள் இடம் சொன்னார்கள்.

இரண்டு பெரிய டவர்கள். அந்த டவரில் தண்ணீர் தொட்டி இருந்தது. அந்த டவருக்கு பக்கத்தில் நீண்ட நெடுஞ்சாலை, கடற்கரை ஒட்டி இருந்தது. அங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவைத்தில் வேலை செய்யும் வேலைக்காரர்கள் கூடுவார்கள் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது.

அவன் வெள்ளிக்கிழமைக்காக காத்துக்கிடந்தான்.

ஆயிரம் பேர் கொண்ட கூட்டம் அது. சளசளவென்று எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

புல் தரையில், படிவிளிம்பில், நாற்காலியில் உட்கார்ந்திருந் தார்கள். நிறைய மலையாளிகள், பாகிஸ்தானியர்கள், பங்களா தேஷ்கள், சீனர்கள் இருந்தார்கள். தனித்தனியாக, குழுக்குழு வாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள், முதியவர் கள், நடுத்தர வயதினர் என்று பலரும் அதில் இருந்தார்கள்.

"என்ன ஸார். நீங்கதானே பெரியசாமி."

அவனைப்பற்றி அவர்கள் எல்லாம் கேள்விப் பட்டிருந் தார்கள்.

"பன்னிரெண்டாயிரம் சம்பளம்னு சொன்னீங்களாமே. இந்தப் பெரியவருக்கு எவ்ளோ சம்பளம் தெரியுமா. நாப்பத் தஞ்சாயிரம். ஆயில் கம்பெனியில சீ·ஃப் குக். விழுந்து கும்பிட் டுக்கோ. அவர் நினைச்சா உன்னை எங்கயோ கொண்டு போயிட முடியும்."

அவன் எந்த மறுதலிப்பும் இல்லாமல் விழுந்து கும்பிட் டான்.

"அடடே. என் கால்ல எல்லாம் எதுக்குடா விழற. என்னால எந்த உதவியும் பண்ண முடியாது. நான் ஆயில் கம்பெனியில சீ·ஃப் குக்கா இருக்கேன். ஆனா, உன்னை வேலைக்கு



எடுக்கறதெல்லாம் வேற ஆளுங்கதான். இப்போது இருக்கற இடத்துலேயே இரு. அந்த இன்ஜீனியர்ஸ் எல்லாம் ரொம்ப நல்லவங்க. அவர்களை விட்டு வந்துடாத. ஒரு வருஷம் ரெண்டு வருஷம் ஆகட்டும். அப்புறம் தானா அவங்களா கொண்டு வந்து கம்பெனியில சேர்த்துடுவாங்க. அவசரப் படாத. அவசரப்பட்டேன்னா டக்குனு விசாவை கிழிச்சுப் போட்டு உன்னை ஊருக்கு அனுப்பிடுவாங்க. ஜாக்கிரதையா இரு."

அவர்கள் எல்லோரும் வாங்குகிற சம்பளத்திற்கேற்ப பிரிந்து கிடந்தார்கள். நாற்பத்தைந்தாயிரம் நாற்பத்தைந்தாயிரத்தோடு பேசியது. இருபதாயிரம் இருவதாயிரத்தோடு இணைந்து கிடந்தது. பன்னிரெண்டாயிரம் ரூபாய் யாருமே வாங்க வில்லை. ஒரேயொரு இளைஞன் மட்டும் தனக்கு அஞ்சாயிரம் ரூபாய் சம்பளம் என்று அவன் அருகே வந்து நின்றான். தன்னை அப்ரண்டிஸ் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"அப்ரண்டிஸ்ணா என்ன வேலை."

பெரியசாமி கேட்டான்.

லட்சுமிநாராயணன் சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது. சிறிதுநேரம் அந்தப்பையன் தயங்கினான்.

"எல்லாம் கழுவுற வேலை."

"தட்டா."

"தட்டும் கழுவணும், பாத்ரூமும் கழுவணும், கக்கூஸும் கழுவணும், சாக்கடை அள்ளணும் எல்லாம் தான்."

"அஞ்சாயிரம் ரூபாய்க்கு ஏன் ஒத்துகிட்ட."

"அந்த சீ·ஃப் குக்குதான் கூட்டிகிட்டு வந்தாரு. இருவதாயிரம் சம்பளம் பேசி அவரு பதினஞ்சாயிரம் எடுத்துகிட்டு எனக்கு அஞ்சாயிரம் கொடுக்கறாரு. ஒரு அஞ்சாயிரம். அஞ்சாயிரம் பிடித்தமா வச்சுக்கறாராம். ஊருக்குப் போறபோது விமானச் செலவு போக மிச்சம் கொடுத்துடுவாராம்."

"அப்போ உன் சம்பளம் பத்தாயிரம் ரூபாயா."

"ஆமாம்."

"வேலை கஷ்டமா."

"ரொம்ப கஷ்டம்."

"ஏன்"

"பீ அள்றது கஷ்டமில்லையா."

அவன் முகத்தில் அடித்தது போல் பேசினான்.

பெரியசாமிக்கு வயிறு கலங்கியது. மெல்ல அமைதியாய் அவனருகே உட்கார்ந்தான். தலையை தொங்கப் போட்டுக் கொண்டிருந்த, அந்த இளைஞன் முதுகை தட்டிக் கொடுத் தான்.

"பத்தாயிரம் ரூபா சம்பளம் யார் தரா சொல்லு" என்று மெல்ல சொன்னபோது அந்த இளைஞனும் ஆமாம் என்று ஆமோதித் தான்.

"ரொம்ப கஷ்டம் மெட்ராஸ்ல வாழ்க்கை. மெட்ராஸ்ல மக்கீஸ் கார்டன்னு ஒரு இடம் இருக்கு. அங்கேயிருந்து தான் வரேன். அம்மா இல்லை. செத்துப் போயிட்டாங்க. அப்பா ஜெயில்ல இருக்காரு. அக்கா வீட்ல சோறு சாப்பிட்டிகிட் டிருந்தேன். அக்கா புருஷன் கஞ்சா விக்கறாரு. அதனால போலீஸ்ல அடிக்கடி மாட்டுவாரு. மாட்டறபோது என்னை விக்க சொல்லுவாரு. நானும் மூணு நாலு தடவை போலீஸ்ல மாட்டியிருக்கேன். அடி தாங்க முடியாமத்தான் இங்க ஓடி வந்துட்டேன்."

"மத்தபடி மரியாதையா நடத்தறாங்க இல்ல."

"ச்சு... நடத்தறாங்க."

"ஏன், அலுப்பா சொல்ற."

"குப்பை அள்றவனுக்கு என்ன மரியாதை. வாடா போடான்னு தான் சொல்லுவாங்க."

"வேற ஏதாவது தொந்தரவு இருக்கா."

"சீஃப் குக்குக்கு கால் பிடிச்சு விடணும். முதுகு தேய்ச்சு விடணும். அந்த ஆள் ரொம்ப தொந்தரவு பண்றான்."

"புரியலையே."



"ராத்திரி வந்து பக்கத்துல படுத்துக்கறான். என்னாடி.. என்னாடின்னு முத்தம் கொடுக்கறான்."

"ஹோமோ செக்ஸா."

"ஆமாம்."

"சொல்லிறதுதானே."

"யார்கிட்ட சொல்றது."

"வேற எங்கனா வேலை வாங்கித் தரட்டுமா."

"நீயே இப்போதான் வந்திருக்க."

"இல்ல. என்னை ரெண்டு மூணு இடத்துல கூப்பிட்டாங்க. நான்தான் கூட்டிட்டு வந்தவர்களுக்கு துரோகம் பண்ண விரும்பல. வரமாட்டேன்னு சொல்லிட்டேன்."

"இவரு இங்க பெரியாளா இருக்காரே."

"நான் சொல்ற இடம் ரொம்ப பெரிய இடம். ட்ரை பண்ணிப் பாரு."

அவர்கள் இரண்டுபேரும் பேசுவதை அந்த தலைமை சமை யல்காரர் கவனித்துவிட்டு, சொடக்கு போட்டு தன் சீட்னை அழைத்தார். அருகே உட்காரச் சொன்னார். பெரியசாமியை லேசாக முறைத்தார். பெரியசாமி மெல்ல எழுந்து பார்க்கின் மற்ற பகுதிகளுக்குப் போனான்.

பங்களாதேஷிகளைப் பார்த்து கைகுலுக்கினான். பாகிஸ் தானியர்களிடம் போய் அருகே நின்றான்.

பாகிஸ்தான்காரனுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தது. இரண்டு பேரும் தட்டுத்தடுமாறி ஆங்கிலத்தில் பேசினார்கள்.

இங்க வந்த பிறகு, பாகிஸ்தானாவது, இந்தியாவாவது. நாம் எல்லோரும் உழைக்க வந்திருக்கிறோம். அதான் முக்கியம். நமக்குள் எந்த சண்டையும் இல்லை.

அந்த பாகிஸ்தான் கையை குலுக்க, இவனும் கை குலுக்கி அவனை கட்டித் தழுவிக் கொண்டான்.

"ஜரிதா போடுகிறாயா."

பாகிஸ்தான்காரன் ஒரு சின்ன பாக்கெட் நீட்ட வேண்டாம் என்று மறுத்து விட்டான்.

பர்மாக்காரர்கள் யாரோடும் உட்காராமல் உரத்த குரலில் விவாதித்து சண்டை போடுவது போல பேசிக் கொண்டிருந் தார்கள். மலையாளிகள் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள். அவன் போய் உட்கார்ந்து இரண்டு மூன்று பாட்டுக்கள் கேட்டான். மெல்லப் போய் அந்தப் பையனின் போன் நம்பரை தெரிந்து கொண்டான்.

வீட்டிற்கு போவதற்கு முன், லட்சுமிநாராயணனின் அதிகாரி வீட்டிற்குப் போனான். காலிங் பெல் அடித்து காத்திருந்தான்.

அவர் கதவு திறந்ததும் உங்களோடு மூன்று நிமிடம் பேச வேண்டும் என்றான். அவர் உள்ளே அழைத்ததும் அந்தப் பைய னைப்பற்றி விவரங்கள் ஒளிவு மறைவில்லாமல் சொன்னான்.

"லட்சுமிநாராயணன் சொன்னான்னு ஒரு பையனை வேலைக்கு வச்சுக்கலாம். நீ சொல்றேன்னு ஒரு பையனை வேலைக்கு வச்சுக்க முடியுமா. அந்தப் பையனையே உனக்கு அரைமணிநேரமாத்தான் தெரியும். டக்குனு அப்படி ஆளை எடுக்க முடியாதுடா. ஆனாலும் நீ சொன்ன பையனை நான் மனசுல வச்சுக்கறேன். ஒரு மாசம் அவனை பல பேரைவிட்டு விசாரிச்சு அதுக்கப்புறம் எடுத்துக்கறேன். அவன் பேர் என்ன சொன்ன."

"சௌந்திரபாண்டியன் ஸார்."

"நீ அத்தியப்பன்கிட்டதானே இருக்க. நான் உங்கிட்ட சொல்லி அனுப்பறேன். அப்போ பார்க்கலாம். வெள்ளிக் கிழமை, வெள்ளிக்கிழமை வந்து ஏதாவது பண்ணி கொடுத் துட்டுப் போயேண்டா."

"சரி ஸார். நிச்சயமா பண்றேன்.

"முறுக்கு, சீடை அதுமாதிரி ஏதாவது பண்ணத் தெரியுமோ."

"இதுவரைக்கும் பண்ணதில்லை ஸார். பண்ணணும்."

"நீ பண்ணி எடுத்துட்டு வந்தாலும் சரி, இங்க பண்றதா இருந்தாலும் சரி. நான் காசை கொடுத்துடறேன்."



37680
5269872

"ஸார் மேடமில்லையா."

"இருந்தாங்கடா. ஊருக்குப் போயிருக்காங்க."

"நம்மூருக்கா ஸார்."

"இல்லை. அமெரிக்காக்கு. அங்க என் மகள் இருக்கா. அவ ளுக்கு குழந்தை பிறக்க போகுது. அதுக்காக கூட துணைக்கு போறாங்க."

"ஒரேயொரு மகள்தானே ஸார்."

"ஆங்... ரெண்டு பையங்க. ஒரு பொண்ணு. இதோ இதான் பெரிய பையன். இதான் சின்ன பையன்."

அவர் போட்டோவை காண்பித்தார்.

ஒரு பெரியபடம். குடும்பப்படம். வீட்டிற்குள்ளே நடுநாயக மாக மாட்டப்பட்டிருந்தது. மாமி மிக மிக அழகாக இருந்தாள். மாமியின் மகளும் தேவதை போல இருந்தாள். தேவதைக்கு இணையாக அவளுடைய கணவனும் மிக நல்ல களையோடு இருந்தான். பையன்கள் அலட்டலாக நின்றிருந்தார்கள்.

"எல்லாரும் அமெரிக்காவுல இருக்காங்களா."

"இல்ல. இந்தப்பையன் லண்டன்ல படிக்கறான். இந்தப் பையன் கனடாவுல வேலை செய்யறான். மாப்பிள்ளை அமெரிக்காவுல இருக்காரு."

"எல்லோரும் நல்லா தமிழ் பேசுவாங்களா ஸார்."

திடீரென்று எந்த சம்மதமும் இல்லாமல் பெரியசாமி கேள்வி கேட்டான்.

அவர் திரும்பி அவனை வினோதமாகப் பார்த்தார்.

"இதென்ன கேள்வி. ஏன் தமிழ் பேசணும்."

"இல்லை ஸார். நாமெல்லாம் தமிழர்கள். தமிழ் பேசணு மில்லையா."

"தமிழர்கள்தாண்டா. ஆனா, தமிழ் எனக்கே மறந்து போச்சு. என் குழந்தைகளுக்கு எங்க ஞாபகம் இருக்கும்."

"என்ன ஸார் இப்படி பேசறீங்க. தமிழ் ஒரு நல்ல மொழி யில்ல."

பெரியசாமி பெரிய மனிதனைப்போல் கவலையோடும், ஆதங்கத்தோடும் கேட்டான்.

"நீ என்ன திராவிடக்கட்சியா."

"இல்லை ஸார். நான் எந்தக் கட்சியும் இல்ல. ஆனா, தமிழனா பிறந்துட்டு தமிழ் பேசமாட்டேன்றீங்களே. எல்லா மலையாளியும் மலையாளம்தான் பேசறாங்க. நம்மாளுங்க மட்டும் ஏன் ஸார் இங்கிலீஷ்ல பேசறாங்க."

"ஒண்ணு சொல்லட்டுமா. நாங்களெல்லாம் எங்க வீட்ல பேசிப்பழகினதே இங்கிலீஷ்லதான். எப்போதாவது மலையாளத்துல பேசுவோம். தமிழ்ல குறைச்சலாத்தான் பேசுவோம். எங்க தமிழை மத்தவங்களெல்லாம் கேலி பண்ணுவாங்கடா. அது பாலக்காட்டுத் தமிழ். நானாவது கொஞ்சம் சாதாரணமா பேசறேன். எங்க மாமி என்னவாக்கும் சொல்றாய் அப்படின்னு தமிழும் இல்லாத, மலையாளமும் இல்லாத பேசுவாங்க. எங்களை மலையாளியாகவும் எடுத்துக்கறதில்லை. தமிழராகவும் சேர்த்துக்கறதில்லை. அதனால நாங்க இங்கிலீஷ் பேசிண்டு பாம்பே டெல்லி, துபாய், அமெரிக்கான்னு கிளம்பி போயாச்சு. ஆனா ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. சந்திரனுக்கு ஆம்ஸ்ட்ராங் போனான். அங்க வந்து ஒரு மலையாளி சாய் சாய்னு வித்திண்டிருந்தான். அப்படின்னு சொல்வாங்க. டீ விக்கிற மலையாளி மட்டுமில்லை. அந்த டீ விற்கிற மலையாளிக்கு அக்கவுண்ட்ஸ் எழுதற மலையாளியா ஒரு பாலக்காடு ஐயர் இருப்பான்.

பிரிட்டிஷ்காரன் பீரியட்ல பம்பாயில குடியேறினது பாலக்காட்டு ஐயருங்க. முதமுதலா துபாய் வந்தது பாலக்காட்டு ஐயருங்க. எத்தனை வேதனை இருந்தாலும் ஒழுங்கா வேலை செய்து நல்லபடியா காசு சம்பாதிச்சு ஊருக்குக் கொண்டு போய் கொடுக்கணும் அப்படிங்கற ஒரு ஒழுக்கத்தை வச்சுண்டிருந்தது பாலக்காடு ஐயருங்க. வம்புதும்புக்கு போகமாட்டான். கெட்ட பழக்கத்துல ஈடுபடமாட்டான். கடவுள் நம்பிக்கை. வேலையில கெட்டிக்காரத்தனம். உண்மை இதெல்லாம் நிறைஞ்சவன் பாலக்காட்டு ஐயர்.



வேலையில ஏமாத்தறது. வேலை நேரத்துல தூங்கறது. பொய் சொல்றது. திருடறது. லஞ்சம் வாங்கறது. இது எதுவும் பாலக்காடு ஐயர்கிட்ட இருக்காது.

குவைத் கெட்டுப்போச்சுடா. நம்மாளுங்களால கெட்டுப் போச்சு. ஏதாவது தப்பு பண்ணி போலீஸ்ல மாட்டினுட்டா இங்க இருக்கற குவைத் ஆள்கிட்ட காசு கொடுத்து மஸ்கா அடிச்சு அவனை வந்து ரெக்கமண்ட் பண்ணச் சொல்லி அவன் மூலமா வெளியே வந்துடுவாங்க. அராபியன்னா லஞ்சம் வாங்காதவன். அவனையும் லஞ்சம் வாங்கும்படியா நம்மாளுங்க பண்ணிட்டாங்க. உனக்கு தெரியுமோ இங்க ரெண்டு, மூணு பேர் திராட்சைப் பழத்துல ஒயின் பண்றான். அப்படி ஒயின்பண்றவன் மாட்டினுட்டான், அப்படி மாட்டிண்டவனை ஒரு குவைதியினுடைய உதவியில வெளியே கொண்டு வந்துட்டானுங்க. ஏகப்பட்ட காசு செலவு பண்ணியிருக்காங்க. தினம் கார்த்தால அவர்கிட்ட போய் நின்னு அழுது புலம்பி கால்ல விழுந்து வீட்டு வாசப்படிக்கு பாலீஷ்போட்டு என்னென்னமோ பண்ணி தண்டனைலேர்ந்து தப்பிச்சுட்டான். இல்லைன்னா நடு ரோட்ல வச்சு முப்பதடி, நாப்பதடின்னு பிரம்பால அடி கிடைச்சுருக்கும். என்ன அசிங்கம்னா மறுபடியும் அதே விதமா திராட்சை பழத்துலேர்ந்து ஒயின் தயார் பண்றான்.

பெரியசாமி ஒண்ணே ஒண்ணு சொல்றேன். குவைத்துக்கு வேலைக்கு வந்துட்டு, லட்சுமிநாராயணனா போன்னு சொல்ற வரைக்கும் போகாத. அத்தியப்பனுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. இன்னிக்கு இல்லைன்னா அடுத்த வருஷம் பொண்டாட்டிய கூட்டிண்டு வந்துடுவார். லட்சுமிநாராயணனுக்கும் கல்யாணம் ஆயிடும். தாமோதரனும் கல்யாணம் பண்ணி வொய்ஃ போட செட்டில் ஆயிட்டா உன்னை ரிலீவ் பண்ணிடுவாங்க. அப்போ நீ எங்க வேணாலும் போகலாம். இதுக்கு ரெண்டு ரெண்டரை வருஷம் ஆகும். அதுவரைக்கும் அந்த மூணு பேருக்கும் ரொம்ப சின்சியரா இரு. அவங்க தானா சம்பளத்தை ஜாஸ்தி பண்ணுவாங்க. நீ ஊருக்கு போற போது நிறைய வாங்கித் தருவாங்க. நீ பண்றது தளுக்கு வேலைடா. பெரிய

ஃபாக்டரில வந்து மாட்டாதே. இருவத்தஞ்சாயிரம் ரூபா சம்பளம் கறது ஆட்டோ மெட்டிக்கா உனக்கு வந்துடும்."

அவரிடம் காசு வாங்கிக்கொண்டு கடைக்குப் போய் கடலை மாவும், சூரியகாந்தி எண்ணெயும் வாங்கிக் கொண்டு அவருடைய வீட்டிலேயே தட்டையும், தேன் குழலும் செய்து கொடுத்தான். உப்பும், ஓமமும் அதிகம் போட்டான்.

"இது நல்லாயிருக்கா. இல்ல கொஞ்சம் சப்புனு பண்ணித் தரட்டுமா."

அவரிடம் ருசி பார்க்க சில முறுக்குகள் கொடுத்தான்.

"டேய்... நல்லாயிருக்குடா. இந்த காரம் ஜோரா இருக்கும். வத்தல் வடாமும் பொறிச்சு வை. ரொம்ப பிடிக்கும்."

அடுத்த முறை சூப்பர் மார்க்கெட் போகும்போது கொத்தவரங்காய் வத்தலும், சுண்டைக்காய் வத்தலும், வடாமும் அப்பளமும், பப்படமும் வாங்கிவந்து பொரித்து தனித்தனி டப்பாக்களில் கொடுக்க அவர் மகிழ்ந்து போனார்.

ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

"ஸார் இவ்ளோ கொடுக்கறீங்களே."

"வச்சுக்கடா. சொன்ன நேரத்துக்கு வந்து அழகா செய்து கொடுத்த. எனக்கு ரொம்ப சந்தோஷம். என்ன வேணும்னாலும் கேளு. நான் பண்ணித்தரேன். ஊருக்குப் போறபோது வந்து பாரு. எங்கிட்ட சில விஷயங்கள் இருக்கு. உனக்கு அது உபயோகப்படும்."

"என்ன ஸார்."

"எலக்ட்ரிக் குக்கர் இருக்குடா. அயர்ன்பாக்ஸ் இருக்கு. நல்லா இருக்குன்னு வாங்கின ஸாண்டல்வுட் சோப், அவளுக்கு பிடிக்கலை. அது ஆறு இருக்கு. இந்த மாதிரி வேணாங்கற விஷயமெல்லாம் உனக்குத்தான். ஊருக்குப் போகும்போது எடுத்துண்டு போ."

அவன் நன்றியோடு அவரை நமஸ்காரம் செய்தான். வியர்க்க விறுவிறுக்க வீட்டிற்கு வந்தான். சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு உடம்பெல்லாம் ஈரத்துணியால் துடைத்துக்



கொண்டு மிக்ஸியில் கருப்பு திராட்சை போட்டு அடித்து ஜூஸ் குடித்தான்.

இதெப்படி ஒயினா பண்றது என்று உற்றுப் பார்த்துக் கொண்டே யோசித்தான்.

வேணாம்ப்பா. இந்த வழிக்கு போகவேண்டாம். நினைப்பை உதறினான்.

இன்ஜீனியர்களுக்காக பிற்பகல் சமையல் செய்ய ஆரம்பித்தான். குழம்பு சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம் என்று தனித்தனியாய் செய்தான்.

இன்ஜீனியர்கள் ஆரவாரத்தோடு உட்கார்ந்தார்கள். வெண்டைக்காய் வற்றலும், கொத்தவரங்காய் வற்றலும், வடாமும் பொரித்துக் கொடுத்ததை சாப்பிட்டு விட்டு பெரிதாக ஏப்பம் விட்டார்கள்.

"பெரியசாமி இந்தா. முப்பது நாள் டிபன் கொடுத்திருக்க. மூணு பேருக்கு. ஒரு டிபன் பாக்ஸுக்கு இருவது ரூபா லேபர் சார்ஜ். மூணு டிபன் பாக்ஸுக்கு அறுவது ரூபா. ஆயிரத்து எண்ணூறு ரூபா."

அவர்கள் கணக்கு போட்டு, குவைத் தினாராக காசு கொடுத்தார்கள்.

"அத்தியப்பனுக்கு நாள் முழுக்க ஏ.சி.ரூம்லதான் வேலை. லட்சுமிநாராயணன் தினமும் ஃபாக்டரிக்கு போயாகணும். தாமோதரன் ரெண்டு இடத்துக்கும் போயிட்டு வருவாரு. அந்த மலையாளி ஹார்பர்ல நின்னு என்ன சாமான்கள் இறங்குதுன்னு பார்த்து அதை எங்க அனுப்பணும்னு திசை திருப்பணும்.

நாங்க எல்லாருமே இன்ஜீனியர்ஸ்தான். நேத்து ஒரு மீட்டிங் போட்டு இந்த தேதிக்குள்ள இந்த வேலைகளை முடிச்சுத் தரோம்னு ப்ராமிஸ் பண்ணிருக்கோம். குவைத் அரசாங்கத்து சார்பா பேசற குவைத்தி ரொம்ப சந்தோஷமா இருக்கான். இதை பண்ணி முடிச்சுடுங்க. உங்களைப்பத்தி நான் தனியா அரசாங்கத்துகிட்ட சொல்றேன் அப்படின்னு சொல்லியிருக்கான். குவைத் அரசாங்கம்தான். ஆனா அரசருக்கு கீழே இயங்கற

அரசாங்கம். இது அரசர், இது இளவரசர். அவங்க சொந்தக்காரங்கதான் முக்கியமான போஸ்ட்ல இருந்து அரசாங்கத்தை நடத்தறாங்க.

குவைத் ஒரு சின்ன தேசம். வெறும் பாலைவனம். ஆனா, இந்த அரசர் பாலைவனத்தை மாத்திக் காட்டறேன்னு வெளியூர்லேர்ந்து விதம்விதமா மண் எடுத்துட்டு வந்து பாலைவனத்து மேல போட்டு புல் செடியும், தென்னைமரமும், மாமரமும், பூச்செடியுமா, வளர்க்கிறார். டவர்லேர்ந்து ஏறிப்பார்த்தா அரண்மனை தெரியும். பெரியகாடு மாதிரி இருக்கும். பாலைவனத்துக்கு நடுவுல ஒரு காடு. அறுவது வருஷம் முன்னாடி இவங்க யோசனை பண்ணி பார்த்திருப்பாங்களா. இன்னிக்கு பச்சைப் பசேல்னு இருக்கு குவைத். அங்க ரோடுக்கு நடுவுல செடி வளர்க்கறது கட்டாயம். எல்லா குவைத்தி வீட்டு வாசல்லயும் ஏதாவது ஒரு தாவரம் வளர்ந்திருக்கும்.

பாலைவனத்தில் இருக்கறவங்க தன்னுடைய தேசத்தை பசுமையா மாத்தறேன்னு வெறி பிடிச்சா மாதிரி மாத்திக்கிட்டிருக்காங்க. நாம பசுமையா இருக்கற தேசத்தை காயடிச்சுகிட்டிருக்கோம். பாலைவனமா மாத்திக்கிட்டிருக்கோம். வயிறு எரியுதய்யா. யாரு குவைத்துக்கு வந்துட்டு ஊருக்கு போனாலும் வயிறு எரியும். அறுவது வருஷம்தான்யா. அறுவது வருஷம்தான். என்னமா மாறிப்போச்சு.

"சரிங்க. அவனுக்கு ஆயில் இருக்கு. நமக்கு இல்லையே."

ஒரு மாதாந்திர பொறியாளர்கள் சங்கத்து கூட்டத்தில் அவர்கள் வட்டமாக உட்கார்ந்து உரக்க விவாதித்தார்கள்.

பெரியசாமி அருகேயுள்ள மேடையில் உட்கார்ந்து அவர்கள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

"அந்தப் பையன் யாருய்யா, இன்ஜீனியரா."

"இல்லை ஸார், லட்சுமிநாராயணன் வீட்டு சமையல்காரன்."

"ரொம்ப கூர்மையா பார்க்கறான்."

"கெட்டிக்காரப்பையன் ஸார். லட்சுமிநாராயணன், அத்தியப்பன், தாமோதரன் மூணு பேரும் ஒரே ஃப்ளாட்ல இருக்காங்க.



தாமோதரன் கூட்டிட்டு வந்த பையன் அவன். ரொம்ப நல்லா சமைக்கிறான் ஸார். டிபன் வேணுங்கறவங்களுக்கு டிபன் கொடுத்து அனுப்பறான். இப்போ எத்தனை டிபன் பாக்ஸுப்பா போகுது."

"பன்னெண்டு டிபன் பாக்ஸ்."

"கார்த்தால ஏழரை மணிக்கு என் கார் டிக்கிலேர்ந்து எடுத்துக்கலாம். அவங்கவங்க பேர் போட்டு வச்சுடுவாங்க."

"நமக்கொரு டிபன்பாக்ஸ் கொடுக்க சொல்லுய்யா."

அந்த இன்ஜீனியர் புதிதாக வந்தவர். உயர்ந்த பதவிக்கு வந்திருக்கிறார். அந்த ஆயில் கம்பெனிக்கு நிறைய கப்பல்கள் இருக்கின்றன. ஆயில் கொண்டு போகவும், சாமான்கள் கொண்டு வரவும் அவைகளை உபயோகப்படுத்துகின்றனர். அம்மாதிரியான கப்பல்களை கப்பல்களை நிர்வகிக்க ராமகிருஷ்ணன் அங்கு மெரைன் இன்ஜீனியராக வந்து சேர்ந்தார். அதுமட்டுமில்லாது ராமகிருஷ்ணனின் மனைவி டாக்டராக இருப்பதால் அவளுக்கும் குவைத்தில் வேலை கிடைத்தது.

கடற்கரையை நோக்கி ஏழாவது மாடியில் மிகப்பெரிய மூன்று அறைகள் கொண்ட இருப்பிடம் கிடைத்தது. கணவனும், மனைவியும் அவர்கள் ஒரேயொரு மகனோடு குடியேறினார்கள். வீட்டில் வைத்துப் பூஜை செய்ய ஒரு பெரிய கப்பலில் மிக உயரமான, நிறைய படங்கள் கொண்டு வந்தார்கள். மரமேஜைகள் வாங்கி கிழக்குப் பார்த்து வைத்து, பெரிய பூஜை அறையை ஏற்படுத்தி தங்கள் தினசரி கடமைகளில் பூஜையும் ஒன்றாகக் கருதி திறம்படச் செய்தார்கள்.

"குவைத்காரன் ஏதாவது சொல்லப் போறான்யா. நீங்க பாட்டுக்கு இவ்ளோ படம் கொண்டு வந்திருக்கீங்களே."

யாரோ கேட்டார்கள்.

"என் வீட்டுக்குள்ள வச்சருக்கு. வெளிய இல்ல. துபாய்ல கோயில் கட்டறதுக்கே பர்மிஷன் கொடுத்து, பிரமாதமா கோவில் கட்டியிருக்காங்க. கிருஷ்ணர் கோவிலும், சிவன் கோயிலும். போய் நின்னா உடம்பெல்லாம் சிலிர்க்குது. வெள்ளிக்கிழமையில ஆயிரம் பேர் ரொம்ப சுலபமா சேர்ந்துடறாங்க.

தேங்காய் சாதம், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், கேசரின்னு ஜாதி வித்தியாசம் இல்லாத மொழி வித்தியாசம் இல்லாத அத்தனை பேரும் ஒண்ணா சேர்ந்துடறாங்க. ஒரு பெரிய மசூதி, மசூதிக்கு பின்னால சந்து, ஏகப்பட்ட பூக்கடை. டக்குனு பார்த்தா எங்கயோ சௌகார்பேட்டையில் புகுந்துட்டா போல இருக்கும். இங்க இப்படியொரு இடம் ஏற்படுத்த முடியுமா. முடியாது. விடமாட்டாங்க. அதேசமயம் இந்த மாதிரி வீட்டுக்குள்ள வச்சுக்கலாம்."

"ஸார். உங்க வீட்ல மாசாமாசம் ஒரு சத்சங்கம் ஏற்படுத்தினா என்ன." ராமகிருஷ்ணனிடம் கேட்கப்பட்டது.

"நானும் அப்படித்தான் யோசனை பண்ணிண்டிருக்கேன்."

"குவைத் மாதிரி இந்தியா வரணும்னா என்ன ஸார் செய்யணும்."

யாரோ கேள்வி கேட்க ஆளாளுக்கு உரத்த குரலில் பேசினார்கள்.

"குவைத் ஒரு முஸ்லீம் நாடு. இந்த மத்திய கிழக்குப்பகுதி முழுவதுமே முஸ்லீம்கள் நாடு. இந்த நாடுகள் எல்லாமே இந்தியாவை விட பலமா இருக்கு. எனக்கு தெரிஞ்ச காரணம். இந்த நாடுகளினுடைய வெற்றிக்கு அடிப்படை இந்த நாட்டில் வாழும் முஸ்லீம்களின் அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கை. முஸ்லீம்களில் நாத்திகன்னு யாராவது உண்டாய்யா. நம்ம புராணங்களில் சொல்ற அதே மாதிரி நூத்துக்கணக்கான கதைகள் நம்பமுடியாத விஷயங்கள் முஸ்லீம் மதத்துலயும் இருக்கு. உருவ வழிபாடு இல்லைன்னு சொல்றாங்க. ஆனா, மெக்காங்கற இடம் அவங்களுக்கு முக்கியம். அந்தக்கட்டிடம் ரொம்ப முக்கியம். நாம எப்படி அருவ உருவமா சிவலிங்கத்தை வழிபடறமோ அதேபோல உருவமில்லாத, உருவமா அவங்க மெக்காவினுடைய கட்டடத்தை அந்தக் காபாவை வணங்கறாங்க. கடவுள் நம்பிக்கை இருந்தால் நிச்சயமா ஜெயிக்கலாம்."

"நான் இதை ஒத்துக்கலைங்க. இந்தியாவுல நாத்திகம் பேசறவன் மூணு சதவீதம்கூட இருக்கமாட்டான். அதுல உண்மை



யான நாத்திகன் பாயிண்ட் ஜீரோ, ஜீரோ ஃபைவ்தான் இருப்பான். மீதி அத்தனை பேரும் ஊசலாட்டத்தோடதான் இருப்பாங்க. நம்பிக்கைக்கும் வெற்றிக்கும் சம்மந்தமில்லை. மரணம் குறித்த பயம்தான் கடவுள் நம்பிக்கை."

இன்னொரு இன்ஜீனியர் பேச அந்த வாக்கியத்தை எல்லோரும் உள்வாங்கிக் கொண்டு கைதட்டினார்கள்.

"இன்னொரு தடவை சொல்லுய்யா. என்னாது அது."

"மரணம் பற்றிய கவலை. கடவுள் நம்பிக்கை. இது உலக விதி. மரணம் பற்றிய கேள்விக்கு விஞ்ஞானம் பதில் கண்டு பிடிச்சுடுச்சுன்னா, கடவுளை உலகம் தூக்கி போட்டுடும். அது என்னன்னு புரியலை. அப்போ இன்னது அப்படின்னு கற்பனை பண்ணி வச்சுருக்கோம். அந்த மரணம்கறதுக்கு பயப்படறதுனால கடவுள் தடுப்பார் அப்படின்னு நம்பிக்கை வச்சுருக்கோம். மரணத்தினுடைய சாயல் வியாதி தோல்வி, பிரிவு எல்லாம்."

"யோவ். யாருப்பா நீ. நல்லா பேசறியே."

"என் பேர் ஸ்டான்லீ. அசிரையா ஸ்டான்லீ."

"கிறிஸ்டியனா. ஆனா பொதுவா பேசறியே ஆச்சரியமா இருக்கே."

"நல்ல கிறிஸ்தவன் பொதுவாதான் பேசுவான்."

"உங்க தமிழ்கூட நல்லாயிருக்கு தோழரே."

"இங்க என்ன பண்றீங்க. கொஞ்சம் அறிமுகப்படுத்திக்கோங்கோ."

"இந்தியாலேர்ந்து ஒரு கம்பெனி. இங்க இருக்கற கம்பெனியை, ஆயில் கம்பெனியை மெயின்டென்ஸ் பண்றேன், பராமரிக்கிறேன் அப்படின்னு சொல்லி பெரிய காண்ட்ராக்ட் எடுத்திருக்கு. அப்படி பராமரிக்கறதுக்கு ஆளுங்களை கொண்டாரணுமில்ல. அந்த மாதிரி ஆளுங்களை கொண்டு வரதும் அந்த ஆளுக்கிட்ட வேலை வாங்கறதும் என்னுடைய வேலை."

"அட... அப்போ நீங்க நினைச்சா குவைத்ல வேலை வாங்கித் தந்துட முடியும்."

"இல்லீங்க. அதுக்கு ஏகப்பட்ட ரூல்ஸ் இருக்கு. தகுதி
இருக்கறவனுக்கு வாய்ப்பு கொடுக்காட்டி கூட பரவாயில்லை.
தகுதி இல்லாதவனுக்கு வாய்ப்பு கொடுத்துடாதே. தகராறு
பண்றவனை உள்ள கொண்டாந்துடாதே. இதுதான் கம்பெனி
எனக்குக் கொடுத்திருக்கிற முக்கியமான பொறுப்பு."

"இதை எப்படி கண்டுபிடிப்பீங்க."

"ஒரு நாள்ல கண்டுபிடிச்சுடலாம். ஒரு அவர்ல கண்டு
பிடிச்சுடலாம். மனுஷாளை படிக்கறது ஒரு சுவாரசியமான
விஷயம். நான் சின்ன வயசுலேர்ந்து பண்ணிகிட்டிருக்கேன்.
அதோ அங்க உட்கார்ந்து கிட்டிருக்காரே அமைதியா ஒரு
இளைஞர் அவருடைய இடம் இது இல்லை. ஆனாலும், நாம
என்ன பேசறோம்னு அந்தப்புள்ள உட்கார்ந்து கேட்கறான்
பாருங்க. அவன் ஜெயிச்சுடுவான்."

"அவனுக்கு பொழுதுபோகலை. உட்கார்ந்துண்டிருக்கான்."

தாமோதரன் சிரித்தபடி பதில் சொன்னார்.

"இல்லைங்க, அவன் பேசறதை கேட்கறான். அதான்
முக்கியம். இன்னொருத்தன் என்ன பேசுகிறான் என்று ஒரு
இளைஞன் கேட்க ஆரம்பித்தாலே, அமைதியாக உட்கார்ந்து
தன் அபிப்பிராயங்களை முன் தள்ளாது மற்றவர் பேசுவதை
ஆழ்ந்து, அமைதியாய் கவனித்தாலே, கவனித்து உள்வாங்கிக்
கொண்டாலே வெற்றியினுடைய ஆரம்பத்தில் இருக்கிறார்
என்று அர்த்தம்.

கிழவனுங்க என்னமோ பேசறாங்க அப்படின்னு அலட்சியப்
படுத்தாத. இவனுங்க இப்படித்தான் பேசுவாங்க எல்லாம் துட்டு
உள்ள ஆளுங்க அப்படின்னு இளக்காரம் பண்ணாத இவங்க
யார். இவங்க என்ன பேசறாங்க அப்படின்னு கவனிக்க ஆரம்
பித்தால் வெற்றி நிச்சயம்."

"இப்போதைக்கு அவன் சமையக்காரப் பையன் தான்."

"இருந்துட்டுப் போகுதுங்க. நீங்களெல்லாம் பத்தாவது
படிச்சுட்டுதானே இன்ஜினியரா வந்தீங்க. எடுத்தவுடனே உங்
களை யாரும் இன்ஜீயரிங் காலேஜ்ல சேர்த்துடலை" அசிரையா



ஸ்டான்லீ வேகமாகச் சொல்ல, குறுக்கே பேசியவர் நாணமாக,
கூட்டம் கைதட்டியது.

"எங்கிட்ட வர்றப்பசங்களை நான் ரூம்ல உட்கார வச்சுட்டு
கண்ணாடி வழியா பார்த்துகிட்டிருப்பேன். எவன் லொடலொ
டன்னு பேசறான். எவன் ரொம்ப அலையறான். எவன் சீட்ல
உட்கார முடியாம தவிக்கிறான் அப்படின்னா அவனை நான்
கழிச்சு கட்டிடுவேன்."

"இவன் துடிப்பான பையன்டா."

"இல்ல. வம்பான பையன். துடிப்பு. உட்காருன்னு சொன்ன
இடத்துல உட்காராத முன்ன பின்ன அலையல் இருக்கக்
கூடாது. அவன் ஒழுங்கீனம். போறபோது சொல்லிட்டுப் போயி
டுவேன். யாரும் இந்தப்பக்கம், அந்தப்பக்கம் போயிடாதீங்க.
ஜாஸ்தி பேசாதீங்க. அமைதியா உட்கார்ந்துக்கோங்க. உங்க
ளுடைய எதிர்காலம் பத்தி யோசனை பண்ணுங்க. இங்க இன்டர்
வியூல என்ன கேள்வி கேட்பாங்க அப்படின்னு யோசனை
பண்ணுங்க. சப்ஜெக்ட்டைப்பத்தி மூணு கேள்வி. பொது அறிவு
பத்தி மூணு கேள்வி. இதான் கேட்கப் போறாங்க. மனசுக்குள்ள
இதை தயார் பண்ணிக்கோங்களேன். 'பொது அறிவுன்னா எது
ஸார்' ஒரு பையன் கேட்டான். கேட்டவனை உத்துப் பார்த்தேன்.
அவனுக்கு கவலை இருந்தது. ஏதாவது கேட்டு, ஏதாவது பதில்
சொல்ல முடியாதபடி போயிடப்போகறதேன்ற வேதனை
இருந்தது. அவனுக்கு உதவ வேண்டியது என்னுடைய
வேலை.

நான் அவனுக்கொரு கதை சொல்ல ஆரம்பிச்சேன்.
குவைத்துக்கு ஏ, பி, சி அப்படின்னு மூணு பசங்க வேலைக்கு
வந்தாங்க. அதுல வேலைக்கு சேர்ந்த ஆறாவது மாசம் 'பி'யி
னுடைய அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அவங்க மரணப்
படுக்கையில இருக்காங்கன்னு நியூஸ் வருது. அப்பொழுது ஏ,
சி என்ன செய்வார்கள். நீ 'ஏ'வாக இருந்தால் அல்லது 'சி'யாக
இருந்தால் என்ன செய்வாய். 'பி'யை என்ன சொல்லி தேற்று
வாய். இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியுமா. இந்தக்
கேள்வி நிச்சயம் கேட்பாங்க. அப்படின்னு சொல்லிவிட்டுப்
போயிடுவேன். இது எவ்வளவு பெரிய கேள்வி. இந்தக் கேள்

விக்குப்பிறகும் ஒருத்தன் அலைஞ்சுகிட்டிருந்தான்னா, அடுத்தாளோட சளசளன்னு பேசிகிட்டிருந்தான்னா அவன் அன்ஃபிட். இந்தக் கேள்விக்கு பதில் சொல்லணும்னா உள்ள போகணும். யார் உள்நோக்கிப் போறானோ அவனுக்குத்தான் மத்தவங்க பேசறது புரியும். சும்மா மேம்போக்கா இதைப்பார்த்து, அதைப்பார்த்து அது கத்தி, இது கத்தி, தான் என்ன பண்றோம்னு தனக்கே தெரியாத இருக்கறவன் நமக்கு ரொம்ப தொந்தரவு."

"சரி அப்படி தொந்தரவு பண்றவன் வந்துட்டான் என்ன பண்ணுவீங்க. அதுக்கெல்லாம் ஆயிரம் ரூல்ஸ் இருக்கு. அவன் கிட்ட இருவத்தேழு வகையா கையெழுத்து வாங்கிப்போம். தப்புன்னு தெரிஞ்ச அடுத்த இருவத்து நாலு மணி நேரத்துக்குள்ள ஏரோப்ளேன்ல ஏத்தி அனுப்பிடுவோம். எதிர்த்து பேசவே முடியாது. இங்க நாம சொல்றதுதான் சட்டம்."

"கம்பெனியில தகராறு பண்ணா அனுப்பிடுவீங்க. வெளிய வாசல்ல தகராறு பண்ணா."

"குவைத் போலீஸ் பத்தி உங்களுக்கு தெரியாது தோழரே. அவன் அடிக்க ஆரம்பிச்சான்னா கண்ணு மண்ணு தெரியாத அடிப்பான். ஊரைவிட்டு ஊர்வந்து சம்பாதிக்காத, இங்க இருக்கற மனிதர்களுடைய நிம்மதியை கெடுக்கறான் ஒருத்தன் அப்படின்னா பொளந்து கட்டிடுவான். கெண்டு கெண்டா வீங்கும் படியா அடிப்பான். அவ்ளோ முரட்டுத்தனமா மனுஷங்களை மனுஷங்க அடிச்சு நான் பார்த்ததே இல்லை. மூங்கில் பிரம்பெல்லாம் இல்ல. ரப்பர் தடி. மூஞ்சியிலேயே அடிக்கறான். உதடு, கண், காது எல்லாம் வீங்கிடுது. அவனுக்கும் இருவத்தி நாலுமணிநேரம் டைம் ஊரை விட்டு அனுப்பியாகணும். நூறு பேருக்கு முன்னாடி நிக்கவச்சு அடிப்பான்."

"அப்படி நடந்திருக்கா."

"போன மாசம்கூட நடந்தது. தண்ணி போட்டு தெரியாத்தனமா ஒரு கடையினுடைய கண்ணாடிக் கதவை உடைச்சுட்டான். பதிலுக்கு ஸாரி... ஸாரின்னு சொன்னான். அதை கேட்கவேயில்லை. பின்னிட்டாங்க அடி."

"தண்ணிதான் அடிக்கக்கூடாதே. எப்படி கிடைச்சது."



"ஃபாரின் சரக்கு. நிறைய காசு கொடுத்து வாங்கியிருக்கான்."

"கிடைக்காத பொருள் எதுய்யா."

"இங்க வேலை செய்யற அமெரிக்காகாரனுக்கும், பிரிட்டிஷ் காரனுக்கும் பர்மிட் முறையில நல்ல சரக்கு கொடுக்கறாங்க. அதை வாங்கி இவர் குடிச்சுட்டு ரப்சர் பண்ணிட்டாரு. அவருக்கு சூப்பர்வைசிங் உத்தியோகம். நாப்பத்தாஞ்சாயிரம் ரூபா சம்பளம். அடிவாங்கி ஊர்போய் சேர்ந்தாரு."

"இதை எதிர்த்து நாம புரொடஸ்ட் பண்ண வேண்டாமா."

ஒல்லியாய், குள்ளமாய் கிருஷ்ணன் என்பவர் எழுந்து நின்று உரத்த குரலில் பேசினார்.

"இதை கதைமாதிரி சொல்றீங்களே. நாம எதிர்க்க வேண்டாமா."

"செத்துடுவ கிருஷ்ணா. அடிபட்டு செத்துடுவ. வேணாம். இது உங்க ஊர் இல்ல. மறியல் பண்றதுக்கும், முஷ்டியை உயர்த்திக் காமிக்கறதுக்கும். கையே தெரியாத வெட்டிடுவான். அந்த சூப்பர்வைசரை ஊருக்கு அனுப்புன்னு சொல்லிவிட்டு அவன் எங்கிட்ட சொன்னான். இன்னும் மூணுகேஸ் இந்த மாதிரி பார்த்தேன்னா உன்னை கூப்பிட்டு அடிப்பேன். என்னை ஊருக்கு அனுப்பிடுவேன்னான்."

"நிஜமாவே அப்படி செய்வானாய்யா."

ஒரு இன்ஜீனியர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

"இவங்களை, குவைத்தீஸ ஒண்ணும் நம்ப முடியாது. அவன் வச்சதுதான் சட்டம். அவனுக்கு பிடிக்கலை. அனுப்பிடுவான்."

"இது அராஜகமில்லையா. மனித உரிமைக் கமிஷனுக்கு நாம போக முடியாதா. யாரைப் பார்த்து யார் அப்படி பேசறது."

மறுபடியும் மெல்லியதாய் குள்ளமாய் இருந்த கிருஷ்ணன், உரத்த குரலில் முஷ்டியை மடக்கிக் கொண்டு பேசினார்.

"நான் நினைக்கறேன். முதல்ல இந்தாள்தான் அடிபடப் போறான்னு."

"நான் உலக கோர்ட்ல வழக்கு போடுவேன்."

"உயிரோட இருந்தாதானடா போடுவ."

அசிரையா ஸ்டான்லீ கத்தினார்.

"ஆப்பிரிக்கால காந்தி அடிபடலை. தாய் திருநாட்டிற்காக உயிரையே பணயம் வைக்க முன்வரலை. அந்த மாதிரி நானும் முன்வருவேன்."

"இங்கதாங்க தப்பு. இங்கதான் நம்மாளுங்க தப்பு பண்றாங்க. எதுக்கு உணர்ச்சிவசப்படறது. எவ்வளவு உணர்ச்சி வசப்படற துன்றதலே கணக்கே இல்லாத கத்தறதே வாழ்க்கையா போயி டுச்சு."

ஸ்டான்லீ நொந்து கொண்டு பேசினார்.

உடல் பருமனானவரால் ஒரு நாற்காலியில் சரிவர உட்கார முடியவில்லை. எழுந்து சோஃபாவுக்கு இடம் மாற்றிக் கொண் டார்.

"இல்லீங்க. அவர் கேட்ட கேள்வியையே நான் வேற விதமா கேட்கறேன். நம்முடைய நலன்களை பாதுகாக்க இங்க யாருமே இல்லையா."

"இருக்குங்க. இந்தியத் தூதரகம் இருக்கு. உங்களை ஜாக்கிர தையா ஊருக்கு அனுப்பி வைப்பாங்க. அதுதான் வேலை."

"அநியாயமா என்னை வேலையை விட்டு நீக்கினா அவனை கேள்வி கேட்க முடியாதா."

"இதோ பாருங்க. இது அவன் தேசம். அவன் வீடு. அவன் வீட்டுக்கு நீங்க வந்திருக்கீங்க. உங்களை பிடிக்கலைன்னு அவன் சொல்றான். வெளியே போக வேண்டியதுதானே முறை. இங்க நியாயம், அநியாயம் எங்க வந்தது."

"என்னை வெளிய அனுப்பு. ஆனா, உன்னையே நம்பி வந்த என்னை ஏமாத்தறியே. அதுக்கு காம்பன்ஸேஷன் கொடுக்க வேணாமா. நஷ்ட ஈடு தரவேணாமா."

"அவன் தரமாட்டான். என்ன பண்றதா உத்தேசம்."

"நாமெல்லாம் ஒண்ணா சேர்ந்து ஊர்வலம்போய் ஒரு மனு கொடுத்து..."



ஸ்டான்லீ தொடர்ந்து பேச எல்லோரும் தலையசைத்தார்கள். உச்சு... உச்சு... என்று கொட்டினார்கள்.

"இந்த கண்றாவியையெல்லாம் நாம நம்ம ஊரோட நிறுத் திப்போம். வந்த இடத்துல, பொழைக்க வேண்டிய இடத்துல இப்படி பண்ண வேண்டாம்."

"ஏன் பண்ணா என்ன."

"யோவ்... அஞ்சாயிரம் ரூபா, ஆறாயிரம் ரூபாய்க்கு நாய் மாதிரி உழைச்சுருக்கீங்க. இங்க வந்து என்ன சம்பளம் வாங்க றீங்க. அதுக்குண்டான மரியாதை இல்லையா."

"என்ன சம்பளம் வாங்கிடறோம். ஆறாயிரம் ரூபா வாடகை அங்க அறுநூறு ரூபா வாடகை. இங்க ஒரு கிலோ கத்தரிக்காய் அம்பது ரூபா. அங்க அஞ்சு ரூபா. இங்க சிக்கனமா இருந்தாதான் ஊருக்கு அனுப்ப முடியும். ஊர்ல இருக்கறவன் என்னமோ நெனச்சுக்கறான். அப்படியே நாம கத்தை கத்தையாக காசு வாங்கறதா. இங்க இருக்கற செலவு யாருக்கு தெரியறது."

கிருஷ்ணன் சொல்வதிலும் நியாயம் இருப்பதுபோல் தோன்றியது.

"என்ன வேணும்னு கேட்கறீங்க கிருஷ்ணன்."

"எனக்கு உத்தரவாதம் வேணும்."

"என்ன உத்தரவாதம்."

"வேலைக்கு உத்தரவாதம். நீ வேண்டாம்னு வெளிய அனுப்பினா, எனக்கு மூனு மடங்கு அதிகமா காசு கொடுத்து தான் அனுப்பணும்."

"அப்படின்னா கிருஷ்ணன். ஒரு மனு எழுதிக்கொடு. நீ இப்படி கேட்கறீர்னு கொண்டு போய் குவைத் அரசாங்கத்து கிட்ட கொடுக்கலாம். குவைத் அரசாங்கம் உன்னை என்ன பண்றதுன்னு தெரிஞ்சு, அது பிரகாரம் நடவடிக்கை எடுக்கும். நீ மகாத்மாகாந்திதானே, நீ தியாகிதானே. நீ ஆரம்பி."

"கடைசியில என்னை எல்லோரும் குழியில தள்ளி விட றேளா."

கிருஷ்ணன் கத்த, கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

"ஒருத்தன் வேலைக்கு கூப்பிடுவானாம். வேண்டாம்னு அனுப்பிடுவானாம். இதென்னய்யா சர்வாதிகாரமா இருக்கு."

"கரெக்ட். இந்த சர்வாதிகாரம்தான் இந்த தேசத்தினுடைய சுபிட்சத்திற்குக் காரணம். சிகப்பு விளக்கு எரிகிறபோது கோட்டை கொஞ்சம் தாண்டினால் ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஃபைன். மூணு தடவைக்கு மேல போனா லைசென்ஸ் பிடுங்கிடுவான் அல்லது ஜெயில்ல உட்கார வைப்பான்."

"ஐயா... பாபர்மசூதியை இடிக்கறதுக்கு முன்னாடி இங்க நமக்கு நல்ல மரியாதை இருந்தது. நல்ல கௌரவம் இருந்தது. இடிச்ச மறுநாள்லேர்ந்து நம்மள எலி மாதிரி பார்க்க ஆரம்பிச்சுட்டான்."

ஒருவர் உரக்கச் சொல்ல அதையும் ஆமோதித்தார்கள்.

"நாம ரொம்ப கெட்டிக்காரங்க. நமக்கு வேலை தெரியும். ரொம்ப சின்சியரா வேலை செய்யறாங்க. பங்களாதேஷிங்களைவிட, பர்மியரைவிட, பாகிஸ்தானியைவிட, இந்தோனிஷியனைவிட, பிலிப்பைன்ஸியைவிட நாம் நல்ல படிப்பு படிச்சுட்டு கெட்டிக்காரத்தனமா எந்த வேலையையும் சமாளிக்கிற உறுதியோட பிரச்சினைகளை தீர்க்கற மனோபாவத்தோட இருக்கோம்னு அவனுக்கு ரொம்ப சந்தோஷம். குறிப்பா சவுத் இண்டியன்னு அவனுக்கு தெரிஞ்சதுன்னா ரொம்ப மரியாதையா நடத்தறான். அப்படித்தான் நடத்திகிட்டிருந்தான். ராமநாதன், சொல்லுங்க ஸார்."

அஸிரையா ஸ்டான்லீ சொல்ல, ராமநாதன் பக்கம் எல்லோரும் திரும்பினார்கள்.

"அதுவும் காரணம். அதுக்கும் முன்னாடி குவைத்ல ஈராக் போர் நடத்தினது. ஈராக் போர் நடத்தறதுக்கு முன்னாடி குவைத் ரொம்ப செல்வச் செழிப்பா இருந்தது. குவைத்தீ ரொம்ப மிருதுவா ரொம்ப கம்பீரமா இருந்தான். அவனுக்கு பணிவா இருக்கோம். அவன் சொல் பேச்சு கேட்கற ஒரு உத்தியோகஸ்தனா இருக்கோம்னா போறும். வாரிவாரி வழங்குவான். நீங்களெல்லாம் அறுபதாயிரம் ரூபாய்க்கு வந்திருக்கீங்களே. எனக்கு அப்போவே எடுத்தவுடனேயே ஒரு லட்ச ரூபா சம்பளம். குவாட்டர்ஸ் இல்லாத வரமாட்டேன்னு சொன்னேன். நாப்பது நாள்ல ஒரு குவார்ட்டர்ஸை ஏற்பாடு செய்து எனக்கு இடம் கொடுத்தான். எனக்கு, என் மனைவிக்கு, என் அப்பா, அம்மாவுக்கு, என் குழந்தைகளுக்கு இலவச விமானப் பயணம் முதல் வகுப்பு. வருஷத்துக்கு ரெண்டு தடவை விமானப்பயணம் பண்ணலாம் இலவசமா. அவசியம் ஏற்பட்டால் ஒரு தனி பர்மிஷனோட மூன்றாம் தடவையும் நான் பயணப்படலாம் இலவசமா.



அப்போ நிறைய பாலக்காடுலேர்ந்து வந்த ஐயருங்க தான் குவைத்ல ஜாஸ்தி. கார்த்தால கஞ்சி குடிச்சுட்டு, மத்தியானம் தயிர்சாதம் கையில எடுத்துண்டு அடாடா.. ஒரு பகல் பூரா வேலை செய்திருக்கோம். இப்போ மாதிரி ஒரு மணிக்கு திரும்பி வரது, ரெண்டு மணிக்கு திரும்பி வரதெல்லாம் இல்லை. காலையில ஏழு மணிக்கு போனா, ராத்திரி ஏழு மணி ஆகும். வந்து படுக்கையில படுத்தா தூக்கம் வந்துடும். திரும்பி அஞ்சு மணிக்கு எழுந்து ஓடணும். இவ்ளோ உயரமான கட்டங்களெல்லாம் இல்லை. மூணு மாடி கட்டடம்தான். ரோடு ஒரு அளவுக்குத்தான் போட்டிருப்பான்."

"அதுக்கப்புறம்."

"ஃபோர் வீல் டிரைவ்ல ஏறி பாலைவனத்துக்கு போகணும். எண்ணெய் கிணறுகிட்டக்க அப்படித்தான் போகணும் அப்போ இருக்கற எண்ணெய் கிணறெல்லாம் அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரான்ஸ் இந்த மாதிரி ஆளுங்கதான் பராமரிச்சண்டு இருந்தாங்க. குவைத்தீஸாவது பரவாயில்லை. அவங்களெல்லாம் ரொம்ப அலட்டுவாங்க. அவங்ககிட்ட வேலை செய்யறது ரொம்ப கஷ்டம். அவங்க எல்லா கணக்கும் டாலர்ல திங்க் பண்றதுனால சம்பளமும் ஜாஸ்தி இருக்கும். மத்தியான சாப்பாட்டுக்கு பத்து டாலர் கொடுத்துடுவேன்னு சொல்லுவான். அப்போ முப்பத்தஞ்சு ரூபா. மத்தியான சாப்பாட்டுக்கு முன்னூத்தி அம்பது ரூபா. வீட்டுக்கு கம்பெனி வாடகை கொடுத்துடும். நாலு பெட்ரூம். ஒரு பெரிய ஹால். சிட் அவுட். கார் பார்க்கிங் அப்படின்னு சௌகரியம். ஊருக்கு போகறதுக்கே மனசு வராது. போனா வேலை போயிடுமேன்னு பயம். இவ்வளவு பெரிய சௌகரியம் நம்மூர்ல இருக்காதேங்கற ஒரு

அக்கறை. அதனால ரெண்டு வருஷத்துக்கு, மூணு வருஷத்துக்கு, ஏன் அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை ஊருக்கு போனவனெல்லாம் எனக்குத் தெரியும். ஊருக்குப் போனா சாப்பாடு அலவன்ஸ், கார் அலவன்ஸ் எல்லாம் கட்டாகுமே. மெடிக்கல் செக் பண்ணிக்கோன்னு சொல்லுவான். யாரு மெடிக்கல் செக்கப்பல்லாம் பண்றது. வெறுமனே வெங்காயத்தை நறுக்கி தயிர்ல தோய்ச்சு சாப்பிட்டு சூட்டை குறைச்சுக்கறது. நல்ல பால் சாப்பிட்டு சூட்டை குறைச்சுக்கறது. ஐஸ்க்ரீம் சாப்பிடறது.

நான் எண்பத்திரெண்டுல வந்தேன். ஏழு வருஷத்துல பாலக்காடு பக்கம் நிறைய நிலம் வாங்கிப் போட்டேன். நிறைய பேர் குவைத்துக்கு வந்து சம்பாதிக்க ஆரம்பிச்சபோது கொஞ்சம் கொஞ்சமா நிலத்தை வித்து, வித்த காசுல வீடு கட்டினேன். ரெண்டு மாடிக் கட்டிடம் பாலக்காட்ல. மூவாயிரத்து நானூறு சதுரடிக்கு சலவைக்கல் போட்டு கட்டியிருக்கேன். பெரிய தோட்டம். தென்னந்தோப்பு. கோவில் அப்படின்னு பார்த்து பார்த்து செய்திருக்கேன். இப்போ எங்கம்மா, எங்கப்பா, என் தம்பி, என் தங்கை, அவ புருஷன் எல்லாரும் அந்த வீட்லதான் இருக்கா. ஆனா, இந்த வருமானமெல்லாம் திடீர்னு நடந்த யுத்தத்துல காணாமப்போச்சு. ஈராக், உள்ள வரும்னு குவைத்தீஸும் நினைக்கலை. நாங்களும் நினைக்கலை. உள்ள வருதுன்னு தெரிஞ்சவுடனே குவைத்தீஸெல்லாம் ஏரோப்ளேன்ல பறந்துட்டான். கப்பல் ஏறிப் போயிட்டான். குடும்பம் குடும்பமா சொந்த போட்ல ஏறி ஓமனுக்குப் போயிட்டான். மஸ்கட்டுக்குப்போய் ஒளிஞ்சுனுட்டான். சிலபேர் இங்கிலாந்துக்குகூட போயிட்டாங்க. இங்க நாங்களெல்லாம் மாட்டிக்கிட்டோம்."

"ஈராக்காரன் உங்களை கொடுமை பண்ணானோ."

"பண்ணலை. பண்ணிடுவானோன்னு பயம் இருந்தது."

"இவரை பண்ணலை, வேற ஒரு இன்ஜினியரை பண்ணியிருக்காங்க. அதோ அங்க உட்கார்ந்திருக்காரே பாலசுப்ரமணியம் அவர் மாட்டினாரு."

"அப்படியா... என்ன ஸார் பண்ணான் உங்களை."



இன்ஜினியர்கள் ஆவலாகி கேட்டார்கள்.

"அன்னிக்கு பகல் டூட்டி முடிச்சுட்டு வெளிய வந்தேன். வார் நடக்கறது. ஈராக் உள்ள வந்துடுச்சு. எதுவும் தெரியாது. நான் பாட்டுக்கு ஃபாக்டரியில வேலை செய்துக்கிட்டிருந்தேன். வெளியே வரும்போது வாசல்ல மில்டிரி வெளியே நின்னுது. எந்த மில்டிரின்னுகூட தெரியலை. அராபில ஒரே சத்தம். எல்லாரையும் லைனா நில்லுன்னு சொன்னான். லைனா நின்னோம். ஏன் குவைத்துக்கு வந்தீங்கன்னு கேட்டான். சாப்பிடறதுக்கு வேற வழியில்லை இந்தியாவுல. அதனால குவைத்துக்கு வேலை செய்ய வந்தோம்ன்னோம். ஒரு பழைய டிரக்ல ஏறி உட்காரச் சொன்னான். எங்க கூட்டிண்டு போறான். எதுக்கு கூட்டிண்டு போறான் ஒண்ணுமே தெரியலை. நடுவுல யாரோ கேள்வி கேட்டான். பின்னி எடுத்துட்டான். கொண்டு போய் ஈராக்ல இறக்கினான். இருவத்தோரு நாள்.முதல் ரெண்டு நாள் சரியா சாப்பாடே கொடுக்கலை. ஒரு பெரிய தட்டுல பிரியாணி கொண்டு வந்து வச்சுடுவான். நாங்களெல்லாம் போட்டி போட்டுண்டு சாப்பிடுவோம். அதைப்பார்த்து சிரிப்பாங்க. அதுக்கப்புறம் என்னாச்சுன்னு தெரியலை. ஒரு மாதிரி மரியாதையா நடத்த ஆரம்பிச்சான். யாரெல்லாம் இன்ஜினியர்ஸுன்னு கேட்டான். என்னை மாதிரி அஞ்சுபேர் இன்ஜினியர்ஸ் இருந்தோம். மெக்கானிக்ஸ் இருந்தாங்க. எல்லாருக்கும் ஆளுக்கொரு தட்டு, டம்பளர் கொடுத்து வச்சுருந்தான்.

ஏன், எங்களை பிடிச்சு வச்சிருக்கீங்கன்னு கேட்டோம். தெரியலை. வைக்கச் சொல்லியிருக்காங்க அப்படின்னு சொன்னான். இருவத்தோராவது நாள் மறுபடியும் டிரக்ல ஏத்தி கொண்டு வந்து விட்டுவிட்டான். அப்போ வந்து குவைத்த பார்த்தா சுடுகாடா இருந்தது. ராமனாதன் உங்க வீட்டுக்கெல்லாம் வரலையா."

"வந்தான். யாராவது குவைத்தீஸ் ஒளிச்சு வச்சுருக்கியான்னு கேட்டான். வந்து பார்னு சொன்னோம். வந்து பார்த்தான். இல்லைன்னவுனே போயிட்டான். ஆனால், எதெல்லாம் குவைத்தீஸ் வீடோ, அந்த குவைத்தீஸ் வீட்டுக்குள்ள போய்

எல்லாப் பொருளையும் அடிச்சு ஒடிச்சு நாசம் பண்ணி நெருப்பு வச்சு எல்லாம் பண்ணான்."

"ஆயில் பீல்டுக்கெல்லாம் நெருப்பு வச்சுட்டானாமே. உண்மைதானா."

"அது ஒரு தனிக்கதை."

"என்ன."

"ஆயில் ஃபீல்டுக்கு ஈராக்காரன் நெருப்பு வைக்கலை. நெருப்பு வச்சது அமெரிக்கன்னு சொல்வாங்க."

"ஏன்... ஏன் அமெரிக்கன் நெருப்பு வச்சதா சொல்வாங்க."

"ஈராக்கை எதிர்த்து சண்டை போடறதுக்கு அமெரிக்கன் ட்ருப்ஸ் வந்தது. உள்ள நுழைஞ்ச ஈராக்கை துரத்தி அடிச்சது. தினமும் இங்க டம் டும்னு சத்தம் கேட்டுண்டிருந்தது. ஏதோ ஒரு இடத்துல ஆயில் ஃபீல்டு பத்திண்டு ஊர் முழுக்க புகையா இருக்கும். நாங்க வீட்டை விட்டு வெளியே வராம உட்கார்ந்துண்டே இருப்போம்."

"சாப்பாடு."

"வீட்ல இருந்தது. இங்க கிடைச்சுது. அங்க கிடைச்சுது. மிலிட்ரிகாரன் கொண்டு வந்து கொடுத்தான். அப்புறம் அமெரிக்காக்காரன் கொண்டு வந்து அள்ளி போட்டான். கோதுமை போட்டான். மாவு போட்டான். அதை வாங்கி சாப்டுண்டிருந்தோம். அமெரிக்காக்காரன் மொத்த ஈராக்கையும் வெளியே துரத்தியபிறகு குவைத்தீஸ் எல்லாரும் உள்ள வந்தாங்க."

"நம்ம ஆளுங்களெல்லாம் மொத்த பேரும் இங்கேயேவா இருந்தாங்க."

"இல்லை. வார் நடக்கற போது இண்டியன் ஏர்லைன்ஸ் நிறைய உதவி செய்தது. இந்தியத் தூதரகம் அற்புதமா வேலை செய்தது. எவ்வளவு இந்தியர்களை வெளியேற்ற முடியுமோ அத்தனை இந்தியர்களையும் ஏரோப்ளேன்ல ஏத்திண்டுபோய் வெளிய விட்டாங்க."

"நீங்க ஏன் போகலை."



"எனக்குப் போகத் தோணலைய்யா. நாம ஒருத்தர் வீட்டுக்குப் போறோம். அந்த வீட்ல ஒரு துக்கம் நடந்து போச்சு. துக்கம் நடந்த நேரத்துல என்னால இங்க இருக்க முடியாது. துக்கத்தை தாங்க முடியாதுன்னு வெளிய போகலாமா. அது தப்பில்லை. நான் போகமாட்டேன்னுட்டேன். என்னுடைய குவைத் முதலாளி எப்படியாவது தப்பிச்சுக்கோன்னான். நீங்க முதல்ல தப்பிச்சுண்டு போங்க. நீங்கதான் ஈராக்குக்கு டார்ஜெட்டே. என்னை ஒண்ணும் பண்ணமாட்டான். நான் இங்கேயே இருந்து பார்த்துக்கறேன்னு சொன்னேன்"

"எதை."

"அவன் ஆயில் ஃபீல்டை."

"உங்களால பார்த்துக்க முடிஞ்சதா."

"முடிஞ்சுதே. காலையில எழுந்து எப்பவும் போல கம்பெனிக்கு போயிட்டு அங்கங்கே பத்து பாகிஸ்தானி காவலாளி, இருவது பங்களாதேஷ் ஒர்க்கர், நாலஞ்சு இந்தியர்கள், இவங்களோட நான் கம்பெனியை ரன் பண்ணிண்டிருந்தேன். அதாவது எல்லாம் ஷட்டவுன் ஆகியிருக்கும். குவைத் முதலாளி போன் பண்ணுவான். எப்படி வார் நடக்குது என்னன்னு வயர்லெஸ்ல சொல்லிண்டிருப்பான். அங்க இருக்கற ரேஷன் பதுக்கிவச்சோம். தினம் ஆயிரத்து நானூறு பேருக்கு சோறு போடற அளவு ரேஷன் இருந்தது. நாங்க நாப்பது பேர்தானே. எங்களுக்கு மாசக்கணக்குல வரும்னு தெரிஞ்சுது. குவைத்தீஸ் வந்து விசாரிச்சபோது ரேஷனே இல்லை அப்படின்னு அவங்க கிட்ட கொஞ்சம் வாங்கிண்டோம். மத்தபடிக்கு எங்ககிட்ட நல்ல எண்ணெய், கோதுமை மாவு, அரிசி எல்லாம் இருந்தது. சப்பாத்தி சாப்டுண்டே எப்படா வார் முடியும்னு இருந்தது. எங்க ஆயில் ஃபீல்டுல நெருப்பு வைக்கலை. ஆனால், அடுத்து இருக்கற ரெண்டு மூணு ஆயில் ஃபீல்டுக்கு பாம் வச்சது அமெரிக்கன்ஸுன்னு சொல்றாங்க. எவ்வளவு தூரம் நிஜம்னு தெரியலை."

"அமெரிக்கன் எதுக்கு பாம் வைக்கணும் ஆயில் ஃபீல்டுக்கு."

"அப்போதானே ரிப்பேர் பண்றதுக்கு குவைத்தீஸ் காசு கொடுப்பான். ரிப்பேர் பண்றதுக்கு பெருசா காசு வாங்கலாம். குவைத்தீஸை தன் கண்ட்ரோல்ல வச்சுக்கலாம்."

"என்னய்யா இது அரசியலா இருக்கு."

"அரசியல்தான். இந்த ஊர் அரசியல்."

"அப்புறம் என்னாச்சு."

"இப்போ பார்க்கறீங்களே இந்த பெரிய வாட்டர் டவர். ஊர் முழுக்கத் தெரியுமே அந்த இடத்துலயெல்லாம் கன்னாபின்னான்னு சுட்டு நாசம் பண்ணாங்க. எல்லா ரெஸ்டாரண்டும் அடிச்சு உடைச்சாங்க. பைவ் ஸ்டார் ஹோட்டலெல்லாம் எரிச்சாங்க. குவைத்தீஸ் வீடு எதுஎதுன்னு கேட்டு உடைச்சாங்க. ஊரே சர்வநாசம். ஆனா, ஒரு மாசத்துக்குள் வார் முடிஞ்சுடுத்து. அமெரிக்கக்காரன் உள்ள வந்து குவைத்தை காப்பாத்தினான். நெருப்பையெல்லாம் அணைச்சான். நெருப்பை அணைச்ச பிறகு குவைத்தீஸ் மெல்ல மெல்ல வந்தாங்க. அப்போ யார் குவைத்ல இருந்தாங்களோ அவங்களுக்கெல்லாம் ரொம்ப பெரிய மரியாதை கிடைச்சுது. யார் போனாங்களோ அவங்களெல்லாரையும் கேவலமா பார்த்தாங்க, பேசினாங்க. அதுல நிறைய வெளிய போனது இந்தியர்கள்தான். அப்போ இந்தியர்களுடைய மதிப்பு கொஞ்சம் கம்மியாப்போச்சு.

என்னுடைய ஆபத்து காலத்துல என்னைவிட்டு ஓடிட்ட இல்ல. இப்போ திரும்பவும் வந்திருக்க இல்ல. அப்படின்ற மாதிரிதான் பார்க்கறான். எனக்கு இன்னிக்கு நிறைய சம்பளம்னா அதுக்குக்காரணம் அவங்க என் மேல் வச்சுருக்கற மரியாதை."

"ஸார்... தப்பா நினைக்கலைன்னா கேட்கறேன். உங்களுக்கு என்ன ஸார் சம்பளம்."

"ஒரு மாசம் பத்து லட்சம் ரூபா வாங்கறேன்."

சட்டென்று அந்த இடம் அமைதியாயிற்று.

"யோவ். என்ன காசு வாங்கினாலும் என்னய்யா. தங்கமாவா திங்க முடியும். வைரமாவா கடிக்க முடியும். நீங்க சாப்பிடற மோர்சாதம், குழம்பு சாதம்தான்யா நானும் சாப்பிட முடியும். ஒரு



அளவுக்கு மேல காசு சம்பாதிக்கறது தேவையில்லாத விஷயம். வீடு வாங்கியாச்சு. நிலம் வாங்கியாச்சு. வீட்ல மூணு கார் இருக்கு. இங்க ரெண்டு கார் இருக்கு. வேலைக்காரங்க இருக்காங்க. உலகத்துல இருக்கற எல்லா ஊருக்கும் போயிட்டு வந்தாச்சு. இப்போ அம்பத்தாறு வயசாகறது. மரணம் வருதே. காசால மரணத்தை தடுக்க முடியாது. காசு ஓரளவுதான்யா சம்பாதிக்கணும்."

"என்ன அளவு ஸார்."

"அதை நீதான் தீர்மானம் பண்ணணும்."

"எவ்ளோ வந்தாலும் போறாதுன்னுதான் ஸார் இருக்கு."

"இல்லை. காசைவிட முக்கியமான விஷயங்கள் நிறைய இருக்குய்யா. உண்மையான அன்பு நம்மமேல யாராவது வைக்கறாங்களான்னு பார்த்தா இல்லைன்னே தோணும். காசு சம்பாதிக்கறதுனாலயே யார் நம்மகூட பிரியமா பேசினாலும் அவங்க நம்ம காசுக்காகத்தான் பேசறாங்களோன்னு தோணும். பொண்டாட்டி மேலயே சந்தேகம் வரும். இந்தக் காசு சம்பாதிக்கலைன்னா இந்த நாய் என்கூட இருக்குமான்னு அவளையே நாம கேள்வி கேட்போம். பணத்தினுடைய கொடுமையான முகம் அது. பணக்காரனுடைய வேதனையான இடம் இது."

"இன்னும் குறிப்பா சொல்லுங்க ஸார்."

"எல்லாப் பணக்காரனும் அடுத்தவனைப்பத்தி சந்தேகத்தோட வாழ்கிறான். இதான் பெரிய சங்கடம்."

"ஏங்க... காசு சம்பாதிக்கணும்னு வந்துட்டேன். இப்போ வந்து சம்பாதிக்காத, பணக்காரனா இருக்கறது சங்கடம்னு சொன்னீங்கன்னா நல்லாவா இருக்கு. உருப்படற வழியை சொல்வீங்கன்னாக்க ஓய்ஞ்சு போற வழியை சொல்றீங்களே."

பாலக்காட்டு ராமனாதனை யாரோ கடிந்து கொண்டார்கள்.

"நான் சொல்றது புரியாது. அதனாலதான் வாயைத் திறந்து சொல்றதில்லை. நீங்களா இந்த இடத்துக்கு வந்தாலொழிய இந்த வேதனை உங்களுக்குப் புரியாது. எவ்வளவு சாப்பிட்டாலும் மோர் சோறுதான்யா. சாப்பிடறகிண்ணம் தங்கக் கின்

ணமா இருக்கலாம். கிண்ணத்தையா சாப்பிடப்போற. எந்தக் கிண்ணத்துல வச்சாலும் அதே மோர் சோறுதான். வயிறு ரொம்பி பௌவ்னு ஏப்பம் வரபோது வர ஆனந்தம் சொல்ல முடியாது. நல்லா பசிச்சு, நல்லா தூங்கினா அதுதான்யா சொர்க்கம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

துபாய்க்கு வந்து நோய்பட்டு போனவன் நிறைய பேருய்யா. ஏற்கனவே டியூபர்க்ளோஸிஸ் உடம்புல இருந்திருக்கும். கண்டு பிடிக்க முடியாது. இங்க வந்து இந்த தூசுக்காத்து பட்டவுடனே கிளறிக்கும். குவைத்துல டியூபர்க்ளோஸிஸ் வந்துடுச்சுன்னு சொல்லிட்டுப் போவான். சூடு தாங்காம தோல் வியாதி வரும். ரத்தக் கொதிப்பு அதிகமாயி ஹிருதயம் டேமேஜ் ஆகும். ஒண்ணுக்கும் சரியா போகாத கிட்னியில் தொந்தரவு வரும்."

"ராமனாதன் ஸார் தயவு செய்து நீங்க பேசறதை நிறுத்திக் கோங்களேன். பயமுறுத்தறீங்களே."

"உண்மைய சொன்னா அதை யாரால எடுத்துக்க முடியலையோ அவங்களால ஜெயிக்க முடியாது. இங்க இருக்கற பிரச்சினைகளை சொல்றேன். உங்களுக்கு இதெல்லாம் வரும்னா சொல்றேன். இதெல்லாம் இல்லாத நான் இல்லையா."

"இன்னும் கரெக்டா எப்படி இருக்கணும்னு சொல்லுங்க தோழரே."

"அசிரையா ஸ்டான்லீ சொல்ல, "கஷ்டப்பட்டு வேலை செய். உடம்பையும் பார்த்துக்கோ, ஒரு கெட்டப்பழக்கம்கூட இந்த ஊர்ல வேண்டாம். பொண்டாட்டிய கூட்டிண்டு வா. ஆனால், அதிகமான கூடல் வச்சுக்காத. இந்த ஊர் சூடு தாங்காது. வெய்யில்ல வெளியே போக வேண்டியவனா இருந்தா அதை ரொம்ப குறைச்சுக்க. அசந்து தூங்கு. குடிச்சுட்டு தூங்கினா அசந்து தூங்கற மாதிரி ஆவாது. அதனால இந்த ஊர்ல ஒரு போதும் குடிக்காத. சிகரெட் ரொம்ப தப்பு. வெளிய சூடு. உள்ளயும் சூடு ஏற்படுத்திண்டா நுரையீரல் ரொம்ப சீக்கிரம் வெந்துடும். தூசான ஊரு. அதனால ஆஸ்த்துமா டக்குனு நெஞ்சுல தாக்கும். முகத்துல கர்ச்சீப் கட்டிக்கோ. எப்பவும்



ஈரத்துணி வச்சுக்கோ. நிறைய தண்ணி குடி. பழஜூஸ் சாப்பிடு. பால்குடி.

காசு சேர்த்துடு. ஊருக்கு அனுப்பு. அங்க இருக்கற நம்பிக்கையான ஆள்கிட்ட கொடுத்து, வீடு வாசல்னு பண்ணிக்கோ. பத்து வருஷம் அதிகமா போனா பதினஞ்சு வருஷம். அதுக்கு மேல இந்த ஊர்ல இருக்காத. அதுக்குள்ள இந்தியாவுல கடையோ, வேற தொழிலோ பண்றதுக்கு ஏற்பாடு பண்ணிக்கோ. முப்பது வயசுல இன்ஜினியரா வந்தியா, நாப்பத்தஞ்சு வயசுல ஊருக்குப் போக தயாராயிடு. பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ற நேரத்துல ஊரோட செட்டில் ஆயிடு. அதான் அழகு.

காசு சம்பாதிக்கறதுக்கு கஷ்டமில்லையா. நீ கஷ்டப்பட்டு சம்பாதிக்கற காசை ஊர்ல இருக்கற ஒருத்தன் ரொம்ப மரியாதையா நடத்தி அதுக்குண்டான பலனை அவன் உயர்படுத்தி உனக்கு கொடுத்தாதான் மரியாதை. அப்படி ஒரு உறவு இல்லைன்னா, உன்னை ஏமாத்தற உறவுதான் அங்க அதிகம்னா நீ இங்க உழைக்கறது வெறுப்பா போயிடும். நீ கஷ்டப்பட்டு சம்பாதிக்கறத புரிஞ்சுக்கற மைத்துனனோ, அண்ணனோ, அப்பாவோ, தம்பியோ அங்க இருக்கணும். பிரிஞ்சு இருக்கறது ஒரு துக்கம், அங்க போனா இன்னொரு துக்கம், அங்க நம்மளை அங்க சரியா புரிஞ்சுக்க மாட்டேன்றாங்களேன்னு ஒரு துக்கம். பிரிதலுக்கும் புரிதலுக்கும் நடுவுல மாட்டிண்டுதான்யா நம்ம மாதிரியான ஆளுங்க அவஸ்தைப்படறோம்."

இரண்டு இன்ஜினியர்கள் எழுந்து நின்று ராமனாதன் பேச்சுக்கு கைதட்டினார்கள். மொத்த கூட்டமும் எழுந்து நின்று கைதட்டியது.

ராமனாதன் தலை குனிந்து உட்கார்ந்திருந்தார். அவரும் எழுந்து நின்று கைதட்டி எல்லோருக்கும் வணக்கம் சொன்னார்.

"ஸார், குவைத்துக்கு வரணும்னா ஒரு ஆள்கிட்ட என்ன வேணும்."

"முதல்ல சரியான குவாலிபிகேஷன் வேணும். வெளிநாட்டுக்கு போய் சம்பாதிக்கணும்கற எண்ணம் பத்தாவது படிக்கும்

போது வந்துடணும். நல்ல மார்க் பத்தாவதுலேயே வாங்கணும். ப்ளஸ்டுல வாங்கணும். பி.காம், சி.ஏ.வோ. இன்ஜினியரிங்கோ, டாக்டரோ மும்முரமாக படிச்சு உயர்ந்த நிலையில் பாஸ் ஆகணும். நீ அந்த நேரத்துல ஊர் சுத்திக்கிட்டு சினிமா பார்த்துட்டு பொண்ணுங்க பின்னாடி சுத்திக்கிட்டு அதுக்கப்புறம் ஐயோ இடம் கிடைக்கலைன்னா கூலியாத்தான் வரவேண்டியிருக்கும். குவைத்ல நல்ல வேலை வாங்கித் தரேன்னு எவனாவது ஏமாத்துவான். பொய் சொல்லுவான். உங்கம்மா தாலியை வித்து அவங்கிட்ட கொடுத்துட்டு அவன் ஏமாத்திட்டுப் போக, ஐயோ... ஐயோன்னு அலறுவ. இப்படி இருக்கற ஆளெல்லாம் ஊர்லயே வெத்தலைப்பாக்கு கடையோ அல்லது துரித உணவகமோ நடத்தறது பெட்டர். என்ன கர்ணம் போட்டாலும் வெத்தலை பாக்கு கடையில நிகரலாபம் மாசத்துக்கு மூவாயிரம் ரூபாய்க்கு மேல் வராது. துரித உணவகத்துல ஒரு மாசத்துக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மேல வராது.

காசு சம்பாதிக்கணும்னா மிடில் ஈஸ்ட். அதுலேயும் குவைத், துபாய், ஓமன் இந்த மாதிரி நாடுகள். சவுதி அரேபியால்லாம் ரொம்ப கடுமையான சட்டதிட்டங்கள் உள்ள நாடு. அங்க போய் நாம பிழைக்க முடியாது. இந்த மாதிரி இடங்கள்தான் சௌகரியம். இங்க கிடைக்கிற இந்த உச்சகட்ட மரியாதையை நாம பயன்படுத்திக்கணும்.

கிருஷ்ணன் பேசறது முட்டாள்தனம். வேலை செய்யற இடத்துல வந்து நின்னு மனு கொடுக்கறேன்னா அவன் வெறி ஆயிடுவான். கிருஷ்ணனால நமக்கெல்லாம் ஆபத்து வந்துடும். கிருஷ்ணனை அடக்கி வைக்கறதுதான் கெட்டிக்காரத்தனம்."

அவர் உரத்துச் சொல்ல, சகலரும் கிருஷ்ணனை முறைத்துப் பார்த்தார்கள்.

கிருஷ்ணன் ஏதோ பேச எழும்ப, அவர் தோளில் கைவைத்து அழுத்தினார்கள்.

"போறும் பேசினது. உட்கார்" என்று அதட்டினார்கள்.



"வெளிநாட்டுக்கு போனாதான்யா இனிமேல் சம்பாத்தியம். அதுக்குண்டான வேதனை இருக்கத்தான் செய்யும். பாலக்காட்ல இருக்கற என்னுடைய கிராமம். அந்த ஆறு. அந்த வயல், அந்த தென்னந்தோப்பு கண்ணு முன்னாடி நிற்கும், பிரிஞ்சுதான் வரணும். அதை வேற யாரோ அனுபவிப்பாங்க. பொறுத்துக்கத்தான் செய்யணும். யோவ்... நான் சம்பாதிக்கிற காசெல்லாம் எங்க அப்பா அனுபவிக்கறானேன்னு ஆத்திரப்பட்டீங்கன்னா அதுக்கு முடிவே கிடையாது.

நாம என்ன செய்யறோம். எங்க வந்திருக்கோம். நம்முடைய எதிர்காலம் என்ன. தெளிவா இருங்கய்யா. தெளிவா இருக்கணும்னா தனிமையா இருக்கணும். ஊர்ல சளசளன்னு பேசிண்டிருந்தேனா இங்க வந்த பிறகு அமைதியா மாறிட்டேன். நிறைய யோசிச்சேன். என் நிலைமை என்ன. என் புத்தி என்ன. என்னுடைய திறமை என்னான்னு எடை போட்டுக்கற இடமா குவைத் இருந்தது. என்னை விரட்டாத இருந்தா நான் நிம்மதியா நிறைய காரியம் பண்ணுவேன்னு தெரிஞ்சுது. இதைத்தான் என்னுடைய குவைத் முதலாளிகிட்ட சொன்னேன். நல்ல வேளையா அவன் புரிஞ்சுக்கிட்டான். அமைதியா இருந்ததுனால அவனுடைய அமைதி எனக்கும் வந்தது. அவன் கேட்ட எந்தத் தகவலும் எனக்கு விரல் நுனியில இருக்கும். என்னை மொபைல் கம்ப்யூட்டர்னு கூப்பிடுவான். அதுக்குக் காரணம் என்னுடைய அமைதி. என்னுடைய அமைதிக்குக் காரணம் என் தனிமை. என் தனிமையை நான் புரிஞ்சுகிட்டதுக்கு காரணம் எங்கப்பா. எனக்குச் சொல்லிக் கொடுத்த ஜபதபங்கள். கடவுள் நம்பிக்கை. ப்ரேயருங்கற விஷயமே தனிமையே அதிகப்படுத்தற விஷயம். இப்போ நீங்க வந்திருக்கறது தனிமையை அதிகப்படுத்தற விஷயம். அப்போ குவைத்துங்கற விஷயம் ஒரு ப்ரேயர் மாதிரி. ஒரு பிரார்த்தனை மாதிரி. நீங்க பிரார்த்தனை பண்ண வந்திருக்கீங்கய்யா. அப்போ. எவ்வளவு ஈடுபாட்டோட செய்வ. அந்த ஈடுபாட்டோட உன் வேலையை செய். உன் வாழ்க்கையை நடத்து."

மறுபடியும் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

யாரோ போய் ராமனாதனின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தார்கள்.

"என்னய்யா... ஞானி மாதிரி பேசறான்."

தொலைவிலிருந்து கைகூப்பினார்கள்.

பெரியசாமி விதிர்த்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

கடவுள் நம்பிக்கையும், தனிமையும் ஒன்று. பிரார்த்தனை கொடுக்கிற தனிமை குவைத் கொடுக்கிறது என்ற வாக்கியங்கள் அவனுள் வேகமாக ஓடின.

கடவுளை நோக்கி பிரார்த்தனை பண்றமாதிரி குவைத்துல வாழ்க்கை நடத்து.

ராமனாதன் குரல் காதோரம் மறுபடியும் ஒலித்தது.

அவன் கூட்டத்தைவிட்டு எழுந்து வெளியே போனான். வரண்டாவில் தனியாக உட்கார்ந்து கொண்டான்.

அவன் உட்காருவதை அத்தியப்பனும், லக்ஷ்மி நாராயண னும் பார்த்தார்கள்.

"உடனே புரிஞ்சுப்போகுதுய்யா அந்தப் பையனுக்கு. கெட்டிக்காரனா இருக்கான் இல்ல. பெரிய ஆளா வருவான் பார். தாமோதரன்தான் தேவையில்லாத விரட்டிகிட்டிருக்காரு."

"ச்சு. விடு. அது அவங்க ப்ராப்ளம். அதெல்லாம் தாண்டி அவன் பிரமாதமா வருவான்."

அவர்கள் விருந்து சாப்பிட்டார்கள். லட்சுமிநாராயணன் பெரியசாமியை குரல் கொடுத்துக் கூப்பிட்டு அவன் கையில் தட்டு கொடுத்து அவனையும் சாப்பிடச் சொன்னான்.

யாரோ ஒரு இன்ஜீனியர் அருகே வந்து. "ஸார் இன்ஜீனியரா" என்று பெரியசாமியைக் கேட்க, "இல்ல, இன்ஜீனியருக்கெல் லாம் பாஸ். இன்ஜீனியருக்கெல்லாம் சோறு போடுகிறவர்" என்று லட்சுமிநாராயணன் சொல்ல, கேட்டவர் வாயைப் பொத்திக் கொண்டு போனார்.

எண்ணெய் கம்பெனியின் பெரிய சமையல்காரரின் சமை யல்தான் அந்த விருந்தில் இருந்தது. ஆனால், அத்தனை



ருசியாக இல்லை. சமையல் செய்வதில் ஒரு அலட்சியம் தெரிந்தது. பச்சடியில் உப்பு இல்லை. குப்பியில் உப்பு தூக்கலாக இருந்தது.

"யாருய்யா அவன், நல்ல பொருளையெல்லாம் கெடுத்து வச்சுருக்கான்."

தாமோதரன் உரக்கக் கத்தினார்.

"எல்லாம் சரியாகத்தான் இருக்கு."

இன்னொரு இன்ஜீனியர் பதில் சொன்னான்.

"என்னங்க சரியா இருக்கு."

"நீங்க வண்ணமா ஒரு பையனை உட்காரவச்சு அவன் கையால சோறு சாப்பிடறீங்க. உங்களுக்கு நாக்கு கொழுத்துப் போச்சு. நாங்க தினம் இதைத்தானே சாப்பிடறோம். அதனால எங்களுக்கு சரியாத்தான் இருக்கு."

இன்ஜினீயர் சொல்ல தாமோதரன் வாயடைத்துப் போனான்.

"மொத்த இன்ஜீனியர்ஸுக்கும், பின்னால மிளகாய் வச்சது போல நம்ம பெரியசாமியைப் பார்த்தா எரியுது இல்ல" என்று லட்சுமிநாராயணன் பேசினார்.

அத்தியப்பன் பதில் சொல்லவில்லை.

எரியத்தான் செய்யும் என்று மனதில் நினைத்துக் கொண் டார்.

"என் பேர் மோகன்ராம். நீதானே பெரியசாமி."

ஒரு நாள் பிற்பகல் காரில் ஒரு இளைஞர் வந்திறங்கினார். அவருக்கு லேசாக ஒரு மாறுகண் இருந்தது.

"தெரியும் ஸார். உங்களைப்பத்தி கேள்விப்பட்டிருக்கேன்."

பெரியசாமி கைகூப்பினான்.

"என்னைப்பத்தியா என்னய்யா கேள்விப்பட்டிருக்க."

"நீங்க பெரிய ரைட்டர் ஸார். உங்க கட்டுரை ஒண்ணு படிச் சேன். ரொம்ப நல்லாயிருந்தது. அரசரைப்பற்றி எழுதியிருந்தீங் களே. இன்னொரு ரைட்டர் குவைத்துக்கு வராருன்னு சொல்லி யிருந்தீங்களே. எப்போ ஸார்... வராரு."

"அதான்ப்பா. அந்த விஷயமாத்தான் பார்க்க வந்தேன். ஒரு அம்பது பேர் கூடற ஒரு கூட்டத்துக்கு நீ சமைக்கறியா."

"எனக்கு அவ்ளோ எல்லாம் சமைச்சு பழக்கமில்லையே ஸார். ஏதோ அஞ்சு ஆறு பேருக்கு பண்ணுவேன்."

"ஏம்பா... அஞ்சாறு பேருக்கு பண்ணப்போற நீ. அம்பது பேருக்கு பண்ணக்கூடாதா. கொஞ்சம் பார்த்து செய்யக் கூடாதா."

"ஏன்... ஸார் என்னை திருப்பறீங்க. அவரு பெரியவரு பண்ணுவாரே."

"அவர் சமையலே நல்லாயில்லையா. அசிங்கமா இருக்கு. அப்படியொரு சமையலை வரவங்களுக்குப் போட்டா நம்மள பத்தி அசிங்கமா நினைப்பாங்க. நான், என் ஒய்ஃப் இன்னொரு சூப்பரவைசர், அவருடைய ஒய்ஃப் நாலுபேர் உனக்கு உதவி செய்யறோம். நீ கொஞ்சம் ஏத்தி இறக்கி செய்வியா. பக்குவம் கொண்ணாந்து வச்சுட்டா போதும். என் வொய்ஃப் நல்லா சமைப்பாங்க. அவங்களும் இதேமாதிரி அம்பது பேருக்கு எப்படி சமைக்கறதுன்னு பயப்படறாங்க."

"ஸார். அதுக்கு பாத்திரம் இருக்குமா."

"இருக்கு. கம்பெனிலேர்ந்து நான் கொண்டு வந்துடறேன்."

"பெரியவரு ஏதாவது சொல்ல மாட்டாரா."

"அவரு என்னய்யா சொல்றது. உனக்கும் அவருக்கும் சம்மந்தமேயில்லையே."

"நீ ஏண்டா சமைக்கறேன்னு என்னை கேட்டாக்கா."

"அப்படித்தாண்டா சமைப்பேன்னு சொல்லிடு."

"தாமோதரன் ஸார்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுடணுமே."

"தாமோதரன் ஸார்கிட்ட பேசாத உங்கிட்ட பேசுவேனா. தாமோதரன், அத்தியப்பன், லட்சுமிநாராயணன் மூணு பேர் கிட்டயும் பேசிட்டேன். மூணு பேரும் இதுதான் நல்ல விஷயம். எங்களுக்கும் சாப்பாடு போடு அப்படின்னு சொன்னாங்க. அம்பது பேர்லேர்ந்து அறுவது பேர். நீ கொஞ்சம் வந்து உதவி பண்ணணுமே."



"அவங்க சரின்னு சொல்லிட்டாக்கா நான் பண்ணுவேன் ஸார். ஒண்ணும் பிரச்சினையே இல்லை. என்னிக்கு ஸார்."

"வர வெள்ளிக்கிழமை, இல்ல அதுக்கு அடுத்த வெள்ளிக் கிழமை."

"பண்ணிடலாம் ஸார்."

"என்ன பண்ணலாம்."

அவர்கள் உட்கார்ந்து பேசினார்கள். ஒரு மெனு தயாரித் தார்கள்.

"ஸார் ஒரு கேள்வி கேட்கறேன். இந்த ரைட்டர் ரொம்ப முக்கியமானவரா. நிறைய விஷயங்கள் செய்யறீங்களே. விருந்து போடறீங்க. பாட்டுப்போட்டி, டான்ஸ் போட்டி, பேச்சுப் போட்டி, எல்லாம் நடக்குதுன்றீங்க. எதுக்கு ஸார் இவ்வளவு பெரிய விழா."

"இதெல்லாம் நடக்காட்டி செத்துப்போயிடுவோம்யா. ஒரு மாசத்துக்கு ஒரு தடவை இந்த மாதிரி கும்பலா கூடி விழா நடத்தினாதான் வீடு பத்தின ஞாபகம் அறுந்து போகாத பசுமையா இருக்கும். நம்ம ஊர்பத்தினா ஞாபகம் பச்சனு இருக்கும். வந்து பாரேன் எவ்ளோ ஜாலியா இருக்கும்னு."

மோகன்ராம் குரலில் குதூகலம் வழிந்தது.

"இதுக்கு முன்னாடி நடத்தியிருக்கீங்களா ஸார்."

"மூணு நடத்திட்டேன்யா. போனதடவை ஆஹா... ஒஹோன்னு இருந்தது. ஆனா சாப்பாடுதான் சொதப்பிடுச்சு."

"அம்பதுபேர் போறுமா ஸார். நிறைய பேர் இருப்பாங்க போலிருக்கே."

"ரெண்டு நாள் விழா. ஒருநாள் கார்த்தால ஆரம்பிச்சு மத்தியானம் நீ செய்துதர. ஈவ்னிங் டின்னர் ஒரு ஹோட்டல்ல நடத்தறோம். அதுக்கப்புறம் மறுநாள் பெரிய சமையல்காரரை வரவழைச்சு நிறைய பேர் கூப்பிட்டு விருந்து. அது இலக்கிய ஆர்வலர்கள் மட்டும் கூடற கூட்டம். அங்க சமையல் நல்லா யிருக்கணும்னு தான் உன்னை கூப்பிட்டது."

"பிச்சு உதறிடலாம் ஸார். கவலைப்படாதீங்க. முதல் நாளே மைசூர்பாக்கு பண்ணி டப்பால அடுக்கி வச்சுடறேன் ஸார். எல்லாத்துக்கும் நம்ம தாமோதரன் சமையலறையையா உபயோகப்படுத்தறோம். உங்க இடத்துக்கு வந்துட்டா நல்லாயிருக்குமில்ல."

"வந்துடுப்பா. அது எனக்கும் சௌகரியம்."

மோகன்ராம் வீடு சிறியதாய் அழகாய் இருந்தது.

அவர் மனைவி பிரியமாய் வரவேற்றார்.

வாடா தம்பி என்று சொல்லும்போது அக்கா ஞாபகம் வந்தது.

காஸ் அடுப்புக்கு முன்னால் கண்மூடி நின்று திருவேற்காடு மாரியம்மனை தொழுதுவிட்டு அடுப்பு மூட்டினான்.

ஒரே நாளில் மூன்று வித பட்சணங்கள் செய்து முடித்தான். மறுநாள் காலை என்ன வேண்டும் என்பதை லிஸ்ட் எழுதிக் கொடுத்தான். ஸ்வீட்ஸ் முதற்கொண்டு மோகன்ராம் வீட்டிலேயே தயாரித்து அனுப்புவதாக திட்டமிருந்தது. வேன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

"பெரியசாமி எழுவது பேர் வந்துட்டாங்கய்யா. நீ என்ன பண்ணப்போற."

"பண்ணிடறேன் ஸார்."

அரிசி அளவையும், காய்கறி அளவையும் பெரிதாக்கினான். வெஜிடபிள் பிரியாணி, பிஸிபேளா ஹுளி, குழாய்ப்புட்டு, புளிசாதம் என்று அனுப்பினான்.

"யாருய்யா அது பிரியாணி போட்டது. அற்புதம் பண்ணியிருக்காங்களே. யோவ் இன்னும் கொஞ்சம் போடுய்யா."

கேட்டுக்கேட்டு வாங்கி சாப்பிட்டார்கள்.

பெரியசாமி கையைத் துடைத்துக் கொண்டு ஆவலாக அவர்களை பார்த்தபடி இருந்தான். குழாய்ப்புட்டு சண்டையே நடந்தது.



உழைக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி உயரமான அந்த எழுத்தாளர் நிதானமாகப் பேசினார். எல்லோரும் கைதட்டினார்கள். அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

லட்சுமிநாராயணனும், அத்தியப்பனும் தனியே வந்து அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்கள்.

"வொண்டர்ஃபுல். இப்படி யாரும் சாப்பிட்டதில்லை. டேய்... இந்த விஷயத்தை கெட்டியா பிடிச்சுக்கோ. உனக்கு குவைத்தல தாண்டா பெரிய ஃபியூச்சர் இருக்கு."

லட்சுமிநாரயணன் காதோரம் சொல்லிவிட்டுப் போனார்.

அவனுக்கு நிறைவாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

கேட்டதைவிட அதிகமான பணம் மோகன்ராம் கொடுத்தார்.

அம்மாவுக்கு, அக்காவுக்கு இந்தப் புடவைகளை கொடு என்று மோகன்ராம் மனைவி மூன்று புடவைகள் கவரில் போட்டுக் கொடுத்தார்.

அந்தப் பரிசு வாங்கும்போது அவனுக்கு கண்ணில் ஜலம் துளிர்த்து விட்டது.

அவன் அவர்காலில் விழுந்து, "என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க அக்கா" என்று சொன்னான்.

அவள், தலையில் கை வைத்து மனப்பூர்வமாக அவனை ஆசீர்வதித்தாள்.

"எங்க வீட்டுக்காரர் இருக்கற வேலையை விட்டுவிட்டு இந்த வேலையையும் இழுத்து போட்டுகிட்டு லோலோன்னு சுத்தறாரேன்னு அப்பப்போ வருத்தமா இருக்கும். ஆனா, ஒவ்வொரு விழாவையும் அவர் சக்ஸஸ்ஃபுல்லா முடிக்கிறபோது எனக்கும் சந்தோஷமா இருக்கும். இந்த குவைத் முழுக்க அவருக்குத் தெரியாதவங்களே கிடையாது. மோகன்ராமனா அத்தனை பேருக்குத் தெரியும். இந்தியாவுல இருக்கற எல்லா தமிழ் பத்திரிகையிலும் அவர் பேர் வந்துடுச்சு. எல்லாம் எனக்குப் பெருமை. இத்தனை தூரம் கடல் கடந்து இந்தப் பாலைவனத்துல இருந்தபோது அவர் தன்னுடைய எழுத்தை விடலை. தன்னுடைய தமிழ் பணியை விடலைங்கறது எனக்கு

ரொம்பசந்தோஷம். டேய்.. வேற விசேஷத்துக்கும் வாடா. வந்து போய்கிட்டிருடா."

"நிஜமா வரேன்க்கா."

அவன் விடைபெற்றுக் கொண்டு வந்தான்.

மறுநாள் பெரியவரின் சமையலை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்க அவர் இவன் சமையலை கேள்விப்பட்டு விட்டு மிக கவனத்தோடு விஷயங்களை தயாரித்திருந்தார். அன்றைய சமையலும் மிக நன்றாக இருந்தது.

"சபாஷ்... சரியான போட்டி" என்று சொல்லிக் கொண்டே விருந்தினர்கள் வயிறார சாப்பிட்டார்கள்.

தமிழ் இலக்கிய மாமன்றத்தின் சார்பாக பெரிய சமையற் காரருக்கும், சிறிய சமையற்காரர் பெரியசாமிக்கும் பாராட்டுப் பத்திரங்களும், கண்ணாடி பெட்டிக்குள் வைத்த குவைத் டவரும் பரிசாக கொடுக்கப்பட்டன.

"டேய்... போய் ராமனாதன்கிட்ட என்னைப்பத்தி ஒரு சர்டி பிகேட் கொடுங்க சாமின்னு கேளு. அவர் கொடுத்தா அதுக்கு ரொம்ப மதிப்பு."

லட்சுமிநாராயணன் காதோரம் சொல்ல, அவன் ராமனாத னிடம் போய் கைகட்டி தன் சமையல் பற்றியும், தன் வேலை பற்றியும், தன் நடத்தைப் பற்றியும் ஒரு கடிதம் வேண்டுமென்று கேட்டான்.

"இப்படி கொடுக்கறது பழக்கமில்லையே, என்ன திடீர்னு கேட்கற."

"ஒரு வேளை... நான் துபாய்க்கு போகலாம்னு இருக்கேன் ஸார். அப்படி நான் துபாய்க்கு போனா இது எனக்கு மரியாதை கொடுக்கும் ஸார்."

"அப்படியா. சாயந்தரம் வா."

மிக அருமையான கடிதம் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். பெரியசாமி நாணயமானவன் என்ற வாக்கியம் விவரம் விதம் விதமாக அதில் சொல்லப்பட்டிருந்தது.



பெரியசாமி அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து, கொண்டு வந்திருந்த கேசரி டிபன்பாக்ஸை அவரிடம் கொடுத்தான்.

"அமெரிக்காவுக்கு கூப்பிட்டா போவியாப்பா" மெல்ல ராமனாதன் கேட்டார்.

"இல்லை ஸார்."

"ஏம்பா... இதைவிட அங்க சம்பளம் ஜாஸ்தி."

"இல்லை ஸார். ரொம்ப தொலைவு. அம்மாவுக்கு உடல் சரி யில்லைன்னா அஞ்சு மணிநேரத்துல மெட்ராஸ்ல இருக்கலாம். அமெரிக்காவுக்கு போயிட்டோம்னா ஒரு நாள் முழுக்க ஓடியாரணும் ஸார். அது இப்போதைக்கு வேணாம் ஸார். இங்க செட்டில் ஆயிட்டபிறகு அங்க போறதப்பத்தி யோசனை பண்ணலாம்."

"நல்லது. உங்கம்மாவ இங்க அழைச்சுண்டு வந்து டேண்டா."

"அப்படியா ஸார் சொலறீங்க."

"ஆமாம், உனக்கு கூடமாட இருப்பாங்க இல்ல."

"நானே ஒருத்தர் வீட்ல இருக்கேன். என் கூட இன்னொருத் தரை எப்படி ஸார் சேர்த்துக்கறது."

"ஐய்யய்ய... எத்தனை நாளைக்கு லட்சுமிநாராயணன் வீட்ல இருப்ப. நீ தனி வீடு பார்க்கணும்டா. லட்சுமிநாராயண னுக்கு கல்யாணம் ஆயிடுச்சுன்னா, தாமோதரனுக்கு கல்யா ணம் ஆயிடுச்சுன்னா நீ மெல்ல நகர்ந்துடலாம். அத்தியப்பன் வொய்ஃப் அடுத்த மாசம் வராங்க. அவர் வேற வீடு போகப் போறார். அப்ப என்ன பண்ணுவ. வரவன் போறவனுக்கெல்லாம் சமைச்சுண்டு இருக்காத. நீ தனியா கடை போடு."

"கடைன்னா."

"ஹோட்டல்டா."

"ஸார். இந்த இடத்துல நான் ஹோட்டல் வைக்க முடியுமா."

"நான் ஏற்பாடு பண்ணித்தரேன். நீ ஏன் கவலைப்படற. பர்மிஷன் நான் வாங்கித்தரேன். கொஞ்சம் அங்கங்க கடன்

வாங்கி கடை ஆரம்பி. ரெண்டு பேரை வேலைக்கு சேர்த்துக்கோ. இப்போ டிபன்பாக்ஸ் அனுப்பறியே அதுமாதிரி. நூறு டிபன் பாக்ஸ் அனுப்பு. அள்ளிண்டு போயிடும். ஆரம்பிக்கற போது காபி, டீ, தோசை, இட்லி, பூரி, அஞ்சு அயிட்டம் போறும். இதுக்கு கூட்டம் சாய்ஞ்சுடுண்டா. உன்னால சமாளிக்க முடியாது."

"வெள்ளிக்கிழமை மட்டும்தானே ஸார் இருக்கும். மத்த நாள்ல."

"ஆறு மணிக்கு இவங்களெல்லாம் என்ன பண்றாங்க சாய்ந்தரம் வந்துருவாங்க. காலையில எல்லாரும் போயிடுவாங்க. காலையில் டிபன் பாக்ஸ் அனுப்பு. சாயந்தரம் ஹோட்டல் நடத்து. நிம்மதியா போயிடும்டா."

"லாபம் வருமா ஸார்."

"கன்னாபின்னான்னு வரும். ஹோட்டல்தாண்டா நூறு சதவீதம் லாபம். குவைத்ல ஹோட்டல் வச்சா இருநூறு சதவீதம் லாபம். அதாவது ரெண்டு ரூபாய்க்கு கிச்சடி பண்ணி ஆறு ரூபாய்க்கு விக்கலாம். பத்து ரூபாய்க்கு தயிர் சாதம் பண்ணி முப்பது ரூபாய்க்கு விக்கலாம்."

அத்தியப்பனுக்கு தனி குவார்ட்டஸ் கிடைத்தது.

அவர் அவனோடு போய் அதை நல்லபடியாக அலங்கரித்தார். கம்பெனி கொடுத்த நாற்காலிகளையே அழகாக வைத்தார்.

டி.வி., வீடியோ, மீன்தொட்டி, டைனிங் டேபிள் என்று வாங்கி போட்டார். கம்பெனியின் செலவில் கட்டில்கள் கொண்டு வந்து இறக்கினார். பச்சைநிற கார்ப்பெட் பரப்பினார்.

வீடு மிகச்சுத்தமாக இருந்தது. வீடு முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்தது.

அத்தியப்பன் மனைவி வந்ததும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"ரொம்ப நல்லாயிருக்கு. நீதான் வந்து உதவி செய்தியாமே. நீதான் சமைச்சுப்போட்டியாமே. பெரியசாமி.. பெரியசாமின்னு ஒவ்வொரு தடவை பேசறபோதும் உன்னைப்பத்தித்தான்



சொல்வாங்க. இந்தா உங்கம்மா போட்டோ. தாமோதரன் வீட்ல கொடுத்து அனுப்பினாங்க இதுல விபூதி, குங்குமம் திருவேற்காடுது இருக்கு. உங்கம்மா போயிட்டு வந்து கொடுத்ததாம்."

அவன் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டான். நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

அவர்களோடு சிரித்துப் பேசினான்.

அத்தியப்பன் மகனைக் கொஞ்சினான்.

"ஒரு தடவை என் கூட சூப்பர் மார்க்கெட்டுக்கு வாங்க. அதை சுத்தி காமிக்கறேன். அப்புறம் நீங்களா போயிடலாம்" என்று அத்தியப்பன் மனைவிக்கு ஆதரவாக பேசினான்.

அவர்களோடு சூப்பர் மார்க்கெட் சுற்றி வந்தான். எப்படி வாங்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டினான். வீட்டிற்கு வந்து பொருட்களை அடுக்கிக் கொடுத்தான்.

அத்தியப்பன் மனைவி தங்கத்தகட்டில் வரையப்பட்ட ஒரு சிறிய விநாயகர் படம் கொடுத்தாள்.

"இதை வச்சுக்கோ ரொம்ப நல்லது. வாழ்க்கையில பெருசா முன்னேறலாம்" என்று ஆசீர்வாதம் செய்தாள்.

லட்சுமிநாராயணனுக்கு திருமணமாயிற்று.

பெரியசாமியோடு டைலர் கடைக்குப்போய், அற்புதமாக கோட், சூட், இரண்டு தைத்துக் கொண்டு மிக கம்பீரமாக கடையில் போட்டுக் கொண்டு உலாவினான்.

"எப்படிடா இருக்கு. எப்படிடா இருக்கு" என்று கேட்டான்.

"ஸார். ஹீரோ மாதிரி இருக்கீங்க ஸார். நீங்க பேசாம சினிமாவுல நடிக்கப்போங்க ஸார். தமிழ்நாடு விட்டு வராதீங்க ஸார். எதுக்கு ஸார் இன்ஜினீயரிங்" என்று சொல்ல லட்சுமிநாராயணனுக்கு முகத்தில் சந்தோஷம் பொங்கி வழிந்தது.

"என்னால நடிக்க முடியாதுடா. இன்ஜினீயராகத்தான் இருக்க முடியும். எனக்கு இது போறும்."

"ஏன் ஸார் அப்படி சொல்றீங்க."

"ஏமாத்த வேணாம். பொய் சொல்ல வேணாம். போட்டி போட வேணாம். நாம உழைச்சா நமக்கு காசு. சினிமாவெல்லாம் போய் நம்மால முன்னேற முடியுமா. அதெல்லாம் கடினமான இடம். இது சுகம்டா."

"நீங்கதான் ஸார் முதல் ஆளு. இதை சுகம்னு சொல்றீங்க. எல்லாரும் வளைகுடாப் பகுதியை நாய்மாதிரி கஷ்டப்பட வேண்டிய இடம்னு சொல்றாங்க. நீங்க ஒருத்தர்தான் ஸார் இதை சுகம்னு சொல்றீங்க."

"கஷ்டப்படாம காசு சம்பாதிக்கக் கூடாதுடா. அது மூஞ்சியில அடிச்சுடும். ஊர்ல சம்பாதிக்கறதை விட இங்க ஆறு மடங்கு சம்பளம் அதிகம். ராமனாதன் ஸார் சொன்னது ஞாபகமில்லையா. ஒரு அளவுக்கு மேல காசுக்கு மரியாதை இல்லை. அந்த அளவு சம்பாதிக்கணும்."

"அது என்ன அளவு."

"நமக்குத் தெரியும். நம்ம மனசுக்குத் தெரியும். எனக்கு இங்க கஷ்டப்படறதுல சந்தோஷம் இருக்குடா. அது என் கம்பெனி. என் ஆயில் கம்பெனி. அங்க ஒரு பிரச்சினை வந்தாலும் என் பிரச்சினை. அப்படித்தான் நான் வேலை செய்யறேன். உனக்கு தெரியுமா. எனக்கு சம்பளம் கூடபோட்டுக் கொடுத்திருக்காங்க."

"கேள்விபட்டேன் ஸார். தாமோதரன் ஸார், அத்தியப்பன் ஸார் எல்லோருக்கும் சம்பளம் ஜாஸ்தி ஆயிடுச்சாமே."

"பெருமிதமா தராண்டா. அத்தியப்பன், எனக்கெல்லாம் குவார்ட்டர்ஸ் இலவசம். கார் இலவசம், பெட்ரோல் இலவசம். யாருடா தருவா. இதுக்கு கஷ்டப்பட்டு உழைச்சா தப்பா."

"அப்போ நீங்களும் கல்யாணம் பண்ணிகிட்டு வந்துட்டீங்கன்னா நான் என்ன ஸார் பண்ணுவேன்."

"உன் இஷ்டம். நீ என்ன வேணா பண்ணு. நான் தாமோதரன் கிட்ட சொல்லிட்டேன். தாமோதரன் இங்க இருக்கப்போறதில்லையாம். அவருக்கு சிங்கப்பூர்ல ஆஃபர் வந்திருக்கு. வளைகுடாவைவிட சிங்கப்பூர் இன்னும் சௌகரியமான இடம்னு அவர் நினைக்கறார். கிட்டத்தட்ட இதே சம்பளத்தை வாங்கப் போறார். உன்னை அங்க கூப்பிட்டாலும் கூப்பிடுவார்."



"ஸார்... சிங்கப்பூருக்கு போகலாம்னு சொல்றீங்களா."

"உன் இஷ்டம். எங்க போனாலும் காசு சம்பாதிக்க கத்துக்கோ. கஷ்டப்பட்டு உழைக்க கத்துக்கோ. உங்கிட்ட உழைப்பு இருக்குடா. சிங்கப்பூர்ல நிறைய தமிழர்கள். நிறைய போட்டி. இடம் சின்னது. குவைத்துல இன்னும் எத்தனை பேர் வந்தாலும் தாங்கும்டா. தமிழர்கள் வந்துகிட்டே தான் இருப்பாங்க. சிங்கப்பூர் மூணு மணி நேர பயணம். குவைத் அஞ்சு மணி நேர பயணம். அவ்ளோதான்.

சிங்கப்பூர்ல உன்கூட போட்டியா உழைக்கறதுக்கு சீனர்கள் தயாரா இருக்காங்க. இந்தோனேஷியர்கள் தயாரா இருக்காங்க. ஆனால், இங்க போட்டியே கிடையாது. இங்க சீனாக்காரன் இல்லை. இங்க ஈஸியா ஜெயிக்கலாம். சிங்கப்பூர்ல ஜெயிக்கறது கஷ்டம். ஆனா, சிங்கப்பூர்ல நல்ல க்ளைமேட். வெய்யிலுக்கு பயந்தா சிங்கப்பூருக்கு போயிடலாம். வெய்யிலுக்கு பயமில்லைன்னா இங்கேயே இருக்கலாம்."

"இங்க யார் வீட்லதான் வேலை செய்யறது."

"இனிமே ஏண்டா... யார் வீட்ல வேலை செய்யணும். எங்கேயாவது கடை போடு."

"இதான் ராமனாதன் ஸாரும் சொன்னாரு."

"எங்கிட்டயும் சொன்னார். நல்ல பையனா இருக்கான். அவனை ஒரு நல்ல இடத்துக்கு கொண்டு வந்திருங்கன்னார். உனக்கு ஏதாவது கடன் வேணும்னா சொல்லு நான் தரேன். நானும், அத்தியப்பனும் சேர்ந்து கடன் தரோம். ராமனாதன் ஸாரும் தருவார். எந்த இடம் நல்லா டெவலப் ஆகுமோ அந்த இடத்துல ஒரு கடை போடு.

அத்தியப்பன் ஸார், இருக்காரே அந்த ஏரியா நல்ல டெவலப் ஆகற இடம். அல்லது எனக்கொரு குவார்ட்டஸ் கொடுக்கப் போறாங்களே அந்த இடமும் டெவலப்பான இடம். ஏதாவது இடத்துல இருந்துக்க. அம்பதடிக்கு அம்பதடி ஹோட்டல் போறும். ஜம்முனு வந்துடலாம்."

"அம்மாவை கூட்டிட்டு வான்னாரு."

"ஆமாண்டா... அம்மாவை கூட்டிண்டு வந்துடு. ஏன் உங்கப்பா கூட வரலாம். குடிக்கறார்னுதானே கம்ப்ளெயின்ட். இங்க கூட்டிண்டு வந்துடு. குடிச்சா போலீஸ்காரன் அடிப் பான்னு சொல்லு. குடிக்கறதை தானா விட்ருவார்."

அவன் லட்சுமிநாராயணனை விமானத்தில் அனுப்பி வைத் தான்.

"மோகன்ராம் ஸார், லட்சுமிநாராயணன் ஸார் கடை போடுன்னு சொல்றாரு. ராமனாதன் ஸாரும் உதவி செய்ய றேன்றாரு. என்ன ஸார் பண்ணலாம்."

"பிரமாதமான விஷயம். போட்றா. எனக்குத் தெரிஞ்ச ஒரு குவைத்தி இங்க பெருசா ஒரு பில்டிங்க கட்டறான். இப்பவே போய் அட்வான்ஸ் கொடுக்கலாம் வறியா."

"எங்க ஸார்."

"வா. இடம் காமிக்கறேன்."

ஒரு பழைய கட்டிடத்தை புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். முதல்மாடி காலியாக இருந்தது. கீழே நகைக் கடை இருந்தது. மேலே அலுவலகங்கள் இருந்தன. ஹோட்டல் வைக்க என்று சொன்னவுடனே அந்தக் குவைத்தி முகத்தைச் சொறிந்தான்.

சூடு வராது, புகைபோக்கி வழியாக புகை வெளியே வர, எக்ஸாஸ்ட் ஃபேன் வைப்பதாக மோகன்ராம் சொன்னதும் சரி என்று ஒத்துக் கொண்டான்.

அந்த நிபந்தனையோடு பத்திரத்தில் பெரியசாமி கை யெழுத்துப் போட்டு அட்வான்ஸ் தொகை கொடுத்தான். இன்னும் அட்வான்ஸ் தொகைக்கு அத்தியப்பனிடம் ஓடினான். ராமனாதனிடம் கெஞ்சினான். வாங்கிவந்து மறுபடியும் மறு நாளே அந்த குவைத்தியிடம் நீட்டினான்.

"பிரியாணி பண்ணிகிட்டு வாய்யா. இந்தியன் பிரியாணி" என்று கேட்க அந்த குவைத்தி வீட்டு வாசலில் அடுப்பு ஏற்றி ஒயிட் மெட்டல் பானை வைத்து இருபது பேருக்கு மட்டன் பிரியாணி செய்து கொடுத்தான். மசாலாவை தூக்கலாகப் போட்டு காரத்தை குறைவாகப் போட்டான். கறிக்கலவையை யும், சாதத்தையும் நெய்விட்டு சரியாகக் கிளறினான். ஒரு தட்டில் வைத்து அழுத்தி ஸ்பூன் வைத்து மேலே துணிபோட்டு குவைத்தியிடம் காட்டினான்.



குவைத்தி முகர்ந்து பார்த்து விட்டு மிகச் சந்தோஷமானான்.

அவன் வீட்டிற்குள் பானை போயிற்று.

வாசலில் முகம் கழுவி உட்கார்ந்தவனை அரைமணி நேரம் கழித்து உள்ளே கூப்பிட்டு காசு கொடுத்தார்கள். சட்டை துணியும், பேண்டுத் துணியும் கொடுத்தார்கள்.

பெரியசாமிக்கு செலவில்லாமல் அந்தக் குவைத்தியே அந்தக் கட்டிடத்தை ஹோட்டலாக மாற்றிக் கொடுத்தான்.

கொண்டல் ராஜ் என்ற தமிழர் மிக அழகாக அம்மா உணவ கம், அம்மா ரெஸ்டாரண்ட் என்று தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதிக் கொடுக்க லட்சுமிநாராயணனும் அவன் மனைவியும் போர்டைத் திறந்து வைத்தார்கள். அத்தியப்பன் கடையைத் திறந்து வைத்தார். தாமோதரன் அடுப்பை மூட்டினார்.

கடை ஓனரான குவைத்திக்கு முதல் தட்டு இட்லியும், சாம்பாரும், சட்னியும் கொடுக்கப்பட்டது.

அவன் வாங்கி ருசித்து விட்டு கைகுலுக்கிப் பாராட்டினான்.

நூறு தினார் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

அந்த வெள்ளிக்கிழமை கூட்டம் நிறைந்தது. சிலரை எதுவும் இல்லையென்று வெறும் டீ மட்டுமே கொடுத்து திருப்பி அனுப்பும்படி ஆயிற்று.

அடுத்த வெள்ளிக்கிழமைக்கு பெரியசாமி தயாராக இருந் தான். பட்சணங்கள் உடனடியாக விற்றுத் தீர்ந்தன. பிரியாணி பத்தே நிமிடத்தில் தீர்ந்தது. இட்லியும், தோசையும் இடையறாது நகர்ந்து கொண்டிருந்தன.

அம்மா அடுத்த மாதம் அப்பாவோடு வந்து இறங்கினாள்.

லட்சுமிநாராயணன் தான் சொந்தமாக வாங்கிய வேனில் அவர்களை அழைத்து வந்தான்.

அம்மா அவனை கட்டித் தழுவி கொஞ்சினாள்.

"ஏண்டா... ஊருக்கு வரவேயில்லை."

"நீதான் வந்துட்டியே. நான் எதுக்கு ஊருக்கு வரணும்."

"எப்போடா நாம ஊருக்குப் போவோம்."

"ஏன்."

"அங்கேபோய் சொல்ல வேணாமா. என் புள்ள நிறைய சம்பாதிக்கிறான். நல்லா சம்பாதிக்கிறான். இதுதான் என் புள்ள. இவனுக்கு பொண்ணு கொடுங்கன்னு சொல்ல வேணாமா. அங்க இருந்தாதானடா மதிப்பு."

"அப்போ இந்த ஊர் பிடிக்கலையா."

"இங்க இருக்கலாம். கொஞ்சநாள் இருந்துட்டு நாங்க போயிடறோம்."

"அப்புறம்."

"உனக்கு பொண்ணு பார்த்து அனுப்பறேன். அந்தப் பொண்ணோட நீ ஹோட்டல் நடத்து. நான் அங்க இருக்கேன். அங்கிருந்து என் புள்ள நிறைய சம்பாதிக்கறான்னு எல்லார் கிட்டயும் சொல்லிகிட்டிருக்கேன். அங்க வீடு வாங்கிடேண்டா. நீ அப்புறம் வந்து இருக்கறதுக்கு நான் வசதி பண்ணித்தர வேண்டாமா."

அம்மா எதிர்காலம் பற்றி பேசினாள்.

எதுக்கு வளைகுடா பகுதிக்கு போகக் கூடாதுன்றே. சொந்த ஊர்லே சாப்பாடு கடை நடத்தியோ, வெத்தலைப்பாக்கு கடை வச்சோ நல்லபடியா பிழைக்கலாமேன்ற. இதோ பெரியசாமி யைப்பார். வெளியூருக்கு வந்து வெத்தலைப் பாக்கு கடை, சாப்பாட்டு கடை, எல்லாம் வச்சிட்டான். மெல்ல மெல்ல மளிகைக்கடை, துணிக்கடை, நகைக்கடைன்னு வந்துடுவான் பாரேன். வெறுமனே உழைச்சா போதாதுய்யா. எதுல காசு இருக்கு. அப்படின்னு ஒரு மனுஷனுக்குத் தெரியணும். எங்க உழைச்சா அதிகமா காசு சம்பாதிக்க முடியும் அப்படின்னு ஒருத்தனுக்குத் தெரியணும். இடம் வளைகுடா. இங்க வந்தவன் எவனும் கெட்டுப் போனதில்லையா. கெட்டுப் போகணும்னு



நினைச்சு வந்தா எங்கிருந்தாலும் கெட்டுப் போவான். பெரிய சாமி அவங்க அப்பா இப்போ தண்ணி போடறதில்லையாமே. வெறும் வெத்தலைப்பாக்கு புகையிலைதான். ஒழிஞ்சு போகு துன்னு விட்டான். அவர்தான் கூடமாட நின்னு கடையை பார்த் துக்கறாரு. இப்படியும் நான் பேசணும்டா அம்மா கூறினாள்.

"டேய், பெரியசாமி கல்யாணம் பண்ணிக்கடா."

மோகன்ராம் ஒரு நாள் கூறினார்.

"பண்ணிக்கறேன் ஸார்."

"பொண்ணு பார்க்கட்டுமா."

"பாருங்க ஸார்."

"எப்படிப்பட்ட பொண்ணு வேணும்."

"உழைக்கிற பொண்ணு ஸார். உழைக்கிறதுக்கு அஞ்சாத பொண்ணு இருந்தா போதும்."

"உழைக்கிறதுல ஒரு போதை வந்திடுச்சு இல்ல."

"ஆமாம். இனிமே சும்மா இருக்க கூடாது. உழைச்சுக்கிட்டே தான் இருக்கணும். அம்பது அம்பத்தஞ்சு வயசுக்கு ஊருக்குப் போய் அக்காடான்னு இருக்கணும். அதுவரைக்கும் ஓடறதுதான் குறி. ஓடறதுதான் வேலை. மேல.. மேல.. அடுத்து, அடுத்து புதுசு, புதுசா கடை திறக்கறதுதான் என்னுடைய திட்டம்."

"வெத்தலைப் பாக்கு கடை, சாப்பாடு கடை வச்சிட்டு அடுத்தபடியா என்னடா பண்ணப்போற."

"மளிகைக்டை வைக்கப் போறேன். அம்மா மளிகைக் கடைன்னு."

"அம்மான்னா எந்தம்மா. உங்கம்மாவா."

"எங்கம்மா. திருவேற்காட்டம்மா. எல்லா அம்மாவும் தான்."

பெரியசாமி பதில் சொன்னான். கேள்விகேட்ட மோகன்ராம் அவனையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தப்பையனை வச்சு ஒரு கதை எழுதினா என்ன.

மோகன்ராமனுக்கு எண்ணம் வந்தது.

அம்மாவும், பிள்ளையும் ஹோட்டல் வராண்டாவில் காற்றோட்டமாக உட்கார்ந்திருக்க தொலைவே பிறை தோன்றியது.

"அம்மா மூணாம்பிறையம்மா. இதான் துலுக்கருடைய சின்னம்."

"இல்லை. இது நாலாம்பிறை. மூணாம்பிறை இன்னும் மெல்லிசா இருக்கும். அதைப் பார்க்காத."

"ஏன்."

"நாலாம்பிறையைப் பார்த்தா நாய்படாத பாடுபடுவேன்னு சொல்வாங்க. மூணாம்பிறையை பார்த்துட்டுதான் நாலாம்பிறை பார்க்கணும். டப்புனு நாலாம்பிறையை பார்க்கக்கூடாது."

"அடப்போம்மா.. நாய்படாதபாடு நமக்கு நல்லதுதானே கொண்டு வந்தது. அதைப் பார்த்தா என்ன."

மெல்ல கைகூப்பி பிறையை அவன் வணங்கினான்.

பிறை துலுக்கருடைய சின்னம், சிவபெருமானின் தலையில் இருக்கும் சின்னம். அம்பிகையின் நெற்றியில் இருக்கும் சின்னம்.

வளர்பிறை என்பது நம்பிக்கை.

மெல்ல வெளிச்சம் வந்துவிட்டது. இனி பூரணமாய் வெளிச்சம் வரும் என்கிற நம்பிக்கை.

மறுபடியும் அவன் கைகூப்பி பிறையைத் தொழுதான்.

(முற்றும்)

சென்னை மாவட்ட கிளை நூலகம் 37680 5469872 கொளத்தூர், சென்னை - 99.